




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:79 | 04-10-2025 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

04.10.2025 புரட்டாசி 18
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று பிற்பகல் 2.38 வரை துவாதசி பின்பு திரயோதசி.

நட்சத்திரம்:
இன்று காலை 7.22 வரை அவிட்டம் பின்பு சதயம்

யோகம் :
இன்று மாலை 6.35 வரை சூலம் பின்பு கண்டம்.

கரணம் :
இன்று அதிகாலை 3.02 வரை பவம் பின்பு பிற்பகல் 2.38 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 7.22 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 7.22 வரை புனர்பூசம் பின்பு பூசம்

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30

இன்று சனி
மஹா பிரதோஷம் நாள்.
ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ராமநாதபுரத்தில் ரூ.176 கோடி முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார் முதல்வர்

**ராமநாதபுரம், அக்.4:**

ராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசு விழாவில் ரூ. 737.88 கோடி செலவிலான 109 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், 150 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 50,752 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.





முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (அக்.3) ராமநாதபுரம் அருகே பேராவூர் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ. 176 கோடியே 59 லட்சம் செலவிலான 109 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.134 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 150 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 50,752 பயனாளிகளுக்கு ரூ.426 கோடியே 83 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள்:

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், ராமேசுவரம், பரமக்குடி, கிளியூர், ஆனந்தூர், கீழதூவல், முதுகுளத்தூர் வடக்கு, முதுகுளத்தூர் தெற்கு, மேலக்கொடுமலூர், நயினார்கோவில், சாயல்குடி ஆகிய இடங்களில் ரூ. 2 கோடியே 37 லட்சத்து 6 ஆயிரம் செலவில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் மற்றும் எஸ்.அண்டக்குடி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் குடியிருப்பு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், நயினார்கோவில், கோவிலாங்குளம், பரமக்குடி ஆகிய இடங்களில் ரூ.10 கோடியே 19 லட்சத்து 50 ஆயிரம் செலவில் சமூக நீதி விடுதிகள்,

பள்ளிக் கல்வித்துறை சார்பில், ரூ. 9 கோடியே 92 லட்சத்து 44 ஆயிரம் செலவில் நபார்டு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், தங்கச்சிமடம், எஸ்.கொடிக்குளம், நம்புதாளை, பெருங்குளம், தொருவளூர், கடலாடி ஆகிய அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் தொண்டி, ஏர்வாடி ஆகிய இடங்களில் கிளை நூலகங்கள்,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், வேதாளை, செம்படையார்குளம், எல்.கருங்குளம், இருவேலி ஆகிய இடங்களில் ரூ.1 கோடியே 35 லட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையம்,

துணை சுகாதார நிலையங்கள், தோட்டக்கலைத் துறை சார்பில், உச்சிப்புளி அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் ரூ.10 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட அரசு தென்னை நாற்றங்கால் பண்ணை மேம்படுத்தும் பணி,

நீர்வளத் துறை சார்பில், பரமக்குடி வட்டம், பி.கொடிக்குளம் ஊராட்சியில் உபரிநீர் கால்வாய் குறுக்கே பகிரணை அமைத்து ரூ. 4 கோடியே 19 லட்சம் செலவில் அகரம் கண்மாய்க்கு புதிய பாசன கால்வாய்,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ரூ. 39 கோடியே 22 லட்சம் செலவில் ராமநாதபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம்,

ராமேசுவரம் மற்றும் பரமக்குடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச் சந்தைகள் மற்றும் அறிவுசார் மையங்கள், ரூ. 96 லட்சம் ரூபாய் செலவில் மண்டபம், பேரூராட்சியில் எருமை தரவை ஊரணி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் ஆகிய பேரூராட்சிகளில் பூங்காக்கள், கூட்டுறவுத் துறை சார்பில், செல்வநாயகபுரம் மற்றும் வெங்கிட்டான்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை ரூ. 61 லட்சத்து 36 ஆயிரம் செலவில் மேம்படுத்தப்பட்ட பல்நோக்கு சேவை மையங்கள்,

ஆதிராவிடர் நலத் துறை சார்பில், பழஞ்சிறை மற்றும் காட்டுபரமக்குடி அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.1 கோடியே 51 லட்சம் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், கழிவறைகள், ஆழ்துளைக் கிணறு,

நெடுஞ்சாலைத்துறை சார்பில், பார்த்திபனூர் கமுதி சாலை முதல் பெரிய பிச்சைப்பனேந்தல் சாலை, முதலூர் சாலை, திருவில்லிபுத்தூர் சிவகாசி விருதுநகர் அருப்புக்கோட்டை திருச்சுழி நரிக்குடி - பார்த்திபனூர் சாலை, தேவிப்பட்டினம் -நயினார்கோவில் பொட்டவயல் சாலை, முதுகுளத்தூர் - வீரசோழன் சாலை ஆகிய இடங்களில் ரூ. 36 கோடியே 83 லட்சத்து 9 ஆயிரம் செலவில் உயர்மட்டப் பாலங்கள், முதுகுளத்தூர் கமுதி சாலை, பார்த்திபனூர் கமுதி அருப்புக்கோட்டை சாலை வரையில் ரூ.56 கோடியே 65 லட்சம் செலவில் புதிய சாலைகள்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், கஞ்சியேந்தல், வாழவந்தாள்புரம், வலங்காபுரி, வெங்கடேஷ்வரா காலனி, கூரியூர் ஆகிய இடங்களில் அங்கன்வாடி மையங்கள், வண்ணாண்குண்டு மற்றும் நைனாமரைக்கான் ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகள்,

வெள்ளாமரிச்சிக்கட்டி, லாந்தை, தலைத்தோப்பு, தெற்குத் தரவை, மருங்கூர், வலசை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் பல்வேறு பணிகள் என ரூ. 12 கோடியே 67 லட்சத்து 87 ஆயிரம் செலவில் 54 முடிவுற்றப் பணிகள் என மொத்தம் ரூ. 176 கோடியே 59 லட்சத்து 32 ஆயிரம் செலவிலான 109 முடிவுற்ற திட்டப் பணிகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## 12 மாவட்டங்களில் இன்று கனமழை வாய்ப்பு




**சென்னை,அக்.4:**

தமிழகத்தில் இன்று (அக்.4) முதல் அக்.9-ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இன்று (அக்.4) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களிலும், அக்டோபர் 5-ம் தேதி நாளை மறுநாள் மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை அடையாறு, வேளச்சேரி, மாதவரம், விமான நிலையம், கொரட்டூர், காசிமேடு, ஆலந்தூர், தண்டையார்பேட்டை, அயப்பாக்கம், கொரட்டூர், திருவள்ளூர் மாவட்டம் ஆவடி, கும்மிடிப்பூண்டியில் தலா 3 செ.மீ மழை, மதுரை தானியமங்களம், கள்ளந்திரி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு உள்ளிட்ட இடங்களில் தலா 2 செ.மீ மழை பதிவாகியுள்ளது என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு: உயர் நீதிமன்றம் அமைத்தது

**கரூர், அக்.4:**





கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீது விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார், விஜய் பிரசாரம் செய்த வாகனம் இடித்து, விபத்து நேரிட்டுள்ளதே, அந்த சம்பவத்தில், இடித்துவிட்டு ஓடியதாக விஜய் வாகனம் மீது ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை. அவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும் என்று நீதிபதி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தொடர்ந்து வாதங்களைக் கேட்ட நீதிமன்றம், கரூர் பலி சம்பவம் குறித்து காவல்துறை ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என உத்தரவிட்டது.

மேலும், அனைத்து ஆவணங்களையும் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் கரூர் காவல்துறையினர் ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தவெக கட்சியினருக்கு கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் சென்னை உயர் நீதிமன்றம், கடும் கூட்டம் சேர்வதை முன்கூட்டியே கணித்திருக்க வேண்டாமா? இந்த இடத்தை காவல்துறைதான் அனுமதித்திருக்கிறது? பிறகு, இங்கு இவ்வளவு கூட்டம் சேரும்போது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? காவல்துறை வேடிக்கைப் பார்க்கிறது, ஆனால் நீதிமன்றம் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருக்காது. விஜய் வந்த வாகனம் ஏன் பறிமுதல் செய்யப்படவில்லை. கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் எல்லாம் சம்பவம் நடந்ததும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். ஒருவர் கூட பொறுப்பேற்கவில்லை. தலைவர்கள் பலரும் தலைமறைவாகிவிட்டார்கள். விஜய் பிரசாரம் செய்த வாகனம் ஏன் இன்னமும் பறிமுதல் செய்யப்படவில்லை.

இது குறித்து அரசு தரப்பில் விளக்கம் கூறியிருப்பதாவது, தவெக தலைவர் விஜய் பிரசாரம் செய்த இதே இடத்தில்தான் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்தார். விஜய் பிரசாரப் பயணத்துக்கு 500க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

காவல்துறை அனுமதி வழங்கிய நேரத்தைக் காட்டிலும் மிகக் கால தாமதமாகவே விஜய் பேச வந்தார். மாலை 3 மணிக்கு விஜய் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், 12 மணி முதலே மக்கள் கூடத் தொடங்கிவிட்டனர். இரவு 7 மணிக்கு மேல்தான் விஜய் அங்கு வந்தார். அரசு மீது மிக எளிதாக குற்றச்சாட்டுகளை சொல்லிவிடலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

கரூர் விவகாரம் தொடர்பாக அஸ்ரா கார்க் ஐஜி வடக்கு தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களை உடனடியாக சிறப்பு புலானய்வு குழுவினரிடம் ஒப்படைக்க கரூர் போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# நான் என்ன தவெகவின் மார்க்கெட்டிங் ஆபிசரா?

**மதுரை,அக்.4:**

தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை விமானம் மூலம் மதுரை வந்தார். மதுரை விமான நிலையத்தில், அவரை மதுரை மாநகர், கிழக்கு மாவட்ட பாஜக தலைவர்கள் மாரிசக்கரவர்த்தி, ராஜசிம்மன் மற்றும் முன்னாள் நிர்வாகி ஹரிகரன் மற்றும் பலர் வரவேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலையிடம் 'பாஜகவின் ஏ டீம் தான் தவெக' என சீமான் கூறியிருப்பது தொடர்பாக செய்தியாளர்கள் கருத்து கேட்டனர்.



அதற்கு பதில் அளித்த அண்ணாமலை, "இதை விஜய்யிடம் கேளுங்கள், அவரை தவிர எல்லோரும் பேசுறாங்க, தவெக கட்சியினரை கேளுங்கள், நான் என்ன தவெகவுக்கு மார்க்கெட்டிங் ஆபீசரா? தைரியம் இருந்தால் என்ன செய்ய வேண்டும். விஜய்யிடம் கேளுங்கள், தவெகவிடம் கேளுங்கள், தவெக செய்தித் தொடர்பாளர்களிடம் கேளுங்கள். சும்மா என்னையே தொந்தரவு செய்கிறீர்கள்.

சென்னையில் கேட்கிறீங்க, மதுரை வந்தாலும் கேட்கிறீங்க. நான் என்ன கருத்து சொல்ல முடியும்? சொல்ல வேண்டிய கருத்துகளை ஏற்கெனவே கூறிவிட்டேன். அதற்கு பிறகும் அவர் சொன்னார், இவர் சொன்னார் கேள்வி எழுப்புகின்றனர். நீங்க யார் கிட்ட கேள்வி கேட்க வேண்டும், சம்பந்தப்பட்ட நபர்களிடம் கேள்வி கேட்க வேண்டும்" என்று அண்ணாமலை காட்டமாக கூறினார்.


பல லட்சம் வாசகர்களை கொண்ட
தமிழ்நாடு இ-பேப்பரை
https://epaper.
tamilnaduepaper.com/
இணையதளத்தில்
படித்து பயன்பெறுங்கள்






# திருக்குறள் குறள்-399

**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர்
கற்றறிந் தார்**



தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கை என்பது ஒரு பயணம்.
நல்லதோ கெட்டதோ
நகர்ந்து கொண்டே
இருங்கள். இன்பம்
வந்தால் ரசித்து
கொண்டே செல்லுங்கள்
துன்பம் வந்தால் சகித்து
கொண்டே செல்லுங்கள்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## நவராத்திரி விழாவில் நடனம் ஆடிய ராலி நடனப் பள்ளி மாணவிகள்



திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவிலில் நவராத்திரி விழாவில் நடனம் ஆடிய ராலி நடனப் பள்ளி மாணவிகள்.

## திருஇருதய ஆண்டவர் தேவாலய புனரமைத்தல் பணியினை முதலமைச்சர் ஸ்டாலின் பார்வை



சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் பகுதியில் அமைந்துள்ள திருஇருதய ஆண்டவர் தேவாலயத்தில், ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைத்தல் பணியினை முதலமைச்சர் ஸ்டாலின் பார்வையிட்டார்.

## தேசிய கைத்தறி கண்காட்சி



சென்னை கலைவாணர் அரங்கில் "தேசிய கைத்தறி கண்காட்சியை அமைச்சர்கள் காந்தி, சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

## மகளிர் கல்லூரியில் கலைப் போட்டிகள்




விருதுநகர் வே.வ.வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரியில் கலைப் போட்டிகள் நடந்தன.

# குலசை கடற்கரையில் தசரா விழா காட்சிகள்










1. மகிஷாசூரனை வதம் செய்ய சிம்ம வாகனத்தில் எழுந்தருளிய முத்தாரம்மன்.
2. மகிஷாசூரனை முத்தாரம்மன் சம்ஹாரம் செய்த காட்சி.
3. சம்ஹாரம் காண கடற்கரையில் திரண்டிருந்த பக்தர்கள்.

# மாணவ மாணவியர்களுக்கு AI (Artificial Intelligence ) தொழில் நுட்பத்துடன் கூடிய அதி நவீன கணினி பயிற்சி தொடக்கவிழா





**திருமயம், அக்.4:** திருமயம் அருகே பனையப்பட்டியில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு AI (Artificial Intelligence ) தொழில் நுட்பத்துடன் கூடிய அதி நவீன கணினி பயிற்சி தொடக்க விழாவை தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே பனையப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள சி. மு. மு. அரு. அலமேலு அருணாச்சலம் அரசு உதவி பெறும் உயர்நிலை பள்ளி செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் மாணவ, மாணவியர்களின் வளர்ச்சிக்காக AI தொழில்நுட்பத்துடன் கூடிய அதிநவீன கணினி பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் சிறப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்த பின்பு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பள்ளியின் தாளாளர், முக்கியஸ்தர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமானவர்கள் உடன் இருந்தனர்.

**பொ. பாண்டித்துரை.**
**திருமயம் செய்தியாளர்**

# நவராத்திரி, விஜயதசமி கொண்டாட்டம்








**இராமநாதபுரம், அக்.4:** இராமநாதபுரம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் உற்சவருக்கும், மூலவருக்கும் சிறப்பு அலங்காரத்தில் சரஸ்வதி அலங்காரத்தில் வெகு சிறப்பாக செய்திருந்தார்கள். மற்றும் ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவருக்கும் போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கப்பட்டன. வெகு சிறப்பாக விஜயதசமி கொண்டாடப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர்**
**செய்தியாளர்**
**நிர்மலா ஸ்ரீதர்**
**திருவண்ணாமலை**

# திமுக சார்பில் 1000-த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு காலை உணவு



வில்லிவாக்கம் பகுதியில் நேற்று திமுக சார்பில் 1000-த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

# கிருஷ்ணகிரியில் வன்னிமரம் வெட்டும் நிகழ்ச்சி



நவராத்திரி விழாவை முன்னிட்டு, கிருஷ்ணகிரியில் வன்னிமரம் வெட்டும் நிகழ்ச்சி நடந்தது

# ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் சிரவண தீபம் ஏற்றி சிறப்பு வழிபாடு

**வேலூர், அக்.4:** வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் உள்ள ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு 2ம் தேதி சிரவண தீபம் ஏற்றி சிறப்பு வழிபாடு நடந்தது.

அர்த்த மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மஹாலஷ்மிக்கு சிறப்பு பூஜை நடந்தது. சிரவண தீபத்தை ஏற்றி பின்பக்கமாக இடமிருந்து வலமாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மஹாலஷ்மி விக்கிரகத்தை மூன்று முறை வலம் வந்து வழிபட்டனர்.

இதைத் தொடர்ந்து பக்தர்களுக்கு கேசரி, பஞ்சாமிர்தம், சுண்டல், சாம்பார் சாதம் ஆகிய பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன. குங்குமம், சந்தனம், மஞ்சள், செந்தூரம் பக்தர்களுக்கு








வழங்கப்பட்டது. ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீகண்ணன் பட்டாச்சாரியார் வெகு விமரிசையாக செய்திருந்தார்.

# 14 கோவில்களில் இருந்து உற்சவமூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் தேர்களில் எழுந்தருளி பவனி



**கிருஷ்ணகிரி, அக்.4:** கிருஷ்ணகிரி பழைய பேட்டை பகுதியில் நடந்த நவராத்திரி விழாவில், லட்சுமி நாராயண சுவாமி கோவில், சீனிவாச பெருமாள் கோவில், அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவில், தஞ்சாவூர் மாரியம்மன் கோவில், கவீஸ்வரர் கோவில், சோமேஸ்வரர் கோவில், காட்டிநாயனப்பள்ளி முருகர் கோவில், புதுப்பேட்டை கிருஷ்ணன் கோவில், பட்டாளம்மன் கோவில், படவட்டம்மாள் கோவில், காமாட்சியம்மன் கோவில், ஞான விநாயகர் கோவில், கல்கத்தா காளி கோவில், மேல்தெரு மாரியம்மன் கோவில் என 14 கோவில்களில் இருந்து உற்சவமூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் தேர்களில் எழுந்தருளி பவனி வந்தனர்.

# சென்னைமெட்ரோ ரயில்களில் கடந்த மாதம் 1 கோடிபேர் பயணம்



**சென்னை, அக். 4:** கடந்த செப்டம்பர் மாதத்தில் 1.01 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது.

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 1,01,46,769 பயணிகள் மெட்ரோ ரயில்களில் பயணித்துள்ளனர் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## குலசேகரன்பட்டினம் தசரா விழாவில் மகிஷா சூரசம்ஹாரம் - 'ஓம் காளி, ஜெய்காளி' கோஷத்துடன் பக்தர்கள் தரிசனம்

**தூத்துக்குடி, அக்.4:**

இந்தியாவில் கர்நாடக மாநிலம் மைசூர் சாமுண்டீஸ்வரி கோயிலுக்கு அடுத்தபடியாக குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயிலில் தசரா திருவிழா மிகவும் விமரிசியையாக நடைபெறும். இக்கோயிலில் இந்த ஆண்டு தசரா திருவிழா கடந்த 23ம் தேதி கொடியேற்றத் துடன் தொடங்கியது. தொடர்ந்து காப்பு கட்டி விரதம் கடைபிடித்த பக்தர்கள் பல்வேறு வேடங்களை அணிந்து கடந்த 10 நாட்களாக வீதி தோறும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தி அம்மனுக்கு காணிக்கை வசூலித்தனர்.

குலசேகரன்பட்டினம் கோயிலில் தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை முத்தாரம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன. இரவு 10 மணிக்கு அம்மன் பல்வேறு திருக்கோலங்களில், பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மகிஷா சூரசம்ஹாரம்: விழாவின் சிகர நிகழ்ச்சியான மகிஷாசூரசம்ஹாரம் நள்ளிரவு கோயில் அருகே உள்ள கடற்கரையில் நடந்தது. இதை காண நேற்று மாலையில் இருந்தே பல்வேறு வாகனங்களில் பக்தர்கள் குலசேகரன் பட்டினத்துக்கு வரத் தொடங்கினர். சுவாமி தரிசனம் செய்ய வசதியாக கோயிலில் பக்தர்கள், தசரா குழுவினர் செல்வதற்கு தனியாக பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குலசேகரன்பட்டினம் புறவழிச் சாலையின் அருகில் உள்ள தருவைகுளம் நேற்று காலை முதலே வாகனங்களால் நிரம்பியது.

தசரா திருவிழாவில் 10-ம் நாளில், காலை 6 மணி, மற்றும் 8 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள், 10.30 மணிக்கு மகா அபிஷேகமும் நடைபெற்றது. இரவு 11 மணிக்கு சிறப்பு அலங்கார பூஜை நடந்தது. இதனை தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு மேல் சிம்ம வாகனத்தில் கடற்கரை சிதம்பரரேஸ்வரர் கோயில் முன்பாக அம்மன் எழுந்தருளி பல்வேறு வேடங்களில் வந்த மகிஷாசூரனை வதம் செய்தார்.

அப்போது கடற்கரையில் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் விண்ணதிர 'தாயே முத்தாரம்மா', 'ஓம் காளி, ஜெய்காளி', 'வெற்றி அம்மனுக்கே' என முழக்கமிட்டு தரிசனம் செய்தனர். பின்னர் கடற்கரை மேடை, சிதம்பரேஸ்வரர் கோயில், அபிஷேக மேடை மற்றும் கோயில் கலையரங்கில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன.

## பயனர்களின் உரையாடலை ஒட்டுக் கேட்கிறதா இன்ஸ்டாகிராம்? - மெட்டா அதிகாரி விளக்கம்

பயனர்களின் உரையாடலை மைக்ரோபோன் மூலம் ஒட்டுக் கேட்கிறதா இன்ஸ்டாகிராம் சமூக வலைதளம் என்பதற்கு அந்த தளத்தின் தலைவர் ஆடம் மொஸேரி விளக்கம் அளித்துள்ளார்.

மெட்டா நிறுவனத்தின் போட்டோ மற்றும் வீடியோ ஷேரிங் சமூக வலைதளம்தான் இன்ஸ்டாகிராம். கடந்த 2010-ல் தொடங்கப்பட்டது. அடுத்த சில ஆண்டுகளில் மெட்டா (அப்போது ஃபேஸ்புக்) அதனை வாங்கியது. இன்று உலக அளவில் மாதந்தோறும் பில்லியன் கணக்கான ஆக்டிவ் பயனர்கள் இன்ஸ்டாகிராம் தளத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இச்சூழலில் இந்த தளத்தை பயன்படுத்தி வரும் பெரும்பாலான பயனர்களுக்கு ஒரு சந்தேகம் எப்போதும் இருப்பது உண்டு. அது என்னவென்றால், இன்ஸ்டா பயனர்கள் தங்களது நண்பர்களுடன் கலந்து பேசியது விளம்பரமாக இன்ஸ்டா ஃபீடில் வருவதுதான். இதனால் பயனர்களின் உரையாடலை போனில் உள்ள மைக்ரோபோன் மூலம் இன்ஸ்டா தளம் ஒட்டுக் கேட்கிறதா என்பதுதான் அந்த ஐயம். அதற்கு இப்போது ஆடம் மொஸேரி வீடியோ மூலம் விளக்கம் கொடுத்துள்ளார்.

"நிச்சயம் பயனர்கள் பேசுவதை மைக்ரோபோன் மூலம் நாங்கள் கேட்பது கிடையாது. அப்படி செய்தால் அது பிரைவசி விதிமுறைகளை மீறியதாக அமையும். மேலும், மைக்ரோபோனை இன்ஸ்டா தளம் பயன்படுத்தினால் உங்களது போனில் நோட்டிபிகேஷன் லைட் ஒளிரும், அதோடு போனின் பேட்டரி சக்தியும் குறையும். அந்த வகையில் எந்த பயனரையும் நாங்கள் ஒட்டுக் கேட்பதில்லை.

அதேநேரத்தில் பயனர்கள் பேசியது குறித்த விளம்பரங்கள் இன்ஸ்டா ஃபீடில் வந்தால் அது தற்செயலானது. வேறு எதுவும் இல்லை. அதற்கான காரணங்கள் பல உள்ளன. உங்கள் இன்ஸ்டா வட்டத்தில் இருப்பவர்கள் அது குறித்து இணையவெளியில் தேடி இருக்கலாம். மேலும், பயனர்கள் எங்கள் தளத்தில் எதை விரும்புகிறார்கள் என்பதை இன்ஸ்டா தளம் கவனிக்கும். அதன் ஊடாகவும் இது அமையும்" என அவர் தெரிவித்துள்ளார்.

## நீலகிரி மாவட்டத்தில் அறிவியலாளர்கள் 50 பேருக்கு பாராட்டு சான்றிதழ், தலா ரூ.50 ஆயிரம் காசோலை



**நீலகிரி, அக்.4:**

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில், 2022 2023 ஆம் ஆண்டிற்கான அறிவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழா, நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமி நாதன் தலைமை வகித்தார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, 24 அறிவியலாளர்களுக்கு விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ.50 ஆயிரம் பெறுமான காசோலைகளை வழங்கினார். அப்போது அவர் பேசும்போது, இந்தியாவிலேயே தமிழ்நாடு உயர்கல்வியில் மிகச்சிறந்த நிலை அடைந்துள்ளது. இந்த பெருமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையே சாரும். சாதாரண கல்வி என்பது வேறு. உயர்கல்வி என்பது வேறு. உயர்கல்வியில் சேர்க்கை பெறும் மாணக்கர் விகிதம் தேசிய அளவில் 28 சதவீதம் என்ற உள்ள போதும் நமது மாநிலம் 50 சதவீதம் தொட்டுள்ளது. 2035ல் 50 சதவீதம் சேர்க்கை விகிதத்தை அடைய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் நமது மாநிலம் தற்போதே அதனை அடைந்து விட்டது என்றால் நமது உயர்கல்வியின் உயர்வை அனைவரும் புரிந்து கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் ஆர்.ராஜவேல், மகளிர் திட்ட இயக்குநர் ஜெயராமன், தமிழ்நாடு அறிவியல் மற்றும் மாநில மன்ற உறுப்பினர் மற்றும் செயலாளர் வின்சென்ட், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், இணைப் பேராசிரியர் ராமசாமி, உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், திட்ட குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், விசாலாட்சி, அரசு கலைக்கல்லூரி முதல்வர்கள் பிராங்ளின் (உதகை), சனில் (குன்னூர்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை மாவட்ட மக்கள் குறைதீர் கூட்டத்தில் 34 பேருக்கு ரூ.3.21 லட்சத்தில் நலத்திட்ட உதவி



**கோவை, அக்.4:**

கோவை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, பட்டாமாறுதல், புதிய குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை பொதுமக்கள் கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவரிடம் அளித்தனர். பொதுமக்களிடமிருந்து இலவச வீடு வேண்டி 44 மனுக்களும், வீட்டுமனைப் பட்டா வேண்டி 151 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 4 மனுக்களும், 177 இதர மனுக்கள் என மொத்தம் 376 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் சம்மந்தப் பட்ட துறை அலுவலர்களிடம் பொது மக்களின் கோரிக்கை மனுக்களைவழங்கிமனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, சமூக நலத்துறை சார்பில் அரசிதழில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட 24 திருநங்கைகளுக்கு ஆணைகளையும், தனியார் தொண்டு நிறுவன நிதியுடன் 5 திருநங்கைகளுக்கு தலா ரூ.5600 மதிப்புள்ள தையல் இயந்திரங்களையும், மாற்றுத்திறனாளி கள் நலத்துறை சார்பில் ரூ.2.93 லட்சம் மதிப்பீட்டில் 5 பேருக்கு செயற்கை கால்களையும் என மொத்தம் 34 பேருக்கு ரூ.3.21 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஷர்மிளா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) வாணிலெட்சுமி ஜெகதம்மாள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கீதா, உதவி இயக்குநர் (நிலஅளவை) சரவணன், மாவட்ட சமூக நல அலுவலர் அம்பிகா, தாட்கோ பொது மேலாளர் மகேஸ்வரி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389




## நலம் தரும் மருத்துவம்

### காலை எழுந்ததும் ஒரு டம்ளர் தண்ணீர் போதும்... எடை குறைந்து, முகம் பளபளக்கும்!

நாம் தினமும் செய்யக்கூடிய சிறிய செயல்களில் ஒன்றுதான் காலை எழுந்ததும் தண்ணீர் குடிப்பது. இந்த சிறிய பழக்கம் நம் உடலுக்கு மிகப்பெரிய நன்மைகளை தருகிறது என்பது பலருக்குத் தெரியாது. தூக்கத்தின்போது நாம் இழந்த நீரை ஈடு செய்யவும், உடலின் செயல்பாடுகளைத் தூண்டவும் காலையில் தண்ணீர் குடிப்பது மிகவும் அவசியம். இந்தப் பதிவில் காலையில் எழுந்ததும் தண்ணீர் குடிப்பதன் மூலம் நமக்குக் கிடைக்கும் பல நன்மைகள் பற்றி விரிவாகக் காண்போம்.

இரவில் நாம் தூங்கும்போது உடலில் நீர்ச்சத்து குறைகிறது. இதனால், காலை எழுந்தவுடன் நாம் தண்ணீர் குடிப்பது உடலின் நீர்ச்சத்து குறைபாட்டை சரி செய்து உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும். மேலும், காலையில் தண்ணீர் குடிப்பது செரிமான மண்டலத்தை செயல்படத் தூண்டுகிறது. இது குடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றி மலச்சிக்கலைத் தடுக்கிறது. இதனால், செரிமான நொதிகளின் உற்பத்தி அதிகரித்து உணவு எளிதாக ஜீரணிக்க உதவுகிறது. நாம் உண்ணும் உணவுகள் மற்றும் சுற்றுச்சூழலில் உள்ள மாசுபாடுகள் காரணமாக



உடலில் நச்சுக்கள் குவிந்துவிடும். காலையில் தண்ணீர் குடிப்பது, சிறுநீரின் மூலம் இந்த நச்சுக்களை வெளியேற்றி உடலை சுத்திகரிக்கிறது. காலையில் தண்ணீர் குடிப்பது உடலின் வளர்ச்சிதை மாற்றத்தை அதிகரித்து, அதிக கலோரி உடலில் எரிக்கப்படுகிறது. இது உடல் எடை இழப்புக்கு உதவி, உடலில் உள்ள செல்களை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவுகிறது. உடல் நீரேற்றமாக இருக்கும்போதுதான் சருமம் பொலிவாக இருக்கும். காலையில் தண்ணீர் குடிப்பது, சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்திருந்து வறட்சி மற்றும் சுருக்கங்களைத் தடுக்கிறது. மேலும், இது சருமத்தில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி முகப்பருக்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறது.

மூளை பெரும்பாலும் நீரால் ஆனது. எனவே, போதிய அளவு தண்ணீர் குடிப்பது மூளை செயல்பாடுகளை சிறப்பாக வைத்திருக்க உதவும். காலையில் எழுந்ததும் தண்ணீர் குடிப்பதால், மூளைக்கு போதுமான நீர் கிடைத்து நினைவாற்றல் மேம்பட உதவும். காலையில் தண்ணீர் குடிப்பதால், ரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்பட்டு, இதய நோய்கள் ஏற்படும் அபாயம் குறைகிறது. இது ரத்தத்தை சுத்திகரித்து இதயத்திற்கு ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கிறது.

காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் ஒன்று அல்லது இரண்டு கிளாஸ் தண்ணீர் குடிக்கலாம். வெதுவெதுப்பான நீர் குடிப்பது குடலுக்கு மிகவும் நல்லது. இத்துடன் எலுமிச்சை சாறு சேர்த்து குடிப்பது வளர்ச்சிதை மாற்றத்தை மேம்படுத்த உதவும்.

திடீரென அதிக அளவு தண்ணீர் குடிக்காமல் படிப்படியாக தண்ணீரின் அளவை அதிகரிப்பது நல்லது. எனவே, இன்று முதல் காலை எழுந்தவுடன் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்கள் ஆரோக்கியத்திற்கு பெருமளவில் உதவும். .

## ஈரோடு மாவட்டத்தில் 81,792 பேருக்கு வீடு தேடி ரேசன் பொருட்கள் விநியோகம்

**ஈரோடு, அக்.4:**

*முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசிய குடிமைப் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் மாநிலம் முழுவதும் சிறப்பாக செயல்படுகிறது.*

*இந்தத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 12-ஆம் தேதி சென்னையில் தொடங்கி வைத்தார். அன்றைய தினம் திட்ட வாகனங்களின் சேவையையும் அவர் கொடியசைத்து தொடங்கினார்.*

*ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 70 வயதுக்கு மேற்பட்ட 79,057 முதியோர்கள், 2,735 மாற்றுத்திறனாளிகள்*



*என மொத்தம் 81,792 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர். 1,263 நியாயவிலைக் கடைகளுடன் இணைந்து, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், மின்னணு எடைத்தராசு மற்றும் பிஓஎஸ் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலமாக வீட்டிலேயே ரேஷன் பொருட்கள் வழங்கப்படுகின்றன.*

*மக்களின் வாழ்வாதாரத்தையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்கான இந்தத் திட்டம், நலிவுற்ற பிரிவினருக்கு பெரும் உதவியாக உள்ளது.*

*சத்தியமங்கலத்தைச் சேர்ந்த பயனாளி பேபி கமலம் கூறும்போது, "முதியோருக்கான சிரமத்தைப் போக்கி, வீட்டிலேயே அத்தியாவசிய பொருட்களை வழங்கும் இந்தத் திட்டம் எங்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக உள்ளது. முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றி" என்றார்.*

*அதேபோல், புதுக்கொத்துக்காடு பகுதியைச் சேர்ந்த நாகம்மாள் கூறும்போது, "நடக்க முடியாமல் சிரமப்பட்ட நிலையில் ரேஷன் வாங்க வரிசையில் நிற்பது கடினமாக இருந்தது.*

*இப்போது பொருட்களை வீட்டிலேயே அளிக்கின்றனர். முதல்வரின் தொலைநோக்கு சிந்தனைக்கு நன்றி" என்றார்.*

# 3 ஓய்வூதியத் திட்டங்களை விரிவாகப் பரிசீலித்தது ககன்தீப் சிங் பேடி குழு : அரசுக்கு இடைக்கால அறிக்கை



**சென்னை, அக்.4:**

பழைய ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட 3 ஓய்வூதியத் திட்டங்களை விரிவாகப் பரிசீலித்த ககன்தீப் சிங் பேடி தலைமையிலான குழு அரசுக்கு அறிக்கையை தாக்கல் செய்தது.

பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து, மாநில அரசின் நிதி நிலையினையும், பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு, நடைமுறைப்படுத்தத்தக்க ஓய்வூதிய முறை குறித்த பரிந்துரையினை ஒன்பது மாதங்களில் அரசிற்கு அளித்திட ககன்தீப் சிங் பேடி, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தலைமையில் மூன்று அதிகாரிகள் கொண்ட குழு கடந்த பிப்ரவரி 2025ல் அரசு அமைத்தது. பின்னர், உரிய அறிக்கையினை செப்டம்பர் 2025-க்குள் அரசிற்கு அளித்திட இக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

அரசுப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை முழுமையாகக் கேட்டு அறிந்து ஆய்வு செய்திட, 194 அரசுப் பணியாளர் சங்கங்களுடன் ஒன்பது சுற்றுகள் கூட்டங்களை நடத்தியுள்ளது. மேலும், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்களுடன் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்களையும் நடத்தியுள்ளது. துல்லியமான மற்றும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உறுதுணையாக காப்பீட்டுக் கணிப்பாளர் மற்றும் நிதி வல்லுநர்களின் சேவையையும் குழு பயன்படுத்திக் கொண்டது..

தவறுகளை நிவர்த்தி செய்தல்...

கடந்த 8 மாதங்களில், 7.36 லட்சம் பணியாளர்கள் மற்றும் 6.75 லட்சம் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்களின் தரவுகளை சேகரித்தல், அவற்றில் இருந்த தவறுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளை ஓய்வூதியக் குழு விரிவாக மேற்கொண்டுள்ளது. கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த விரிவான பணிகள், மாநில அரசின் ஓய்வூதிய பொறுப்புகளை மதிப்பீடு செய்வதற்கான உரிய தொழிநுட்ப வழிமுறைகளை வழிவகுக்க உதவியுள்ளன.

சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் தரவுகளின் எண்ணிக்கை அதிகம் என்பதாலும், ஒன்றிய அரசு, சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் ஆகியவற்றுடன் மேலும் கலந்தாய்வுகள் நடத்த வேண்டியிருப்பதாலும் குழு தனது பணியினை இறுதி செய்து அறிக்கையை அளிப்பதற்கு சற்று கூடுதல் அவகாசம் தேவைப்படுகிறது.

இச்சூழ்நிலையில், இக்குழு வானது நேற்று ஓய்வூதிய திட்டங்கள் குறித்த தனது இடைக்கால அறிக்கையினை அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. மேற்கூறிய கலந்தாய்வுகளை மேற்கொண்ட பின்னர், குழு தனது இறுதி அறிக்கையினை விரைவில் அரசிற்கு சமர்ப்பிக்கும்.




## காலையில் குறைந்த தங்கம் விலை மாலையில் உயர்ந்தது!- பவுன் ரூ.88,000-ஐ நெருங்கியது

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (அக்.2) காலை கிராமுக்கு ரூ.70 குறைந்த நிலையில் மாலையில் ரூ.70 உயர்ந்தது. அதன்படி தற்போது, சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10.950-க்கும், பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.87,600-க்கும் விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பில் சரிவு, உக்ரைன் - ரஷ்யா போர், இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உள்ளிட்ட காரணங்கள் தங்கம் விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடந்த 26-ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில் இன்று காலை சற்றே குறைந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு நாள் முழுமைக்கும் கூட நீடிக்காமல் மாலையிலேயே கிராமுக்கு ரூ.70 உயர்ந்துள்ளது. ஒரு கிராம் ரூ.11,000-ஐ நெருங்கியுள்ளதால் நகை வாங்குவோர் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். வெள்ளி ஒரு கிராம் ரூ.163-க்கு விற்பனையாகிறது.

## 500 பில்லியன் டாலரை நெருங்கிய எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு!

நியூயார்க்: போர்ப்ஸ் நிறுவனத்தின் உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ள எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு சுமார் 500 மில்லியன் டாலரை நெருங்கி உள்ளது. ஒரே நாளில் அவரது சொத்து மதிப்பு சுமார் 8.3 பில்லியன் டாலர்கள் அதிகரித்துள்ளதாக தகவல்.

இதன் மூலம் உலக பணக்காரர்களில் 500 பில்லியன் டாலரை நெருங்கிய முதல் நபர் என மஸ்க் அறியப்படுகிறார். இந்திய நேரப்படி வியாழக்கிழமை இரவு 1.25 மணி அளவில் அவரது சொத்து மதிப்பு 499.5 பில்லியன் டாலர்கள். இது போர்ப்ஸ் உலக பணக்காரர்களின் நிகழ்நேர பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளின் விலை உயர்வு காரணமாக மஸ்க்கின் சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் மட்டும் டெஸ்லா நிறுவன பங்குகளின் விலை சுமார் 14 சதவீதம் அதிகரித்துள்ளது. இதில் புதன்கிழமை அன்று மட்டும் சுமார் 4 சதவீதம் டெஸ்லா பங்குகளின் விலை அதிகரித்துள்ளது. 54 வயதான மஸ்க், உலக பணக்காரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வருகிறார். டெஸ்லா, எக்ஸ், ஸ்பேஸ் எக்ஸ், நியூராலிங்க் உள்ளிட்ட நிறுவனங்களை அவர் தன்வசம் கொண்டுள்ளார். இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் ஆரக்கிள் நிறுவனத்தின் இணை நிறுவனர் லேரி எலிசன், 351.5 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் உள்ளார். அடுத்தடுத்த இடங்களில் மெட்டா நிறுவன சிஇஓ மார்க் ஸுகர்பெர்க் - 245.8 பில்லியன், அமேசான் நிறுவனர் ஜெஃப் பிஸோஸ் - 233.5 பில்லியன், கூகுள் இணை நிறுவனர் லேரி பேஜ் 203.7 பில்லியன் சொத்து மதிப்புடன் உள்ளனர்.

# சிறப்புக் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து உர விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு நடத்துங்கள் : அலுவலர்களுக்கு உத்தரவு

**சென்னை, அக்.4:**

தற்போது, சம்பா, தாளடி, பிசானம் பருவ நெல் சாகுபடி மேற்கொள்வதற்கான பணிகள் தீவிரமடைந்துவரும் நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தடையின்றிக் கிடைத்திட தேவையான உரங்களை இருப்பு வைத்தல் மற்றும் சீரான விநியோகம் செய்தல் குறித்து அமைச்சர்கள் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், கேஆர். பெரியகருப்பன் ஆகியோர் இணைந்து நேற்று தலைமைச்செயலகத்தில், வேளாண்மைஉழவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் விரிவான ஆய்வுக்கூட்டம் நடத்தினர்.

நடப்பு ஆண்டு குறுவை (காரீப்) பருவத்தில் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்பளக்ஸ் போன்ற உரங்களில் மீதமுள்ள ஒரு லட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை உடனடியாக வழங்கிட வேண்டியும், சம்பா பருவத்திற்கு கூடுதலாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை வழங்கிட வேண்டியும் முதலமைச்சர் பிரதமரிடம் கடிதம் வாயிலாக வலியுறுத்தினார். அதன் அடிப்படையில், தற்போது 12 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா மட்டுமே கூடுதலாக வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள உரங்களையும் ஒன்றிய அரசு உடனடியாக வழங்க மேலும் வலியுறுத்தப்படும்.

அக்டோபர், மாத உர விநியோகத் திட்டத்தின்படி உரங்களைப்பெற்று இருப்பு வைக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் மாவட்ட வாரியாக தேவைக்கு ஏற்ப யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களையும் எவ்விதக் குறைவுமின்றி முறையாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், உர உற்பத்தி நிறுவனங்கள் மாதாந்திர உர விநியோகத் திட்டத்தின்படி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரங்களை உரிய நேரத்தில் வழங்கவேண்டும் என்றும், கூட்டுறவு உர நிறுவனங்களான இப்கோ, கிரிப்கோ ஆகியவை மாதாந்திர ஒதுக்கீட்டில் 80 சதவீதத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 20 சதவீதத்தை தனியார் விற்பனை நிலையங்களுக்கும் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது.

தனியார் உரநிறுவனங்கள் 40 சதவீத உரஒதுக்கீட்டினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 60 சதவீதத்தை தனியார் விற்பனை நிலையங்களுக்கும் வழங்க அறிவுறுத்தப்பட்டது. தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் உர நிறுவனம் தமிழ்நாட்டில் அமைந்துள்ளதால், உர விநியோகத்தில் அந்நிறுவனம் தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

# சோளிங்கர் ஒன்றியத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்: அமைச்சர் காந்தி பார்வையிட்டார்

**ராணிப்பேட்டை, அக்.4:**

சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், ஒழுகூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'நலன் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாமில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிசிச்சைகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பார்வையிட்டு பொதுமக்களிடம் நலம் விசாரித்தார். தொடர்ந்து, பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஜெ..யு. சந்திரகலா தலைமை தாங்கினார். அதனைத் தொடர்ந்து, 5 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட அட்டைகள், 3 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் 2 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் மருந்து பெட்டகங்கள், 2 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து மருத்துவ முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள துறைச் சார்ந்த விழிப்புணர்வு கண்காட்சி அரகங்களை பார்வையிட்டார்.

தொடர்ந்து, பொது பிரிவு பரிசோதனை, மருத்துவ பரிசோதனை மையம் ஆண்கள், பெண்கள் ஸ்கேன் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள மையம் காது, மூக்கு, தொண்டை பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, இருதய சிகிச்சை பிரிவு, நரம்பியல் சிகிச்சை பிரிவு, பல் மருத்துவ பிரிவு, சுவாச மண்டல பிரிவு ஆகியவைகளையும் பார்வையிட்டார்கள். மேலும் ஆயுர்வேதம் சித்தா பிரிவுகளையும் பார்வையிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இணை இயக்குனர் மருத்துவ பணிகள் மரு.தீர்த்தலிங்கம், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. செந்தில்குமார், அம்முன்டி சர்க்கரை ஆலை கூட்டுறவு சங்க தலைவர் வெங்கடேசன், வட்டாட்சியர் செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானலில் பல கிலோ மீட்டருக்கு அணிவகுத்து நிற்கும் வாகனங்கள்

**கொடைக்கானல், அக்.4:**

தொடர் விடுமுறை என்பதால் கொடைக்கானலில் சுற்றுலா பயணிகளின் வருகை வழக்கத்தை விட அதிகரித்து காணப்பட்டது.

புகழ்பெற்ற சுற்றுலா தலமான கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. காலாண்டு தேர்வு விடுமுறை மற்றும் பண்டிகை விடுமுறைகள் என தொடர்ந்து விடுமுறை நாட்கள் என்பதால் சுற்றுலா பயணிகளின் வருகை வழக்கத்தை விட அதிகரித்து காணப்பட்டது.



மேல்மலை கிராம பகுதிகளான மன்னவனூர், பூம்பாறை, பூண்டி, கிளாவரை போன்ற பகுதிகளிலும் அதிகமான சுற்றுலா பயணிகள் காணப்பட்டனர்.

இதே போல் பசுமை பள்ளத்தாக்கு, வனத்துறை சுற்றுலா தளங்களான தூண் பாறை, குணா குகை, பைன் மரக்காடு, மோயர் சதுக்கம் ஆகிய இடங்களிலும், பிரையண்ட் பூங்கா, செட்டியார் பூங்கா, படகு இல்லங்கள் போன்ற பகுதிகளில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் குவிந்திருந்தனர். ஏரிச்சாலை பகுதிகளில் சைக்கிள் சவாரி, குதிரை சவாரி செய்து மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக கொடைக்கானலில் 2-வது நாளாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சுமார் 5 கிலோமீட்டருக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதனால் சுற்றுலா பயணிகள் அவதியடைந்துள்ளனர். அனைத்து சுற்றுலா தலங்களிலும் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# கிண்டி முதியோர் நல மருத்துவமனையில் 'நலமான பெண்கள்' மருத்துவ முகாம்: மா.சுப்பிரமணியம் துவக்கினார்

**சென்னை, அக்.4:**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனையில், "சர்வதேச முதியோர் தினம் 2025" நிகழ்ச்சியில், "நலமான பெண்கள் வளமான வாழ்வு" மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, ரூ.60 லட்சம் செலவில் மருத்துவ உபகரணங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கடந்த 25.2.2024 அன்று கிண்டியில் 200 படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்ட 1.5 ஆண்டுகளில் தினந்தோறுமான புறநோயாளிகளின் எண்ணிக்கை 1000 பேருக்கும் மேல் பயன்பெற்று வருகிறார்கள். இதுவரை புறநோயாளிகள் 3,80,594 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். உள்நோயாளிகளாக 10,612 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் 10.5% மூத்த குடிமக்கள் இருக்கிறார்கள்.



இந்த நிகழ்ச்சியின் மூலம் எண்டோஸ்கோப்பி, பல் மருத்துவ உபகரணங்கள், கண் மருத்துவ உபகரணங்கள் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் மிக விரைவில் கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கிறது. எலும்பின் திடத்தன்மை அறிய Dexa Scan வசதி அமைய உள்ளது.

இந்த மருத்துவமனையில் உள்ள இன்னொரு கூடுதல் சிறப்பு, வயது மூத்தவர்களுக்கு முதுநிலை பட்ட மேற்படிப்பு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இதன் மூலம் 72 முதியோர் மருத்துவர்களை பெற்றிருக்கிறது. இந்த 1.5 ஆண்டுகளில் 28 முதியோர் மருத்துவர்களை உருவாக்கி கொண்டிருக்கும் நிலையில் பிறகு 100 முதியோர் நல மருத்துவர்கள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாட்டில் முதியோர்களுக்கு மருத்துவ சேவைகள் ஆற்றவிருக்கிறார்கள்.

இந்தியாவில் மிகப் பெரிய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் முதியோருக்கான நல மேற்படிப்பு என்பது இல்லை. முதுநிலை மேற்படிப்பு என்பது தமிழ்நாட்டில் மட்டுமே இருந்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் நிருபர்கள் கேட்ட கேள்விக்கு மா.சுப்பிரமணியம் பதிலளித்தார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 40 உயிர்கள் இறந்த நிலையிலேயே கொண்டு வரப்பட்டது. 29.9.2025 அதிகாலை 2 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 60 வயது மதிக்கத்தக்க சகோதரி மரணமடைந்து விட்டார். அவரைப் பொறுத்தவரை கூட்ட நெரிசலில் சிக்கி பாதிக்கப்பட்டு வந்தவர். அவருக்கு 500 என்கின்ற வகையில் சர்க்கரை நோய் இருந்தது. அதுமட்டுமல்லாமல் நிறைய உடல் பாதிப்புகள் இருந்தது. வந்ததிலிருந்தே வெண்டிலேட்டர் சிகிச்சையில் இருந்தார். அதிகாலையில் இறந்து விட்டார். இவர் ஒருவர் மட்டுமே மருத்துவமனையில் உயிரிழந்தவர். மீதமிருந்த 40 பேர் இறந்த நிலையிலேயே சடலங்களாக மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார்கள்.

இன்று காலை வரை 53 பேர் அட்மிஷனலில் இருந்தார்கள். காலை 10 மணிக்கு மேல் நிறையே பேர் டிஸ்சார்ஜ் ஆகி சென்று விட்டார்கள்.

பெரும்பாலானோர் குணமடைந்து வீடு திரும்புவார்கள். மேலும் 2 பேர் எலும்பு உடைந்து சிகிச்சைக்கு வந்திருந்தார்கள், அவர்களின் பாதிப்புகளை உணர்ந்து முதலமைச்சரின் உத்தரவின்படி, தனி சிறப்பு வாகனம் மூலம் மருத்துவர் குழுவுடன் மதுரை மருத்துவமனைக்கு மாற்றியிருக்கிறோம். அவர்களுக்கு மிகச் சிறப்பான வகையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# திட்டம்



செல்வி தானா இது? நம்பவே முடியவில்லை. உடம்பு வளைந்து வீட்டில் ஒரு வேலையும் செய்ய மாட்டாள். எந்த வேலையாக இருந்தாலும் பணிப் பெண்ணிடம் சொல்லிவிட்டு 'செல்' லை நோண்டிக் கொண்டிருப்பாள். அப்படிப்பட்டவள் இன்று வீட்டில் ஒட்டடை அடிப்பதையும் வீட்டு வாசலில் கோலம் போடுவதையும் பார்த்து அசந்து நின்றாள் பிரபா.

"என்ன செல்வி இது? என் கண்ணேயே என்னால நம்ப முடியல.ராதா அக்கா இன்னைக்கு வேலைக்கு வரலையா?" என்று கேட்டே விட்டாள் பிரபா.

"இப்பத்தானே வந்துட்டு போனாங்க .ஏன் வீட்டு வேலை எல்லாம் நான் செய்யக்கூடாதா ? இன்னும் நான்அப்படியேதான் இருப்பேனா ..கொஞ்சம் கூட மாறி இருக்க மாட்டேனா?" என்று செல்வி சொல்லவும் "வீட்ல ஏதோ விசேஷம் போல இருக்கு ..அதான் நீயே துணிஞ்சு இறங்கிட்டே..கரெக்டா?" என்று கேட்டாள் பிரபா .

"உண்மைதான்..! என் மாமனார் ஊரில் இருந்து இன்னைக்கு வரார். கொஞ்ச நாள் இங்கு தங்கிட்டு கிளம்பிடுவார். அவருக்கு வீடு எல்லாம் ரொம்ப சுத்தமா இருக்கணும். அதுக்காகத்தான் நானே எல்லாம் செய்ய ஆரம்பிச்சேன் " என்ற செல்வியிடம் "ஆமா உனக்கு தான் உன் மாமனார் மாமியார்னா பிடிக்காதே! இப்ப என்ன இப்படி உருகறே?"என்று கேட்டாள் பிரபா .

"போன வாரம் என்னோட அப்பா அவரைப் பார்க்கிறதுக்காக அங்கே போயிருக்காரு. என் மாமியார் ராட்சசிகிட்டே மாட்டிகிட்டு அவர் படற அவஸ்தையை என்கிட்டே வந்து சொன்னார். ஏற்கனவே ஹார்ட் அட்டாக் வந்து தப்பிப் பிழைச்ச மனுஷன். இந்த வயசிலும் சமையல் எல்லாம் இவர்தான் செஞ்சாகணுமாம். கடை கன்னிகளுக்கு போறது பேங்க் வேலையும் இவரேதான் செஞ்சாகணும் எப்படியாவது அவரை இங்கே வர வைக்கணும்னு எனக்கு உடம்பு சரியில்லைன்னு ஒரு பொய்யை சொன்னேன். என் மேல ஒரு தனிப்பட்ட பாசம் அவருக்கு எப்போதுமே உண்டு. என்னைப் பார்க்க என் மாமியார் எப்படியும் வரமாட்டாங்கன்னு எனக்கு தெரியும் .அந்த நல்ல மனுஷன் கொஞ்ச நாளாவது இங்கே நிம்மதியா இருந்துட்டு போகட்டும்கிறதுதான் என்னோட திட்டம் " என்று கலங்கிய கண்களுடன் சொன்ன செல்வியைப் பாசமாகப் பார்த்தாள் பிரபா .



-மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர்-636903

# இப்படியும் சில பேர்!



தினசரி காலை வேளையில் நடைபயிற்சி செய்யும் காந்தி பூங்காவில், நீண்ட நாட்களுக்கு பிறகு நண்பர் ஒருவரைச் சந்தித்தேன்.
எங்கே உங்களை இந்த பக்கம் ரொம்ப நாளாவே காணும் என்று நான் கேட்டதும், அவர் ஆமாம் சார்! மூன்று மாதம் சென்னையிலுள்ள மகள் வீட்டிற்கு போயிருந்தேன். நேற்றுதான் இங்கு வந்தேன் என்றார் .
இங்கு மழையே பெய்யவில்லை போலிருக்கு! சென்னையில் இரவு நேரத்தில் அடிக்கடி மழை பெய்வதாக தெரிவித்தார். எங்கே நமது நண்பர்கள் காளிதாஸ், வைத்தி, முருகேசன் என்று பட்டியல் போட்டு, நடைபயிற்சி நண்பர்களை விசாரித்தார்.
எல்லோருக்கும் வயதாகிக் கொண்டே போகிறது... சிலநாட்கள் வருவார்கள்... சிலநாட்களுக்கு நடைபயிற்சிக்கு வருவதேயில்லை என்று விளக்கம் கொடுத்தேன்.
நடந்து கொண்டே அரசியலை அலசினோம்...ஜனநாயக நாட்டில் தினம், தினம் புதுப்புதுக் கட்சிகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன என்றார்...
எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று யாரோ சொன்னதை நிருபிக்கத்தான் புதுக்கட்சிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறது.... என்றேன்..
கட்சி ஆரம்பிக்கலாம்... தேர்தலிலும் போட்டியிடலாம்...வோட்டுகளும் வாங்கலாம்.... சீட்டுகள் வாங்கினால் தானே சட்டசபையில் போய் உட்காரலாம்.... என்றார் பாலாஜி...
சரி...பணம் இருந்தால் கட்சி ஆரம்பிக்கலாம்... நமக்கேன் வம்பு.... என்று சொல்லியபடியே மணி எட்டாகிவிட்டது...
புறப்படுவோமோ.... என்று நான் சொன்னதும்,புறப்படவேண்டியதுதான் என்றபடியே இருவரும் பூங்காவை விட்டு வெளியே வந்தோம்...
வீட்டிலிருந்து பூங்காவிற்கு நான் நடந்தே வந்ததால் நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று பாலாஜியிடம் கேட்டேன்...!
அதற்கு அவர், நான் அந்தப் பக்கம் போவதாக சொல்லிவிட்டு, அருகிலுள்ள தேநீர் கடைக்குள் வேகமாக நுழைந்தார்...
தேநீர் சாப்பிட வாருங்கள் என்று என்னை அவர் அழைக்காமல் போனதற்கு அவர்மீது நான் என்ன கோபப்படவா போகிறேன்....?



தமிழ்ச் செம்மல்
-நன்னிலம் இளங்கோவன்.

## வாழ்ந்தே தீருவோம்

# எல்லாமும் உறவுகளே

அத்தியாயம் -22



■ முனைவர்
க. அன்பழகன் (ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்



அப்போதுதான் அவன் கைவிரல்களை எதேச்சையாகக் கவனித்தார். நாலைந்து விரல்கள் உள்ளுக்குள் மடங்கியிருந்தன. இடது கை விரல்களில் இரண்டும் அப்படியே..

என்னப்பா ஆச்சு? என்றார் மாதவன்.

எது சார் ? என்றான்.

அவன் விரல்களைச் சுட்டிக்காட்டிக் கேட்டார்.

சொன்னதும் சட்டென்று இரண்டு கைகளையும் மறைத்துக்கொண்டு. ஒன்னுமில்ல சார் என்றான் முகம் மாறிய நிலையில்.

மாதவன் சிரித்தார். எனக்கு ஒன்னுமில்லப்பா.. சொல்லு.. என்னாச்சு?

சொன்னான். தொழுநோய் வந்த விரல்கள் என்று. நல்லவேளை தொடக்கத்திலேயே பார்த்துவிட்டதால் இத்துடன் நின்றுவிட்டது என்றும் சொன்னான்.

அதான் வேலை கிடைக்கலியா? என்றார் மாதவன்.

ஆமாம் சார்.. கொஞ்சம் யோசிக்கறாங்க.. கையுறை போட்டுட்டுப் போகலாம். எப்படியிருந்தாலும் சாப்பிடறப்ப அவுத்துதானே ஆவணும்.. அப்பத் தெரிஞ்சு வேலையை விட்டுப் போன்னு சொல்லாம சொல்றாங்க சார்.. எங்கப்பா எனக்காக எவ்வளவோ பட்டாரு சார்.. திடீர்னு அட்டாக்லே போயிட்டாரு.. அம்மா பொறந்தவுடனேயே இறந்துட்டாங்க.. அப்பாதான் கஷ்டப்பட்டு வளர்த்தாரு.. இப்போ அவரும் நீயே பாத்துக்கோன்னு போயிடடாரு சார்.. எங்கப்பாவப் பாத்தா உங்களப் பாக்கவேண்டியதில்ல. இரட்டையர்கள் மாதிரி நீங்க இருக்கீங்க சார்.. ? என்று படபடவென்று பேசி கலங்கினான் சிவராமன்.

அவன் பேசுவதை அமைதியாகக் கேட்டார்.

டாக்டர் வந்தார் உள்ளே. சிவராமன் எழுந்து தள்ளி நின்றுகொண்டான்.

என்ன மாதவன்? உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்ல.. கழுத்த ரொம்ப அசைக்காம இருங்க.. பெல்ட் எழுதித்தரேன் வாங்கிப் போட்டுக்கங்க.. மாத்திரையைப் பையில வச்சுக்கங்க.. டிஸ்சார்ஜ் பண்ணிடறேன்.. என்று டிஸ்சார்ஜ் எழுதி வைத்துவிட்டுப்போனார்.

மாலையில் டிஸ்சார்ஜ் ஆனார் மாதவன். கூடவே சிவராமன் இருந்தான்.

மாதவன் கேட்டார்.. நான் ஒன்டியாத்தான் இந்தச் சென்னையில இருக்கப்போறேன்.. என்னோட வந்துடறியா? என்றார்.



சிவராமன் ஒருகணம்கூட யோசிக்கவில்லை. வந்துடறேன் சார.. ஆனா ஒரு வேண்டுகோள் என்னோட வீட்டுக்குப் போயிடலாம்.. எனக்காக என்னோட அப்பா ஒரு சின்ன வீட்டைச் சொத்தா வச்சிட்டுப்போயிருக்காரு.. எங்க தாத்தா கொடுத்த சொத்து.. புதுசா எதுவும் சம்பாதிக்கலே.. ஆனா பூர்வீகச் சொத்தையும் அழிக்கலே.. அங்க தங்கிக்கலாம் சார்..

சுவர்களுக்குள் மனிதர்களை அடைத்துவைக்கும் வீடு நரகம்தான். ஆனால், வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டால்.. இந்த வெளி எல்லையற்றது.. எங்குவேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் போகலாம்.. அலையலாம். நினைத்த இடத்தில் உறங்கலாம்.. என்கிற ஒரு சிந்தனை மாதவனுக்குள் வந்தது..

சரி.. வா போகலாம் என்று சிவராமனுடன் கிளம்பினார். எப்படி இது சாத்தியம்? என்று மாதவனும், சிவராமனும் ஒருவருக்கொருவர் மனத்துக்குள் கேட்டுக்கொண்டார்கள்.

அன்பு காட்டுகிற மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மையான அன்பு கொண்டவர்களிடம் அவர்கள் வந்து சேர்கிறார்கள். உண்மையான அன்பு உண்மையான அன்பை அடையாளங்கண்டு கொள்கிறது.

அவனின் கைவிரல்களோடு தன் விரல்களைக் கோர்த்துக்கொண்டு நடந்தார்.

கூச்சமாயும், அச்சமாயும் சிவராமனின் விரல்களைப் பார்த்தார்கள். அதில் கூச்சமும், அச்சமும் இல்லாமல் மாதவன் கைகோர்த்ததும் சிவராமன் இந்த உலகில் இருக்கும் வரை வாழலாம் என்று நினைத்து நம்பிக்கை கொண்டு நடந்தான். நடந்தார்.

- தொடரும்

# கே.ஜி.எப். கோடிலிங்கேசுவரர் கோவில்



கர்நாடக மாநிலத்தில் உள்ள கோலார் தங்கவயலில் இருந்து 6 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது, கோடி லிங்கேஸ்வரர் கோவில். கோவிலின் சிறப்பு அம்சமாக, ஆசியாவிலேயே மிக உயரமான 108 அடி உயர சிவலிங்கம் அமைக்கப்பட்டு உள்ளது.
பொதுவாக சிவன் கோவில்களில் மூலவர் சிவலிங்கம் தவிர்த்து ஆலயத்தைச் சுற்றிலும் ஒன்றிரண்டு சிவலிங்கங்கள் இருக்கக்கூடும். ஒரு சில ஆலயங்களில் மூலவர் லிங்கத்தைத் தவிர்த்து பஞ்ச லிங்க சன்னிதி என்ற வகையில் ஐந்து லிங்கங்கள் அமைந்திருக்கலாம். ஆனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் கோடிக்கும் அதிகமாக லிங்கங்கள் இருப்பது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கிறது.
ஆலயத்திற்குள் நுழைந்ததாலே எந்தப் பக்கம் திரும்பினாலும் சிவலிங்கங்கள்தான் காணப்படுகின்றன.
ஆலயத்தின் பெயரே 'கோடிலிங்கேஸ்வரர்' கோவில் தான்.
கர்நாடகா மாநிலம் கோலார் மாவட்டத்தில் உள்ள கம்மசந்திரா என்ற இடத்தில் அமைந்திருக்கிறது கோடிலிங்கேஸ்வரர் திருக்கோயில்.

இங்கு உலகின் மிகப்பெரிய சிவலிங்கம் என்னும் வகையில், 108 அடி உயரத்தில் பிரமாண்ட சிவலிங்கம் ஒன்று அமைந்துள்ளது. நேர் எதிரே 35 அடி உயரத்தில் நந்தி சிலையும் அமைந்துள்ளது. இதைத் தவிர்த்து 15 ஏக்கர் பரப்பளவில் கோவில் முழுவதும் பல்வேறு அளவுகளில் சிறியதும், பெரியதுமாக, ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமாக சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.
இதன் காரணமாக ஆலயத்திற்கு இப்பெயர் வந்ததாக கூறப்படுகிறது.
இந்த ஆலயத்தில் சாம்பசிவமூர்த்தி என்பவரால் முதல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு தொடங்கப்பட்டது.
அதன் பின்னர் இந்த ஆலயத்திற்கு வந்து வழிபடும் மக்கள் அனைவரும், ஒவ்வொரு சிவலிங்கத்தை ஆங்காங்கே பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கி விட்டனர்.
இவ்வாறு பல்கிப் பெருகியதன் காரணமாக இப்போது ஒரு கோடிக்கும் அதிகமான சிவலிங்கங்கள் இங்கு இருப்பதாக அறியப்படுகிறது.
இப்போதும் தங்களது வேண்டுதல் நிறைவேற வேண்டும் என்று இங்கு வந்து வழிபடும் பக்தர்கள் அனைவரும் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்துதான் இறைவனை வழிபட்டுச் செல்கிறார்கள்.

இந்தக் கோவில் வளாகத்தில் பிரம்மதேவர், மகாவிஷ்ணு, மகேஸ்வரர், வெங்கடரமணி சுவாமி, அன்னபூரணி, பாண்டுரங்க சுவாமி, சீதாதேவி சமேத ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயர், கன்னிகா பரமேஸ்வரி அம்மன், கருமாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கும் தனித்தனி சன்னிதிகள் அமைந்துள்ளன. இதில் கன்னிகா பரமேஸ்வரி அம்மன் சன்னிதிக்குள் 'சிவ பஞ்சயாதி' என்னும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த லிங்கத்தைச் சுற்றிலும் விநாயகப் பெருமான், முருகப்பெருமான், பார்வதி மற்றும் நந்தி ஆகியோர் நின்று வணங்குவது போன்ற அமைப்பு விஷயமாகும்.
கோடி லிங்கேஸ்வரர் கோவிலில் இரண்டு நாகலிங்க மரங்கள் இருக்கின்றன.
திருமணமாகாதவர்கள் விரைவில் திருமணம் நடைபெற வேண்டியும், மணமானவர்கள் மணவாழ்க்கை இடையூறு இன்றி இன்பமாக அமைய வேண்டியும் சிவபெருமானை வேண்டிக்கொண்டு, இந்த நாகலிங்க மரங்களில் மஞ்சள் கயிறு கட்டி வழிபாடு செய்கிறார்கள்.
இந்த ஆலயத்தில் இருக்கும் அனைத்து லிங்கங்களுக்கும் காலை 6 மணிக்கும், மாலை 6 மணிக்கும் இரண்டு வேளைகளில், 10 அர்ச்சகர்களால் மேளதாளங்கள் முழங்க பூஜைகள் செய்யப்படுகின்றன.
இங்கிருக்கும் அனைத்து லிங்கங்களுக்கும், நாள் தவறாமல் பூசை நடைபெறுவது சிறப்பாகும்.

இந்தக் கோவிலில் வித்தியாசமான வழிபாட்டு முறை ஒன்றை வழக்கத்தில் இருக்கிறது. அது சிவலிங்க பிரதிஷ்டை வழிபாடு ஆகும். தங்கள் வேண்டுதல் நிறைவேற நினைக்கும் பக்தர்கள், தங்களால் முடிந்த அளவில் வெவ்வேறு அளவுகளில் சிவலிங்கத்தை செய்து கொண்டு வந்து, இந்தக் கோவில் வளாகத்தில் பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர். இங்கு பிரதிஷ்டை செய்யப்படும் சிவலிங்கங்கள், அந்தந்த பக்தர்களின் பெயரிலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டு அர்ச்சனை செய்யப்படுகிறது.
இந்தக் கோவிலில் மகா சிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெறு கிறது. 108 அடி உயர சிவலிங்கத்திற்கு ஹெலிகாப்டர் மூலமாக மலர் கொண்டு அர்ச்சனை செய்யப்படுகிறது.
அன்றைய தினம் முழுவதும் இறைவனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.
கோலார் தங்கச்சுரங்கத்தில் இருந்து 6 கி.மீ தொலைவில் கோடிலிங்கேஸ்வரர் கோவில் அமைந்திருக்கிறது.
பெங்களூருவில் இருந்து கோலார்பங்கார்பெட்டை வழியாக இந்தக் கோவிலை அடையலாம்.
கோவில் தரிசன நேரம் காலை 6:00 மணி முதல் இரவு 9.00 மணி வரை.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள் சரத் சந்திர போஸ் வரலாறு

சரத் சந்திர போஸ் செப்டம்பர் 6, 1889 அன்று ஒடிசாவின் கட்டாக்கில் ஜானகிநாத் போஸ் (தந்தை) மற்றும் பிரபாபதி தேவிக்கு பிறந்தார்.
இந்தக் குடும்பம் முதலில் மேற்கு வங்காளத்தின் தெற்கு 24 பர்கானாஸ் பகுதியில் உள்ள கோடாலியாவை (இப்போது சுபாஷ்கிராம்) பூர்வீகமாகக் கொண்டது . அவர் குலின் கயஸ்தா குடும்பத்தைச் சேர்ந்தவர் . அவரது தந்தை மஹிநகர் ( தெற்கு 24 பர்கானாஸ் ) போஸ் வம்சாவளியைச் சேர்ந்தவர், அதே நேரத்தில் அவரது தாயார் பிரபாபதி தேவி வடக்கு கொல்கத்தாவில் உள்ள ஹட்கோலாவின் பிரபலமான தத்தா குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பதினான்கு குழந்தைகள், ஆறு மகள்கள் மற்றும் எட்டு மகன்களைப் பெற்றெடுத்தார், அவர்களில் இடதுசாரித் தலைவர் சரத் சந்திர போஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் டாக்டர் சுனில் சந்திர போஸ் ஆகியோர் அடங்குவர்.
சரத்துக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருந்தனர். அவர்கள் பிரமிளாபாலா மித்ரா மற்றும் சரலாபாலா டே. அவருக்கு சதீஷ் சந்திர போஸ் (1887 - 1948) என்ற மூத்த சகோதரர் இருந்தார். அவருக்கு ஆறு இளைய சகோதரர்கள் இருந்தனர், அதாவது: சுரேஷ் சந்திர போஸ் (1891 -1972), சுதிர் சந்திர போஸ் (1892 - 10 பிப்ரவரி 1950), டாக்டர் சுனில் சந்திர போஸ் (1894 - 17 நவம்பர் 1953), சுபாஷ் சந்திர போஸ் (23 ஜனவரி 1897 -18 செப்டம்பர் 1985), சைலேஷ் சந்திர போஸ் (1904 -1984) மற்றும் சந்தோஷ் சந்திர போஸ். அவருக்கு நான்கு இளைய சகோதரிகள் இருந்தனர், அவர்கள் தருபாலா ராய், மாலினா தத்தா, பிரதிபா மித்ரா மற்றும் கனகலதா மித்ரா. அவர் 1909 இல் இருபது வயதில் பிவாபதி போஸை மணந்தார், மேலும் தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் இருந்தனர், அவர்கள் முதிர்வயது வரை உயிர் பிழைத்தனர்.

சரத் போஸ் , ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியின் பிரசிடென்சி கல்லூரியில் படித்தார் , பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டார் , பின்னர் 1911 இல் இங்கிலாந்து சென்று ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றினார். லிங்கன்ஸ் இன்னில் வழக்கறிஞர் பணிக்கு அழைக்கப்பட்டார் . இந்தியா திரும்பியதும் அவர் ஒரு வெற்றிகரமான சட்டப் பயிற்சியைத் தொடங்கினார், ஆனால் பின்னர் அதைக் கைவிட்டு இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் .

அரசியல் வாழ்க்கை
1936 ஆம் ஆண்டு, போஸ் வங்காளப் பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவரானார், மேலும் 1936 முதல் 1947 வரை அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.
ஃபஸ்லுல் ஹக் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக சேரவிருந்ததற்கு முந்தைய நாள் சுபாஷ் தப்பிச் சென்ற பிறகு சரத் போஸ் கைது செய்யப்பட்டார். அவர் மெர்காராவில் உள்ள சிறைக்கும் பின்னர் குன்னூரில் உள்ள சிறைக்கும் மாற்றப்பட்டார், அங்கு அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. 4 ஆண்டு சிறைத்தண்டனைக்குப் பிறகு செப்டம்பர் 1945 இல் அவர் விடுவிக்கப்பட்டார். 1946 முதல் 1947 வரை, போஸ் மத்திய சட்டமன்றத்திற்கு காங்கிரஸ் குழுவை வழிநடத்தினார். சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்குவதை அவர் கடுமையாக ஆதரித்தார் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் . 1945 ஆம் ஆண்டு தனது சகோதரர் இறந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஐஎன்ஏ பாதுகாப்பு மற்றும் நிவாரணக் குழுவின் மூலம் ஐஎன்ஏ வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் உதவி வழங்குவதற்கான முயற்சிகளுக்கு போஸ் தலைமை தாங்கினார் . 1946 ஆம் ஆண்டில், அவர் பணிகள், சுரங்கங்கள் மற்றும் அதிகாரங்களுக்கான இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் - ஜவஹர்லால் நேரு மற்றும் சர்தார் வல்லபாய் படேல் தலைமையிலான தேசிய நிர்வாகக் குழுவில் அமைச்சர் பதவி , இந்திய வைஸ்ராயால் தலைமை தாங்கப்பட்டது.

வங்காளப் பிரிவினையும் பிற்கால வாழ்க்கையும்
இருப்பினும், வங்காளத்தை இந்துக்கள் பெரும்பான்மை மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மை பகுதிகளுக்கு இடையில் பிரிக்க வேண்டும் என்ற அமைச்சரவை மிஷன் திட்டத்தின் அழைப்பில் கருத்து வேறுபாடு காரணமாக போஸ் AICC-யில் இருந்து ராஜினாமா செய்தார் . வங்காள முஸ்லிம் லீக் தலைவர்களான ஹுசைன் ஷாஹீத் சுஹ்ரவர்தி மற்றும் அபுல் ஹாஷிம் ஆகியோருடன் ஒன்றுபட்ட ஆனால் சுதந்திரமான வங்காளம் மற்றும் வடகிழக்கு ஐக்கிய வங்கத்திற்கான முயற்சியை அவர் உருவாக்க முயன்றார் . முகமது அலி ஜின்னா ( பாகிஸ்தானின் ஸ்தாபக தந்தையான அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் ) அதை ஆதரித்தார். மகாத்மா காந்தியும் அதை ஆதரித்தார். இந்திய தேசிய காங்கிரசும் வங்காளத்தைச் சேர்ந்த இந்திய சட்டமன்றத்தின் இந்து உறுப்பினர்களும் அதை எதிர்த்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, போஸ் தனது சகோதரரின் ஃபார்வர்ட் பிளாக்கை வழிநடத்தி , வங்காளத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சோசலிச அமைப்பை ஆதரித்து சோசலிச குடியரசுக் கட்சியை உருவாக்கினார். அவர் பிப்ரவரி 20, 1950 அன்று கல்கத்தாவில் 60 வயதில் இறந்தார்.



குடும்பம்
சரத் போஸ் 1909 ஆம் ஆண்டு அக்ஷோய் குமார் டே மற்றும் சுபலா டே ஆகியோரின் மகள் பிவாபதி டேயை மணந்தார்.
இந்த தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர். இவர்களது குழந்தைகளில் ஜெர்மனியைச் சேர்ந்த வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற அசோக் நாத் போஸ் ; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று நாடாளுமன்ற உறுப்பினரான அமியா நாத் போஸ் , பர்மாவிற்கான இந்தியத் தூதராகவும் இருந்தார்; குழந்தை மருத்துவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆன சிசிர் குமார் போஸ் , மின் பொறியியலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சுப்ரதா போஸ் ஆகியோர் அடங்குவர். அவரது இளைய மகள் பேராசிரியர் சித்ரா கோஷ் , ஒரு புகழ்பெற்ற கல்வியாளர், சமூக விஞ்ஞானி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். அவரது மூத்த பேரன் சுகதா போஸ் , ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கடல்சார் வரலாறு மற்றும் விவகாரங்களில் கார்டினர் பேராசிரியராகவும் , மக்களவையின் முன்னாள் உறுப்பினராகவும் உள்ளார் . அவரது இளைய பேரன் சுமந்திர போஸ் , லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் பள்ளியில் ஒப்பீட்டு அரசியல் பேராசிரியராக உள்ளார்.
கொல்கத்தாவில் உள்ள சரத் சந்திர போஸின் சிலை கௌரவங்கள் கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கு அருகில் சரத் சந்திர போஸின் சிலை அமைந்துள்ளது.
ஜனவரி 2014 இல், சரத் சந்திர போஸ் நினைவு சொற்பொழிவு நிறுவப்பட்டது, மேலும் முதல் சொற்பொழிவை சர்வதேச புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் லியோனார்ட் ஏ. கார்டன் நிகழ்த்தினார் - அவர் சரத் மற்றும் அவரது தம்பி சுபாஸின் கூட்டு வாழ்க்கை வரலாற்றை "பிரதர்ஸ் அகைன்ஸ்ட் தி ராஜ்" என்ற தலைப்பில் எழுதியுள்ளார் .

# நவ.6-ல் ரீரிலீஸ் ஆகிறது 'நாயகன்'




கமல்ஹாசனின் பிறந்த நாளையொட்டி, 'நாயகன்' திரைப்படம் ரீரிலீஸ் ஆகவுள்ளது.

பழைய படங்கள் மீண்டும் ரீ-ரிலீஸ் ஆகும் ட்ரெண்டில் இணைந்துள்ளது 'நாயகன்'. நவம்பர் 6-ம் தேதி இப்படம் ரீ-ரிலீஸ் செய்யப்படவுள்ளது. நவம்பர் 7-ம் தேதி கமல்ஹாசன் தனது 71-வது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார். இதனை முன்னிட்டு 'நாயகன்' ரீரிலீஸ் ஆகவுள்ளது. இதற்கான மெருக்கேற்றும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மணிரத்னம் இயக்கத்தில் கமல் நடிப்பில் வெளியான படம் 'நாயகன்'. 1987-ம் ஆண்டு வெளியான இப்படம் பெருமளவில் கொண்டாடப்பட்டது. இப்போது இப்படத்தினை கல்ட் க்ளாஸிக் என்று கொண்டாடி வருகிறார்கள். இளையராஜாவின் இசையில் அமைந்த பாடல்களும் இதன் வெற்றிக்கு ஒரு காரணம்.

இதில் ஜனக ராஜ், சரண்யா பொன் வண்ணன், டெல்லி கணேஷ், நிழல்கள் ரவி, நாசர் உள்ளிட்ட பலர் கமலுடன் நடித்திருந்தார்கள். மும்பையைப் பின்னணியாக கொண்டு இப்படத்தை உருவாக்கி இருந்தார் மணிரத்னம். இதற்கு ஒளிப்பதிவாளராக பி.சி.ஸ்ரீராம் பணிபுரிந்திருந்தார். இப்படத்துக்கு பின்பு கமல் - மணிரத்னம் இருவரும் இணைந்து பணிபுரிந்த படம்தான் 'தக் லைஃப்'. அப்படம் பெரும் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது.

அஜித் மற்றும் ஆதிக் ரவிச்சந்திரன் கூட்டணியில் உருவாகி சமீபத்தில் வெளிவந்த திரைப்படம் குட் பேட் அக்லி. இப்படம் உலகளவில் வசூலில் பட்டையை கிளப்பியது. அஜித்தை தாண்டி இப்படத்தில் பல விஷயங்கள் ரசிகர்களால் ரசிக்கப்பட்டது. அதில் ஒன்று சுல்தானே பாடலுக்கு நடிகை பிரியா வாரியர் போட்ட நடனம்.

இந்நிலையில், தற்போது பிரியா வாரியர் தனது இன்ஸ்டாவில் வெளியிட்ட சில அழகிய போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.



# கடந்த 10 வருடங்களில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட திரைபிரபலங்கள் - முதலிடத்தில் அந்த நடிகை!



இந்திய சினிமாவின் திரை பிரபலங்கள் எந்த அளவுக்கு பிரபலமாக இருக்கிறார்கள் என்பதை படங்களின் வசூலை தாண்டி, சமூக வலைதளங்களில் அவர்களை எத்தனை பேர் தேடினார்கள்? என்ற விவரத்தை வைத்தும் மதிப்பிடப்படுகிறார்கள்.

அந்தவகையில் கடந்த 10 வருடங்களில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட நடிகர்-நடிகைகளின் பட்டியல் வெளியாகி இருக்கிறது.

இதில் ஷாருக்கான், சல்மான் கான், விஜய், பிரபாஸ் என நாட்டின் முன்னணி நடிகர்கள் எல்லோரையும் பின்னுக்கு தள்ளி பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஷாருக்கான், ஐஸ்வர்யா ராய், ஆலியா பட், இர்பான்கான், அமீர்கான், சுஷாந்த் சிங் ராஜ்புத், சல்மான்கான், ஹிருத்திக் ரோஷன், அக்ஷய்குமார் முறையே அடுத்தடுத்த இடங்களில் தொடருகிறார்கள்.

இந்த பட்டியலில் சமந்தா 13-ம் இடத்திலும், தமன்னா 16-ம் இடத்திலும், நயன்தாரா 18-வது இடத்திலும் இருக்கின்றனர். பிரபாஸ் 29-ம் இடமும், தனுஷ் 30-ம் இடமும் பிடித்து இருக்கின்றனர். மற்ற தமிழ் நடிகர்கள் பெயர்கள் இடம்பெறவில்லை.

# 4-வது திருமணத்திற்கு தயாராகும் டாம் குரூஸ்



ஹாலிவுட் சினிமாவில் டாம் குரூஸ், நடிகை அனா டி அர்மாஸுடன் காதல் என சில நாட்களாக கிசுகிசுக்கப்பட்டு வந்தது. இதுதொடர்பாக இருவரும் எதுவும் கூறாத நிலையில், இருவரும் திருமணம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த ஜோடி இன்னும் திருமண நிச்சயதார்த்தம் செய்யவில்லை. இருப்பினும் திருமணம் தொடர்பான திட்டங்கள் வகுத்து வருவதாக கூறப்படுகிறது.

அந்த வகையில், டாம்- அனா டி அர்மாஸ் திருமணம் விண்வெளியில் நடைபெற உள்ளது. இதனால் விண்வெளியில் திருமணம் செய்து கொள்ளும் முதல் ஜோடி இவர்கள் தான் என்கின்றனர்.63 வயதான டாம் குரூஸ் ஏற்கனவே மூன்று திருமணங்களை செய்து உள்ள நிலையில், தற்போது 37 வயதான அனா டி அர்மாஸை நான்காவதாக திருமணம் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'அதர்ஸ்' - நவம்பர் 7 வெளியீடு



கிராண்ட் பிக்சர்ஸ் தயாரிப்பில் புதுமுகம் ஆதித்ய மாதவன், கவுரி கிஷன், அஞ்சு குரியன் பிரதான வேடத்தில் நடித்திருக்கும் படம் 'அதர்ஸ்'. மெடிக்கல் கிரைம் த்ரில்லராக உருவாகியிருக்கும் இப்படத்தை அறிமுக இயக்குனர் அபின் ஹரிஹரன் எழுதி இயக்கியுள்ளார்.

அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். எடிட்டிங் பணிகளை ராமர் மேற்கொண்டுள்ளார். பிரதீப் சண்டை காட்சிகளையும், சந்தோஷ் நடன அமைப்பையும் கையாண்டிருக்கின்றனர்.

இப்படத்தில் முக்கிய கதபாத்திரங்களில் 'முண்டாசுபட்டி' ராமதாஸ், 'நண்டு' ஜகன், ஹரிஷ் பெரோடி, வினோத் சாகர், ஆர். சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். கடந்த சில வாரங்களுக்கு முன் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியான நிலையில் தற்போது இப்படம் நவம்பர் 7-ம் தேதியன்று வெளியாகவிருப்பதாக படக்குழு அறிவித்துள்ளது.

# ரசிகர்களை கவர்ந்த 'காந்தாரா சாப்டர் 1' முதல் நாள் வசூலே இவ்வளவா?



2022-ம் ஆண்டு கன்னடத்தில் வெளியாகி தென்னிந்திய மொழிகளில் வரவேற்பை பெற்ற படம் 'காந்தாரா'. இப்படத்தின் இரண்டாம் பாகமாக 'காந்தாரா சாப்டர்1' வெளியாகி உள்ளது. 30 நாடுகளில் இப்படம் நேற்று வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ளது.


இந்த நிலையில், 'காந்தாரா சாப்டர்-1' படத்தின் முதல் நாள் வசூல் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, படம் வெளியான முதல் நாளில் சுமார் 65 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வரும் நாட்களில் 'காந்தாரா சாப்டர்-1' வசூலை வாரிக்குவிக்கும் என்றும் முதல் பாகத்தை விட இப்படம் வசூல் சாதனை படைக்கும் என நம்பப்படுகிறது.



காஜல் அகர்வால் உச்சகட்ட கவர்ச்சி போட்டோஷூட்

# "என் ரசிகர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்" - அஜித் நெகிழ்ச்சி



என் ரசிகர்களுக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் என்று நடிகர் அஜித் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் நடைபெற்று வரும் கார் பந்தயத்தில் நடிகர் அஜித்தின் குழு பங்கேற்றுள்ளது.

என் ரசிகர்களுக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். பந்தயத்தை பார்க்க வருவதற்கு அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். இது துபாய், ஸ்பா-ஃபிராங்கோர்சாம்ப்ஸ் மற்றும் ஜெர்மனியின் நர்பர்க்ரிங்கில் நடந்தது. அடுத்த தொடரிலிருந்து, காரில் 'இந்திய சினிமா' என்று எழுதப்பட்ட ஒரு சிறப்பு லோகோவுடன் இந்திய சினிமாவை விளம்பரப்படுத்த திட்டமிட்டுள்ளேன்.

20க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளுடன் உலகிலேயே மிகப்பெரிய திரைப்படத் தயாரிப்பாளர்களாக நாம் இருக்கிறோம். பொழுதுபோக்கும் விளையாட்டும் எப்போதும் வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதியாக இருந்து வருகின்றன. அவை ஒன்றோடொன்று இணைந்தே இருக்கின்றன. கோவிட்-19 காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். மக்களைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருந்தது பொழுதுபோக்கும் விளையாட்டும்தான். எனவே, திரைப்படத் துறையின் ஒரு பகுதியாக இருப்பதை நான் மிகவும் பாக்கியமாக கருதுகிறேன். திரைப்படத் துறையில் 33 ஆண்டுகள் பணியாற்றிய நான், இதையெல்லாம் செய்ய முடிந்ததற்கு காரணம் அன்பும் நல்லெண்ணமும்தான்" இவ்வாறு அஜித் தெரிவித்தார்.

# டீசல் படத்தின் "ஆருயிரே" பாடல் வெளியானது




சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண், அதுல்யா நடிக்கும் 'டீசல்'.

பார்க்கிங்', 'லப்பர் பந்து' என தனது அடுத்தடுத்த ஹிட் படங்களை கொடுத்து வருபவர் நடிகர் ஹரிஷ் கல்யாண்.

துவக்கம் முதலே வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடித்து வரும் ஹரிஷ் கல்யாண், சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் அதுல்யா உடன் நடிக்கும் 'டீசல்' என்ற படத்தில் நடித்துள்ளார்.

படத்தில் இடம் பெற்ற இரண்டு பாடல்களும் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. 'டீசல்' படத்தின் டீசர் வெளியானது.



டீசல் திரைப்படம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வரும் அக்டோபர் 17ம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில், டீசல் படத்தின் "ஆருயிரே" பாடல் வெளியானது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# Durga Puja


@BHUBANESWAR














உதட்டிலே வெண்குழல்
உள்ளுக்குள் புண்
அழல் திவான் போன்ற
நுரையீரல் திவாலாகும்
புற்றுநோய் பற்றும் முற்றும்
வாழ்நாள் வற்றும் இருமல்
உதைக்கும் இதயம் சிதையும்
நிகோர்ட்டின் நஞ்சு சிகரெட்



புகைக்க
அஞ்சு
சீக்கிரமே
வேண்டாமே
மூக்கிலே
பஞ்சு

**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா செஞ்சி**




நித்தம் யுத்தமாய்
அவள் நினைவுகள்,
நீங்காமல் நித்திரையை



கலைத்து
நிழலாடி
கொண்டிருக்கிறது
முத்தத்தின்
வாசனை!

**லி.நௌஷாத் கான்**




## தித்திப்பான நினைவுகள்

நினைவுகள் தித்திப்பாய்
வருவது இன்பமே ,
நெஞ்சினுள் தேனாய் நிற்பது
ஒவ்வொரு நினைவும்
சிரிப்பு சுவையில் பொங்கும்
தித்திப்பான நினைவு ,
பூக்கள் போல மனதில்
மலர்ந்து மணம் வீசும்
பேசிய சிறு வார்த்தை கூட
மனதில் நிற்கிறதே,
சிறு புன்னகை ஆதவனை
போல் வெளிச்சம் தருமே
நினைக்க நினைக்க இன்பம்
வருகுதே... காலம் கடந்து
போனாலும் நிலைக்கும்,



தித்திப்பான
நினைவுகள்
என்றென்றும்
இனிமை தான்

**உஷா முத்துராமன்**




## ஊடுருவல்....

எப்போதும்
காத்திருக்கின்றது...
உனக்கான என் உலகம்...



நீ தான்
ஏறெடுத்துப்
பார்ப்பதே
இல்லை
எனக்கான
உன்
உலகத்தை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## அண்ணல் காந்திஜி

ஆசிய தேசத்தின் ஈடில்லா
ஆன்மிக வாதியே அன்பு
ஜோதியே சுடர்நீதியே எங்கள்
ஆருயிரில் சரிபாதியே
அன்பின் வழியிலே
ஆட்சி நெறிகண்ட
அண்ணலே இன்பக்
கன்னலே!

யேசுவாய் புத்தராய்
எங்கள் மனதிலே
எண்ணினோம்
தவம் பண்ணினோம்.
புகழ் நண்ணினோம்
அடிமைகள் மீண்டிட
கொடுமைகள்



மாண்டிட
ஆசித்தாய்
மண்ணை
நேசித்தாய்!!

**பரிபூரணன்**
குடந்தை

## மனமே வந்து விடு.

அலைந்து
கொண்டிருக்கிறது மனம்.
அழித்துவிட நினைத்தாலும்
அழியாமல், கடந்த
காலத்திற்கும்
எதிர்காலத்திற்கும்
நடுவில் ஊசல் ஆடுகிறது.
நிகழ்காலத்தில் இழுத்து
நிறுத்தினாலும் தாவிக்
குதிக்கிறது. கடந்ததின்
வருத்தங்களும்,
எதிர்காலத்தின் பயமும்
சேர்ந்து நினைவுகள்
நின்று ஆடுகிறது. என்று
நிகழ்காலத்திற்கு திரும்பும்?
மனமே மாறிவிடு.
வந்து விடு. இன்று இந்த



நிமிஷத்திற்கு.
காத்திருக்கிறது
மனம், கடந்த
காலத்தையே
நினைத்தபடி

**ஜி ஏ பிரபா**
கோவை.

## மௌனம் பேசுகின்றது....

கேள்விக் கணைகள்
ஆயிரம் தொடுத்தாலும்..
மௌனம் மட்டுமே
கேள்வியாக.. ஊமையின்
மௌனம் ஒரு நொடி
பதிலாக.. நேர்மையின்
மௌனம் விழி அடி
பதிலாக.. குற்றம் காணும்
மௌனம் குரங்கு தாவலில்..
சலனம் இல்லாத காற்றின்
மௌனம் வியர்வைத்
துளிகளின் ரீங்காரம்...
தெளிந்த நீரோடையின்
மௌனம்..
நிலைக்கண்ணாடியின்
பிம்பம்... இதயத்தின்
துடிப்பின் மௌனம்...
உன் நினைவுகளை
கலைந்த நிமிடங்கள்.. உன்
காதலின் மௌனம்.. என்
கனவு கலைந்த் பின்னும்
தொடர்கின்றது
நினைவுகளுடன்...
தேடல்களில் நாளும்



சுவையான
அனுபவங்கள்..
வாழ்க்கையில்
தேவைப்படும்
ஒரு
உறவாகவே....
நீ...

**கவிஞர்.முனைவர் நா மோகன செல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்

## நல்லவையும் கெட்டவையும் !!

காந்தி வாழ்ந்த நாட்டில் தான்
கோட்சேயும் வாழ்ந்தான் !!

தியாகிகள் வாழ்ந்த
நாட்டில் தான் துரோகிகளும்
வாழ்கிறார்கள் !!

மோதிலால் நேரு வாழ்ந்த
நாட்டில் தான்
நாட்டைச் சுரண்டுபவர்களும்
வாழ்கிறார்கள் !!

காடென்றால் மான்களும்
இருக்கும் புலி சிங்கம் கரடி
போன்றவைகளும் வாழும் !!

நாடென்றால் நல்லவர்களும்



இருப்பார்கள்
நயவஞ்சகர்களும்
இருப்பார்கள் !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி

## ஹைக்கூ கவிதை

எனது பயணம்
எனது பயணத்தின் பொழுது
இயற்கையின் ஊதக்காற்றும்
என்னுடன் சேர்ந்து
பயணித்தது நான் சுவாசிக்க
சிரமப்படுவேன் என்று. ....

**நிலவு**
வானச் சிறையிலிருந்து
விடுபட்டு வண்ண
முகிலுடன் வாதாட
வந்தாயோ! !!!

**பௌர்ணமி**
இரவும் பகலாகி போன
தேன்? பௌர்ணமி தான். .

**வேகம்**
தேடலை நோக்கி போகும்
பொழுது பயணத்தின் வேகம்
அதிகமாக இருக்கும்....

**கானல் நீர்**
கனவுகள் கானல் நீராய்
மாறியது... காடுகணத்து
கானல் நீரும் காணாமல்
போனது.......

**நிலவு**
இருளில் மிதக்கும்
நிலவு பகலை
எட்டிப்பார்த்தது உலகைச்
சுற்றிப்பார்ப்பதற்காக

**அன்னை**
கருவறையை கல்லறையாக
மாற்ற நினைக்காதவள் தான்
அன்னை....

**பேனா முள்**
பேனாவின் முள்
குத்துகின்றதென்று
பேப்பர் சிணுங்கினால்
அர்த்தமுள்ள காவியம்
எதுவும் பிறக்காது..

**பனித்துளி**
பனித்துளியே!புற்களின்
தாகம் தணிக்க நடுநிசியில்
வந்ததேன்?
பகலில் பனிமலையை
பாதுகாக்கச் சென்றாயோ!!

**இரவு**
விடியாத இரவைத் தா
விழியோடு உறவாட..

**அனாதை**
விசும்பும் கண்ணீரை வீசும்
காற்று ஆறத்தழுவியது..

**முத்தம்**
என் நுதலுக்காக கொடுக்கும்
நூறு நிலாக்களை விட



உன் குவிந்த
இதழின்
முத்தம்ஒன்றே
போதுமானது.

**சி.ராஜேஸ்வரி**
முஞ்சனூர்

## தலயணை கனவுகள்

விடிகாலை எழுந்தாயிற்று...
காலைக் கடன்களை
முடித்தாயிற்று....
பக்தி பாடல்கள்
கேட்டாயிற்று....
சிறிது நேரம் யோகா...
சிறிது நேரம் தியானம்....
சிறிது உடற்பயிற்சி..
சிறிய தூரம் நடை பயிற்சி...
முடிந்தாயிற்று....

மனைவி கையால் ஆவி
பறக்க சூடாக காஃபி...

காலை எட்டு
மணிக்கெல்லாம் காலை
நேரத்து சூடான டிபன்....

ஆஹா... இட்டலி எவ்வளவு
மிருதுவாக இருக்கிறது....
திணிக்க... திணிக்க

வாய்க்குள் பஞ்சு மாதிரி
அல்லவா செல்கிறது...
நன்றாக மென்றபோதுதான்
தெரிந்தது அது நிஜமாகவே
பஞ்சு என்று...

"அடப்பாவி மனுஷா
என்னைத்தை நெனச்சி
தூங்கிகிட்டு இப்படி
தலகாணியை மென்னு
சாப்படறீங்க... !"

மனைவியின் அரற்றல்
கேட்க.... கண்விழித்த போது
தான் மேலே முதல்.... வரியில்



இருந்து
கடைசி வரை...
எல்லாம்
கனவு என்று
தெரிந்தது !

**எம்.பி. தினேஷ்.**
கோவை

கீழே விழுந்திருக்க
வேண்டும் போலும். சரிந்து
சாய்ந்திருந்தார்.

சற்று நிலைகுலைந்திருந்தார்
என்றே சொல்லலாம்.

அறுந்து விழுந்த
பையிலிருந்து சிதறியிருந்தன
காய்கள் சில.

உருண்டோடியிருந்த
ஒற்றைத்தக்காளி
யார்சொல்லையும் கேளாது
நடு ரோட்டில் தனியாக!

உடைந்து சிந்தியிருந்த
முட்டையின் மீது
அமர்ந்திருந்த ஒற்றை ஈ!

அறுபதிற்கும் மேற்பட்ட
தோற்றம். உடல் ஏதாவது
கொண்டிருக்க வேண்டும்
அவசியம்.

அரசு மருத்துவமனையின்
வெளி நோயாளியாகவோ,
தனியார் மருத்துவமனையின்
மருத்துவ ஆலோசனை
பெறுபவராகவோ
இருக்கக்கூடும்.

ஒப்பனை ஒட்ட
வைத்துக்கொள்ளாத தளர்ந்த
வயதிற்குரிய தோற்றமே!

வீதிக்குள் செல்கிற
திருப்பத்தின் முனை.

குவிந்து கிடந்த புழுதி
மண்
வாரி விட்டிருக்க
வேண்டும் போலும்.

இரு சக்கர
வாகனத்தின் எடையை
விட அவரது எடை அதிகம்
போலும்.

சாலையின் எதிர்புறம் நின்று
கொண்டிருக்கிறேன்.
அருகே நிறை பாரம்
கொண்டிருந்த லாரி.

அது தொட்டு நின்றிருந்த
காலி வேன்.

சாலை நிறைந்தும் குறைந்தும்
ஓடிக்கொண்டிருக்கிற
வாகனங்கள்.

கடக்கமுடியா தவிப்பில் நான்.

அதற்குள் வந்து கை தூக்கி
விட்ட நான்கைந்து பேர்கள்.

எழுந்து நின்று
கொண்டிருந்தார்.
உடல் நடுங்கியது.

அவரை சுற்றி நின்று
கொண்டிருந்த கூட்டம்
கலைகிறது மெதுவாய்.
அவரது அருகில்செல்கிறேன்.

தண்ணீர் கொடுக்கிறேன்.
முகம் கழுவச்செய்து
ஆசுவாசம் கொள்ளுமாறு
பணித்து விட்டும் அருகாமை
கொண்டிருந்து விட்டும்
சிறிதேயான இடைவெளியில்
கிளம்புகிறேன் அவர்
சென்றதுமாய்!



இரு சக்கரவாகனம்
உசுப்பி ஏறி அமர்கிறேன்.
இப்பொழுது அவர் கடந்த
அதே வழியில் செல்ல
வேண்டியவனாய் நான்!

**விமலன்.**

# நூல் விமர்சனம்

பயோமெட்ரிக் ஹைக்கூ
கவிதைகள்
தமிழ்த்துறை வெளியீடு,
மங்கையர்க்கரசி கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
மதுரை.

கவிஞர் இரா. இரவி




கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் கவிஞர் பரிமளம் சுந்தர் அவர்கள் இந்த நூலை தொகுத்து உள்ளார். அவருடன் பணியாற்றும் ஆசிரிய நண்பர்களும் மாணவிகளும் எழுதிய ஹைக்கூ கவிதைகளை நூலாக்கி உள்ளார். நல்ல முயற்சி பாராட்டுகள். சிறிய நூலாக இருந்தாலும் சீரிய நூலாக வந்துள்ளது.

முதல் ஹைக்கூ கவிதையே முத்தாய்ப்பாக உள்ளது. அழகிய கவிதைகளையும் அடித்து அடித்தே எழுதுகிறது.

அந்த வானம்! (பரிமளம் சுந்தர் ) ஜப்பானியக் கவிதைக்கு இணையக தமிழ்க் கவிஞர்களும் இயற்கை பற்றிய ஹைக்கூ எழுத முடியும் என்பதை மெய்ப்பிக்கும் விதமான ஹைக்கூ நன்று. வானத்தை நாம் பார்த்தால் தினமும் ஒரு மாதிரியாகவும், நேரத்திற்கு ஒரு மாதிரியாகவும் இருக்கும். நேற்று போல் இன்று இருப்பதில்லை. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உலக தத்துவத்தை உணர்த்திக் கொண்டு இருக்கும் வானம் பற்றிய ஹைக்கூ மிக நன்று பாராட்டுகள். கணினியுகத்தில் வளர்ச்சியை கொல் விளையாட்டாகவும் பொருள் பொதிந்த விதமாகவும் வடித்த ஹைக்கூ நன்று விரல்விட்டு எண்ணிய காலம் போய் விரல்களுக்குள் அடைக்கப்பட்டது.

கணினி. (மு. கீதா ) கவிதையை வித்தியாசமாக எழுதும் போது படிக்கும் வாசகர்கள் மனதில் தங்கி விடுகின்றது. பாராட்டும் பெறுகின்றது. இதோ வித்தியாசமான சிந்தனை ஹைக்கூ பௌர்ணமி நிலவில் ஒரு கல் வெட்டு அவளின் முகப்பரு (மு. பிரேமலதா ) இன்றைய நவீன உலகில் ஆண் பெண் நட்பு அவசியம். நட்பும் கண்ணியமாக இருத்தல் வேண்டும்.

நல்ல நட்பால் பல நல்லவை கள் சாத்தியாமாகும், சாதனையும் ஆகும். நட்பு பற்றிய ஹைக்கூ நன்று ஆண்பால், பெண்பால் பொது வானது நட்பால். (மு. சந்தியா ) இன்றைய இளைஞர்கள் பலர் மதுவுக்கும் சிகரட்டிற்கும் அடிமையாகி உடல் நலத்தைக் கெடுத்து, திறமையை சிதைத்து, சீரழிந்து வருகின்றனர். பெற்றோர் அறிவுரை சொன்னா லும் கேட்பது இல்லை. அவர்களுக்கான ஹைக்கூ நன்று. புகை பிடித்தால் இறப்பாய் மது குடித்தால் இறப்பாய் விட்டால் சிறப்பாய்!

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட விதை முட்டி மோதி வளர்ந்து மரமாக வளரும். இதனை முயற்சிக்கு வளர்ச்சிக்கு மனிதனும் பாடமாகக் கொள்ளலாம். குறியீடாக உணர்ர்த்துவது தான் கவிதை. அந்த வகையிலான ஹைக்கூ விதைத்தவன் தூங்குவான் விதை ? (மு. முருகேஸ்வரி) இந்த ஹைக்கூ படித்த போது நான் எழுதிய ஹைக்கூக்கள் நினைவிற்கு வந்தது. விழித்த விதை விருட்சம்!

உறங்கிய விதை குப்பை! விக்கல் எடுத்தால் அதற்கு விஞ்ஞானக் காரணம் வேறு. ஆனால் நம் பழக்கத்தில் யாரோ உன்னை நினைக்கிறார்கள். அதனால் தான் உனக்கு விக்கல் வருகிறது என்பார்கள். இது ஒரு மூட நம்பிக்கைதான். ஆனாலும் விக்கல் வராமலே காதலன் காதலி ஒருவரை ஒருவர் நினைப்பது இயல்பு தான். விக்கல் வரும்போதெல்லாம் உன்னை நினைக்கிறேன். நீ என்னை நினைக்கிறாய் என்று (பாண்டிமீனா) பெற்றோர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவற்றையும் நட்பிடம் பகிர்ந்து கொள்வோம். இந்த உலகில் நட்புக்கு இணை என்பது நட்புதான்.


அந்த நட்பு பற்றி எளிமையான சொற்களின் மூலம் வலிமையான கருத்தை விதைக்கும் ஹைக்கூ நன்று விண்ணுக்கு அழகு நிலவு மண்ணுக்கு அழகு நட்பு. (அருணாதேவி) இயற்கை ரசிப்பு என்பது பலரிடம் இன்று இல்லாமலே போய் விட்டது. இயற்கையை நேரம் ஒதுக்கி ரசித்து மகிழ்ந்தால், கவலைகள் காணாமல் போகும். மனபாரம் இல்லாமல் போகும். இதயத்தை இதமாக்கும். மனதை பதமாக்கும்.

இயற்கையை இனியாவது ரசித்து வாழுங்கள் என அறிவுறுத்தும் ஹைக்கூ விண்ணில் பல வண்ணங்கள் மண்ணிலும் பல வண்ணங்கள் நந்தவனத்தில் மலர்கள் (மோகனப்பிரியா) கவிஞர்கள் வழக்கமாக மானே தேனே என்று எழுதுவதை விடுத்து வித்தியாசமாக சிந்தித்து வித்தியாசமாக எழுதினால் வெற்றியே. உன் முதல் சிரிப்பையும் முதல் அழுகையும் ரசித்த முதல் ரசிகை செவிலியர்! இந்தக் கோணத்தில் இதுவரை யாரும் சிந்திக்க வில்லை என்றே சொல்லலாம். இந்த ஹைக்கூ படித்தவுடன் நம் சிந்தையில் சிறு மின்னலும் உதட்டில் சிறு புன்னகையும் ஏற்படும்.

எழுத்தாளர் சுஜாதா அவர்கள், மூன்று வரிகள் இரண்டு காட்சிகள் ஒரு வியப்பு என்று ஹைக்கூ கவிதைக்கு ஒரு இலக்கணம் எழுதினார். அந்த இலக்கணப்படி அமைந்த ஹைக்கூ இதோ. சிறுவர் பூங்கா ஓய்வெடுக்கும் பட்டாம் பூச்சிகள் (மோ. ஜோதிகா) இந்த ஹைக்கூ படிக்கும் வாசகர்கள் மனக்கண்ணில் அழகிய பூங்காவும் அற்புத வண்ணத்துப் பூச்சிகளும் தோன்றும் என்பது உண்மை. ஹைக்கூவிற்கு சிறப்பு தரும் இந்த நூலில் மொத்தம் 76 ஹைக்கூ கவிதைகள் உள்ளன. எல்லா ஹைக்கூக்களும் சிறப்பாக இருந்தாலும் பதச்சோறாக சில மட்டும் எழுதி உள்ளேன்.

மதிப்புரையில் எல்லா ஹைக்கூ கவிதைகளையும் மேற்கோள் காட்டி விட முடியாது. ஒரு சில ஹைக்கூக்கள், முந்தைய ஹைக்கூக்களை ஒட்டி, போலச் செய்தல் விதமாக உள்ளன. இனிவரும் காலங்களில் அவை தவிர்க்க வேண்டும். உதாரணம், அமாவாசை இரவிலும் மொட்டை மாடியிலும் ரசிக்கிறேன்எதிர்வீட்டு நிலவு! சௌமியா !

பல வருடங்களுக்கு முன் நான் எழுதிய ஹைக்கூ ! அமாவாசையன்று நிலவு எதிர்வீட்டு சன்னலில் இரா. இரவி புதிய முயற்சிக்கு பாராட்டுகள். வாழ்த்துகள்.



## நிலவே... களவாடாதே...

தினம் தினம் முகம் கழுவும்
தாமரைக் குளத்தில்..

மீன்களின் சிறுகடியையும்
தாங்கிக் கொள்கிறது....
வெண்ணிலா...

வேற்றுக் கிரகங்களில்
அடைக்கலம் புகுந்தது...
போன்று அல்லாடிப்
போகிறது...அல்லி மலர்...

சந்திரனைக் காணாமல்...
சந்திர கிரகணங்களில்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## தீரா ஏக்கத்தை சும்மாடு வைத்து சுமக்கும் கிணறு

ரெண்டு ராட்டினங்கள்
விடியலில் சத்தம் பறவைகள்
பறந்து போகின்றன
இரையைத் தேடி
நம்பிக்கையுடன்.

கையிறுகளின்
ஏற்ற இறக்கத்தில்
அலரும் வாளிகள்.

அவரவர் அவசர
முனைப்பில்
அவதிக்குள்ளாகும்
ஊரின் மும்மனைச்
சந்திப்பில் உள்ள
ஒற்றைக்கிணறு.

அமிர்தம் எனும் புனித தீர்த்தம்
வேறில்லை எந்த ஊரிலும்...
பலர் அங்கிருந்து
தூரத்து நகர்களுக்கு
சென்றாலும் இன்னமும்
இருக்கிறது கிணற்றோர ஈரம்.
அடையாளச் சின்னமானது
கிணறு. சேறும் சகதியுமாய்.

புதுப்பிக்க வேண்டி
தீரா ஏக்கத்தோடு
சும்மாடு வைத்து சோகத்தை



நிரப்பி காத்துக்
கிடக்கிறது அந்த
பழமையான கிணறும்,
கிணற்றடியும்...

**எறும்பூர் கை. செல்வகுமார்,**
செய்யாறு.




### வாழ்வு, வசதியும்

நிலமும், நீரும் இல்லைனா நீ
உயிர் வாழ முடியுமா....!

பயிறு விளைச்சல் இல்லைனா
உன் பசிதான் இன்று
தீர்ந்திடுமா....!

கண்ணி பொண்ணு
மலரலேன்னா உன்
சங்கதிதான் பெருகிடுமா...!

வருமானத்தை சிக்கனமா
சேமிக்கலேனா உன்
வாழ்க்கைதான் சிறப்பா
இருந்திடுமா...!

பல கோடிக்கு கார்
வாங்கினாலும் பத்து
ரூபாயிக்கு பிடிக்கும் காற்று
இல்லாமல் ஓடிடுமா....!

சொந்தம் இல்லாத வாழ்க்கை
பட்ட மரமாகும்...!

கொடுத்து வாழும் வாழ்க்கை
நீ வாழ நல்ல உரமாகும்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

### அன்புக்கு நான் அடிமை!

அறுசீர் மண்டிலம்.

அன்பு என்பது
மனிதநேயம்அன்பு என்பது
புனிதநேயம்!
அன்பு என்பது பாசமடா
அன்பு என்பது நேசமடா!
அன்பு என்பது இரக்கமடா
அன்பு என்பது கருணையடா!
அன்பு என்பது பக்தியடா
அன்பு என்பது சக்தியடா!

பண்பு என்பது மனத்தன்மை
பண்பு என்பது குணத்தன்மை!
பண்பு என்பது நடத்தையடா
பண்பு என்பது குடிப்பிறப்பே!
பண்பு என்பது கண்ணோட்டம்
பண்பு என்பது முன்னோட்டம்!
பண்பு என்பது நன்னெறியே
பண்பு என்பது
சொன்னெறியே!

(வேறு)
நேரிசை வெண்பா.

அன்புக்கும் பண்புக்கும்
நாமே அடிமையாவோம்!

இன்புக்கும் ஈகைக்கும்
என்றுமே... மண்புகழ

வாழ்ந்திடுவோம் வண்ணநல்
வாழ்வில் இரண்டிலே

சூழ்ந்திடுவோம்
என்றுமே சொல்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

### திரும்புமா

" நீதி ஒரு நாள் பேசும்
நேர்மை ஒரு நாள்
நடமாடும்..."

தூய்மை ஒரு நாள்
வழிகாட்டும் நல்லவரை
பார்ப்பது அரிது .... "

பேசுவது அரிது
பணக்காரராய்
காண்பதும் அரிது .... "

எளிமை என்பது உடை
போல
உண்மை என்பது
மானம் போல .... "

தூய்மை என்பது
இமைகள் போல
நேற்றைய கால
தூயவர்கள் மீண்டும்
பிறர்பார்களா ...?

தெய்வத்தின் மீது
பய பக்தி குறைந்து
போல பக்தி
நிரம்பி வழிகிறது .... "

உள்ளங்கள் சமன்படும்
காலம் மீண்டு வருமா
மீண்டும் வருமா ...?"



இழந்தது திரும்புமா
இனியும் அதுவும்
சாத்தியமா
காத்திருப்போம்
விழித்திருப்போம் ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

நீ... சொன்னதுக்கெல்லாம்
நான் தலையாட்டுவது உன்
மீது கொண்ட காதல் தான்
காரணமேயன்றி.. நீ உன்னை
அமெரிக்காவாகவோ.
என்னை இந்தியாவாகவும் ...
தப்பு கணக்கு போட்டு
விடாதே....

இந்தியா பாகிஸ்தான்
மீது தொடுத்த சர்ஜிக்கல்
தாக்குதல் போல் உன்
வீட்டில் புகுந்து ... உன்னை
அபகரிக்க நான் தயார் தான்...

ஆனால் சீனா
போல் உன் தந்தை
உள்குத்து வேலை
செய்வாரோ என்ற
பயம் தான்....

இலங்கை போல்
இருந்தால்பயப்பட மாட்டேன்...
உன் அண்ணன்கள்
ஆப்கானிஸ்தான் மனித
வெடிகுண்டுகள் போல்
அல்லவா இருக்கிறார்கள்.....

அதற்காக இலங்கைக்கு
தாரைவார்க்கப்பட்ட கட்ச்சத்
தீவை போல் உன்னை
யாருக்கும் விட்டுக்
கொடுக்கவும் மாட்டேன்....

ரஷ்யா போன்ற என்னுடன்
துணை இருக்கும் என்
உறவுகள்... என்னுடன்
இருக்கும் வரை....
என்னை மீறி யாரும்
உன்னை அவ்வளவு எளிதில்
களவாடி விட முடியாது என்
உயிர்க் காதலியே !



**எம்.பி.தினேஷ்.**
கோவை

### பறந்து கொண்டே இரு

அன்பை வெளிப்படுத்த
இயற்கை எப்போதும்
ஒரு வாய்ப்பைத் தருகிறது.

ஆனால், பார்க்கும்
கண்களுக்கு நாம்
எதிரியாய் தெரிகிறோம்,
துரோகியாக, ஏமாளியாக,
கொடுமைக்காரனாய்...

ஜாதி, மத வெறியோடு,
ஏழையை மதிக்காதவனாய்,
தொண்டனை அனைக்கும்
மனதில்லாதவனாய்,
சுயநலவாதியாக...

இவ்வளவு முகமூடிகள்
ஒவ்வொரு மனிதருக்கும்
சமூகம்
சூட்டிக்கொடுக்கிறது.
நாமோ அதை
மாற்றிக்கொள்ளாமல்,
அதையே நம்
முகமென்று ஏற்றுக்
கொள்கிறோம்.
ஆனால் நினைவில் கொள்,
உன் முகத்தை மாற்ற
ஒருநாள் வரும் அதுநிச்சயம்—

அந்த நேரம் வந்தால்,
அமைதியாய் கடந்து செல்;
உன் உண்மையை இயற்கை
உலகிற்கு காட்டும்.

“நீ இப்படிப்பட்டவனா?” என்று
உன்னை குற்றம் சொன்ன
உலகமே, அதே நொடியிலே
“இவ்வளவு அன்பானவன்
நீயா” என்று மாறி விடும்.

அதற்கான வாய்ப்புகள் வரும்
அவை வந்தவுடன்
அதைப் பிடித்துக் கொள்ள
தவறாதே. ஒரு பறவையாய்
பறந்துகொண்டே இரு;
நிச்சயம், உன் பாதையில்
ஒரு மரம் உனக்கு நிழலாய்
நிற்கும்.



**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

கோபமுற்றிருப்போரே
கேளுங்கள்

குண்டு வீசுவதானால்
கூறுங்கள்



நான் தான்
நாகசாகி
அவள் தான்
ஹிரோஷிமா

**ம.திருவள்ளுவர்**

### பேரன்பும்.. பெருவலியும்....

எல்லையற்ற இயற்கைப்
பெருவெளியில்
தன்னந்தனியே உன்
நினைவுகளும்.. நானும்...

உணர்வில்
இழைந்தாடுகிறாய்...
என்னோடு..

ஓடிப் பிடித்து விளையாடும்
நேரத்தில்...

கணநேரத்தில் காணாமற்
போன உன் நினைவுகள்....

தேடி ஓடிக்கொண்டே
இருக்கிறேன்.. நான்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

### துளிப்பாக்கள்

மருத்துவச் சீட்டு
மகனுக்கு வேதனை
அப்பா கூலி வேலை!

அவன் வளர்க்கும் நாய்
அவன் வீட்டு சோபாவில்
தரையில் அவன் தாய் !

கவிஞரின் மனக்குதிரை
ஓடத் தொடங்கியது
கவிதை வரிகளில்!

வானில் மிதக்கும்
துடுப்பில்லா படகு
பிறை நிலா



கீழே உதிர்ந்த
இலை
ஏக்கமுடன்
பார்த்தது
மரக்கிளையை.

**பூ.சுப்ரமணியன்**
சென்னை

### மின்னும் விடியல்

இரவு முடிய பளிச் வெளிச்சம்
வரும், மேகங்களில் பொன்
நிறம் அழகாக பிறக்கும்.
உள்ளம் வருடும் காற்றில்
நம்பிக்கை வரும்,
மண்ணில் மலர்கள் அதரம்
விரித்து சிரித்து மலரும்
புள்ளினகள் பாடும் இசையில்
நாள் தொடங்கும்,
புதிய வழிகள் நமக்காக
திறக்கும். நிழல் நீங்கி
நெஞ்சில் ஒளி வரும் நேரம்,
விடியலின் வண்ணம்
கனவாகும் மின்னும் அந்த
ஒளி நம்பிக்கையின் விதை,



ஒவ்வோர்
விடியலும்
வாழ்க்கையில்
மகிழ்ச்சிக்கு
அச்சாரமிடும்
நேரம் .

**உஷா முத்துராமன்**

### மனித நேயம் வேண்டும்

மண்ணில் பிறந்த மனிதன்
வின்னை தொட்டான்....!

வின்னை தொட்ட மனிதன்
சாக துணிந்து கெட்டான்...!

அனைத்தையும் கண்டரிந்த
மனிதன் அனைத்தையும்
கொடுக்கும் பூமித்தாயை
காக்க மறந்தான்...!

சாமிக்கு கோவில் கட்டிய
மனிதன் சக மனிதனை
சாகடிக்க மனம் துணிந்து
விட்டான்...!

வேடிக்கையான இவ்வுலகில்
விருந்தாளி நாம் என்பதை
மறந்து விட்டான்....!

சக மனிதனை நேசி....
உனக்கு கிடைக்கும்
ஊநல்லாசி....!!
லட்சுமி பூஜை இன்
நாளில் எல்லாம் பெற்று
வாழ்வோம்....!!

**பொன்.கருணா,**நவி மும்பை

நடுங்கித்தான் நான்
போனேன் நிலநடுக்கம் என
நினைத்தேன் இயற்கையின்
சீற்றமோ பெரு மழையோ
கடும் புயலோ மேகம்தான்
வெடித்ததோ காட்டாற்று
வெள்ளமோ , சுழன்றடிக்கும்
சூறாவளியோ எப்படித்தான்
வாழ்வது என நினைத்து
இயற்கையை நிந்திக்கும்
மன நிலையில் என்னுள்ளே
எனக்கொரு அசரீரீ
இயற்கை பேசியது
என்னுள் இருந்து என்னிடம்
கேட்டது இயற்கை
நான் சீற்றம் கொள்வேன்
நான் படைத்த நீயே என்னை
வஞ்சித்தால் ? என் படைப்பில்
நான் படைத்த அன்னிலும்
போட்டி உண்டு
பொறாமை
உண்டு போட்டியும்
பொறாமையும்
பசியாரும் மட்டிலுமே :
மிகையோ ?
உன் இனத்தில்
மட்டிலுமே
போட்டியும் பொறாமையும்
பசியோடு முடிவதில்லை
உண்டு பசியாறிய பின்னும்
ஒருவருக்குள் ஒருவருக்கு
போட்டி நாட்டிற்கு நாடு
போட்டி பொறாமை
பகை ஏனோ பணத்திற்கு
மட்டுமே பணத்தால் ஆனதோ
நான் இயற்கையில்
படைத்திட்ட இவ்வுலகம்
என்னை ஆட்ட நினைத்தால்
நான் நினைத்தால் நான்
ஆடினால் ஒரு நொடி போதும்
ஒன்றும் இல்லை
என்றாகிவிடும்
என்னை மீறி இங்கு எங்கும்
எதுவும் என்றும் நடப்பதில்லை
நடக்கவும் நடக்காது முடியாது



இதை என்றும் மனதில்
கொள் மனிதா
இயற்கை நான்
இன்றேல் எதுவுமில்லை
இவ்வுலகில்

**ஓம் குமார் P N,**
மதுரை

1. அஞ்சாத மரங்கள் எல்லாம்
சிரித்ததாம் விறகு வெட்டியின்
கோடாரியின் கைப்பிடி நம்மில்
ஒருவன் என்று

2. பணம் நிரந்தரம் இல்லை
என்று சொன்னவர்கள் யாரும்
இப்போது உயிருடன் இல்லை
பணம் மட்டும்தான்
நிரந்தரமாக இருக்கு.

3. புத்திசாலி அனைத்தும்
தெரிந்து வைத்திருப்பான்
சாமர்த்தியசாலி
அனைவரையும்
தெரிந்து
வைத்திருப்பான்

4. நமக்கு
பிரச்சனையே
வயிறுதான் சிலர் குறைக்க
ஓடுகிறார்கள் சிலர் நிறைக்க
ஓடுகிறார்கள்

5. கடவுளின் கருவறை என
மலர்கள் மகிழ்வதும் இல்லை
மனிதனின் கல்லறை என
மலர்கள் அழுவதும் இல்லை

6. மனிதன் நிர்வாணமாக
இருந்தபோது இயற்கை
மானத்துடன் இருந்தது
மனிதன் நாகரீகம்
அடைந்தவுடன்



இயற்கை நிர்வாணமாக
மாறிவிட்டது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

1. சுட்டி காட்டுவது
அக்கறையின் வெளிப்பாடு
குத்தி காட்டுவது
பொறாமையின் வெளிப்பாடு

2. உடல் சோர்வை அம்மா
பொருட்படுத்துவது இல்லை
மனச்சோர்வை அப்பா வெளி
காட்டுவது இல்லை

3. உங்கள் வாழ்க்கையில்
உங்களுக்கு இரண்டு நபர்கள்
தான் நண்பர்கள் ஒன்று
கண்ணாடி மற்றது நிழல்

4. தவறு செய்யும் போது
மனம் யாரிடமும் யோசனை
கேட்காது தண்டனை
கிடைத்து விட்டால்
எல்லோரிடமும் ஆறுதலை
எதிர்பார்க்கும்

5. கணவனின் கைகள்
அழுக்கு பட்டால் தான்
மனைவியின் கைகள்
மினுமினுக்கும்

6. படித்தாலும் புரியாதது
பெண்கள் படிக்கத் தவறிய
புத்தகம் தந்தை படிக்க
விரும்புகிற புத்தகம் அன்னை
படித்ததும் பிடித்துப் போகும்
புத்தகம் மழலை தொலைக்கக்
கூடாத புத்தகம் வாழ்க்கை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### பருவம்....

குழந்தை பருவம் நினைத்தது எப்போது நாமும் பெற்றோர்கள்
கைதுணையின்றி நடக்கப் போகிறோம் என....

பத்து வயது பருவத்தில் நினைத்தது நாமும் வாலிபனாகி போல்
எப்போது கல்லூரிக்கு செல்லப் போகிறோம் என....

வாலிபப் பருவம் நினைத்தது நாமும் இளைஞர்களை போல்
எப்போது திருமணமாகி செட்டிலாக போகிறோம் என....



இளைஞர் பருவம் நினைத்தது, குடும்ப பாரமும்,
வேலையும் போதுமென்றாகிவிட்டது எப்போது
ஓய்வு பெறுவோம் என....

முதுமை நினைத்தது ... நோயோடு
போராடி வாழ்வதைவிட குழந்தையாகவே
இருந்திருக்கலாமோ என்று....!

**எம்.பி. தினேஷ்**, கோவை

### அகிம்சை:

கொடுமைக்குக்
கொடுமையால் பதில்
கொடுப் பதே இம்சை
கொடுமையைப்பொறுமையாய்
எதிர்க்கும் வேளையிலும்
தடுப்பதையும் அமைதியாய்
தடுக்கும் முறையே
அகிம்சை என்போம்
அவனியில் அதையே!
அகிம்சையில் கூட
ஆயிரம் துயருண்டு
எடுக்கும் முறையால்
எண்ணாத இன்னல்கள்
தடுக்கும் மற்றும்
துயர்தந்து நிற்கும்
காந்திய முறையில்
அகிம்சை என்றாலும்!

**வைரமணி** , சென்னை



### எல்லாமே வயிற்றுக்குத்தான்

இறைவன் படைப்பில்
இயற்கையாகவே
மறைத்து வைத்தான்
பசியென்பதனை
பசியொன் றில்லை
என்றால் உலகில்
நிசியிலும் பகலிலும்
நினையான் மனிதன்
விசையாம் இறைவனை
விந்தை உலகிதில்
உலகில் மனிதன்



உழைப்பது
எல்லாமே
நலமுடன்
வா(ழ)(ழும்)
வயிற்றுக்
குத்தான்!!

**வைரமணி** ,
சென்னை

## நவராத்திரி உற்சவம் நிறைவு (ம) திருவிளக்கு பூஜை வழிபாடு

**திருவண்ணாமலை, அக்.4:**



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி நிறைவு விழாவை முன்னிட்டு அபிஷேகம், அலங்காரங்கள் மற்றும் மாலை திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

ஏராளமான பெண்கள் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டு அம்மனை வேண்டி அருள் பெற்றனர். பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாரதனை நடைபெற்றது. பிரசாதங்களும்வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நமது தேசத்தந்தை காந்தி பிறந்தநாள் விழா





**திருவண்ணாமலை, அக்.4:**

திருவண்ணாமலை மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் தலைமையில் காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் . மற்றும் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் C. N. அண்ணாதுரை அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புத்தகத் திருவிழா



புதுக்கோட்டை புத்தகத் திருவிழா அரங்குகளை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

## சாட்டையால் அடித்து பேய் விரட்டும் வினோத திருவிழா



திருச்சி மாவட்டம் தா.பேட்டை அடுத்த வெள்ளாளப்பட்டி அச்சப்பன் கோவிலில் விஜய தசமி தினத்தன்று பெண்களை சாட்டையால் அடித்து பேய் விரட்டும் வினோத திருவிழா நடந்தது.

## கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கிவைத்தார்.



செந்துறை ஒன்றிய பகுதிகளில் ரூ.2.33 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று தொடங்கிவைத்தார்.

# வாசகர் கடிதம்

ஐந்து
ஆண்டுகளுக்குப் பிறகு
இந்தியா-சீனா இடையே
நேரடி விமான சேவை
இந்திய ஜனநாயக
கட்டமைப்பை
முழுமையாக தாக்கி
வருகிறது
பாஜக#கொலம்பியாவில்
ராகுல் காந்தி பேச்சு
காசாவுக்கு உதவிப்
பொருட்கள் கொண்டு
சென்ற கப்பல்கள்
தடுத்து நிறுத்தம்
புஸ்ஸி ஆனந்தைக்
கைது செய்ய மூன்று
தனிப்படைகள் அமைப்பு
விஜய்யின் பிரச்சாரம்
அடுத்த இரண்டு
வாரங்களுக்கு
ரத்து#தவெக அறிவிப்பு
ஆதவ் அர்ஜுனாவின்
பதிவு உச்சக்கட்ட
பொறுப்பின்மை
#கனிமொழி ஆவேசம்
அரசியல்
விளையாட்டைத் துவங்கி
விட்டது பாஜக#விசிக
தலைவர் திருமா
செங்கோட்டையன்
ஆதரவாளர்கள் மேலும்
40 பேரின் பொறுப்புகள்
பறிப்பு
சென்னை நடப்பு
அரையாண்டில் 995
கோடி சொத்து வரி வசூல்
புதுக் கவிதைகள்
அருமை
நூல் விமர்சனம் வெகு
நேர்த்தி
வாசகர் கடிதங்கள் சிறப்பு
கரூர்
அசம்பாவிதம்#விஜய் மீது
செந்தில் பாலாஜி சரமாரி
குற்றச்சாட்டு
ரெப்போ வட்டி
விகிதத்தில்
மாற்றமில்லை#5.5% ஆக
நீடிக்குமென ரிசர்வ் வங்கி
அறிவிப்பு
பரிவாஹன் பெயரில்
வரும் வாட்சப்
லிங்க்-களை திறக்க
வேண்டாம்#சைபர் கிரைம்
எச்சரிக்கை
வேலூர் பேராசிரியரிடம்
80 லட்சம் ஏமாற்றிய
இளம்பெண் கைது
மும்பை தாக்குதலுக்குப்
பிறகு அமெரிக்காவின்
அழுத்தத்தால் போர்
தொடுக்கவில்லை#ப
சிதம்பரம் ஒப்புதல்
எச்1பி விசா கட்டண
உயர்வால் இந்தியாவுக்கு
பணிகளை மாற்ற
அமெரிக்க நிறுவனங்கள்
பரிசீலனை
அமெரிக்க அரசு
நிர்வாகம் முடக்கம்#பணி
இழக்கும் சூழலில்
ஊழியர்கள்-பின்னணி
என்ன?
டிரம்பை சந்தித்த பிறகு
பகிரங்க மன்னிப்பு கேட்ட
நெதன்யாகு
வெனிசுலாவில்
ஆட்சிக் கவிழ்ப்பு
நிகழ்த்த அமெரிக்கா
திட்டம்#போரை
நிறுத்துவது/
ஆட்சிக்கவிழ்ப்பு
எல்லாமே நீர்தானோ?
நோபல் பரிசு#அமெரிக்க
அதிபர் மீண்டும் குமுறல்
பாகிஸ்தான் குண்டு
வெடிப்பில் 13
பேர் உயிரிழப்பு
#காயமடைந்த 32 பேர்
மருத்துவமனையில்
அனுமதி
ஈரானை மீண்டும் தாக்க
அமெரிக்கா, இஸ்ரேல்
திட்டம்
உள்நாட்டுப் போர்
நடக்கும் சூடானில்
இனப்படுகொலை,
பஞ்சம் காலராவால்
சூழப்பட்ட மக்கள்
வியட்நாமில் புவாலாய்
புயல் #பலி எண்ணிக்கை
அதிகரிப்பு



-பி. சுரேகா
சென்னை

எனக்குப் பரிச்சயமான
தமிழ் நாடு இ பேப்பர்
குழுமத்தின் வாசக சொந்தங்கள்
சிலரிடம்
சர்வே கண்ணோட்டத்தில்
அலைபேசியில் தொடர்பு கொண்டு
பேசினேன்.
சர்வே பொருள்;
தமிழ் நாடு இ பேப்பரில் தங்களை
மிகவும் கவர்ந்த அம்சம் எது?
நான் உரையாடிய வாசகர்களின்
எண்ணிக்கை 14 . முதலில்
சர்வேயில் கிடைத்த சுவாரஸ்ய
அம்சங்களைப் பற்றி பேசுவோம்.
அதற்குப் பிறகு சர்வே ரிசல்ட்டு க்கு
வருவோம்.
14 வாசகர்களில் ஆண்கள்: 12.
பெண்கள்: 2
இங்கேயும் ஆணாதிக்கக்
கொடுமையா?
என்று உங்களில் சிலர்
ஜோவியலாக சிரித்து
மனதுக்குள் கேட்பது புரிகிறது...
புரிகிறது.
நிச்சயம் அப்படி இல்லை என்று
சத்தியம் அடித்துச் சொல்கிறேன்.
எனக்கு சட்டென்று நினைவுக்கு
வந்த தமிழ் நாடு இ பேப்பர்
வாசகர்களை வேக வேகமாக
பட்டியல் இட்டேன்.
14 வரை தடையின்றி
பெயரை எழுத எழுத
வந்தார்கள். அடுத்து என்று
தலையில் கை வைத்து யோசிக்கும்
தருணத்தில் 14 போதும் என்று
எல்லை நிர்ணயித்து நிறுத்திக்
கொண்டேன் என்பது தான் நடந்த
உண்மை
இப்போது திரும்பவும்
வாசகர் பெயர் பட்டியலை
பிரத்தியட்ச பார்வையில்
நோட்டம்
இட்டேன்.
முதலில் உணர்வுக்குப் பட்டது,
அந்த 14 பேர்களின் மொபைல்
நம்பரும் என் மொபைல் வசம்
இருந்தது. ஆஹா...
பரவாயில்லையே...
ஆகச்சிறந்த முறையில் தான்
பட்டியல் போட்டு அடுக்கி
இருக்கிறேன் என்று எனக்கு
நானே சபாஷ் போட்டுக் கொண்டு
சந்தோஷித்துக் கொண்டேன்.
அடுத்த மகிழ்ச்சி என்ன தெரியுமா?
அந்த 14 பேர்களும் வெவ்வேறு
மாவட்டம் சார்ந்தவர்களாக
இருந்தது. என்ன ஆச்சரியம்
பாருங்கள்.
இது இயல்பாக நடந்ததே தவிர,
முன்
யோசனையுடன் திட்டமிட்டு நடந்தது
இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.
அடுத்து வந்த உணர்வு என்ன
தெரியுமா?
மெல்லிய ஆதங்கத்துடன் மெல்லிய
வருத்தம்.
அந்த 14 பேர் பட்டியலில் 12
பேர் ஆண்கள் 2 பேர் பெண்கள்.
இதுவும் திட்டம் எதுவும் இல்லாமல்
இயல்பாக நடந்தது தான்.
ஆகவே ஆணாதிக்க சர்வே
என்ற குற்றச்சாட்டிற்கு சுத்தமாக
வழியில்லை.
அடுத்த மகிழ்வான விஷயம்...
நாம் தொடர்பு கொண்ட அந்த 14
வாசக சொந்தங்கள் அனைவரும்,
தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின்
பேரில் அபரிமிதமான பிரியம்
வைத்துள்ளனர் என்பதை எளிதாக
புரிந்து கொண்டு பூரிக்க முடிந்தது.
தலைமை ஆசிரியர் அவர்கள்
ஒரிஸ்ஸா வில் இருந்து கொண்டே
இந்த ஒப்பற்ற பணியை
அற்புதமாக ஆற்றி வருகிறார்
என்பதை
திரும்பத் திரும்ப சொல்லி
தங்களின்
அளவற்ற அன்பையும்
நம்பிக்கையையும் வெளிப்படுத்தி
என்னை ஆச்சரியப்பட வைத்தனர்.
அவர்களில் சிலர் ( நான்கு
பேர்கள்) தமிழ் நாடு இ பேப்பருக்கு
சந்தா கட்டி படிக்கவும் தயார் என்று
தங்களின் பெருந்தன்மையை
தாராளமாக வெளிப்படுத்தினர்.
எனக்கு அது பெருமிதமாக
இருந்தது.
அந்த 14 வாசக சொந்தங்களில்
9 பேர்கள் அருள் தரும் தெய்வம்
இதழுக்கு சந்தாதாரர் என்பது
சந்தோஷமான விஷயமாக
எனக்குப் பட்டது.
சில வாசகர்கள் தங்கள்
புகைப்படங்களை எனக்கு
ஆர்வமுடன்
( நான் கேட்காமலே)
அனுப்பி வைத்து தங்களின் ஆர்வப்
பெருக்கை வெளிப் படுத்தி புருவம்
உயர வைத்தனர்.
இந்தத் தனிப்பட்ட என் சர்வே
சேகரிப்பு க்கு ஒத்துழைப்பு நல்கிய
அந்த 14 வாசக சொந்தங்களுக்கும்
அன்பான நன்றி...
நன்றி!
நாளை சர்வே முடிவு பற்றிய
தகவல்களோடு சந்திப்போம்!



-பி.சிவசங்கர்
கோவை

வணக்கம். 3.10 .25
அன்றைய தமிழ்நாடு
இ பேப்பரில்
முதல் பக்கத்தில் 5
ஆண்டுகளுக்குப்
பின் இந்தியா சீனா
இடையே நேரடி
விமான சேவை
என்பது சீனா
செல்பவர்களுக்கு
மிகவும் பயனுள்ள
தகவல். தங்கம்
விலை பவுன் 88000/-
ஐ நெருங்கியது
என்று அதிர்ச்சியான
தகவலை படித்து
வியந்தேன்.

திருக்குறளை அதன்
பொருளுடன் படித்து
அகம் மகிழ்ந்தேன்.
அதிமுக
வாக்குச்சாவடி
முகவர்கள்
ஆலோசனைக்
கூட்டம் என்று
அரசியலை மிக
அழகாக சொன்னது
பாராட்டுக்குரியது .

இரவில் வைஃபை
ரூட்டரை
அணைக்காமல்
தூங்கினால்
என்னவெல்லாம்
நிகழும் என்று நலம்
தரும் மருத்துவம்
பகுதியில்
ஆரோக்கிய
தகவலை சொன்னது
மிகவும் அருமை
பாராட்டுக்கள்.

நடிகர் விஜய்
அவர்களின் பிரசாரம்
அடுத்த இரண்டு
வாரங்களுக்கு
ரத்து என்று தவெக
அறிவிப்பு செய்தது
அவருடைய
மனநிலையை படிக்க
முடிந்தது .

இதெல்லாம் ஒரு
தலைவர்கள்
பகுதியில் அன்னி
வூட் பெசண்ட்
அவர்களின் வரலாறு
புகைப்படமும் மனது
ஆழமாக பதிய
வைத்த தகவல்
பாராட்டுக்கள்.

துர்கா பூஜா
என்று எல்லா
கோவில்களிலும்
துர்க்கை அம்மனை
அலங்காரத்தை
பற்றியும்
நவராத்திரியின்
சிறப்பு பற்றியும்
வண்ண படங்களாக
கடவுள்கள் பார்க்கும்
போது மனமும்
மகிழ்ச்சி அடைந்தது.
பல்சுவை களஞ்சியம்
பகுதி மிகவும்
அருமை மீம்ஸ்
பலமுறை பார்த்து
சிரிக்க வைக்கிறது.
விடுகதை மிக
எளிமையாக
இருந்ததால்
விடைகளை
கண்டுபிடிக்க
முடிந்தது .
தெய்வீக அருள்
தரும் ஆன்மீகம்
என்ற பக்கத்தில்
வந்த தீய சக்திகளை
அழிக்கும் குலசை
முத்தாரம்மன் என்ற
செய்தி புதுமையான
தகவலாக இருந்தது
பாராட்டுக்கள்.
உலக முதியோர்
தினம் என்ற
படமும் செய்தியும்
மிகவும் அருமை
பாராட்டுக்கள்.
யாக பூஜை காந்தி
சிலைக்கு மாலை
என்று வண்ணப்
படங்களுடன்
பல தகவல்களை
கொடுத்த பக்கம்
மிகவும் அருமை
பாராட்டுக்கள் .
சுற்றுலா பக்கத்தில்
வந்த நீலகிரியில்
வந்த புதிய
போக்குவரத்து
கட்டுப்பாடுகள்
என்று பயணிகள்
செல்வதற்கு
தேவையான
செய்தியை மிக
அருமையாக
தெளிவாக
சொன்னது
பாராட்டுக்கள்.

கிரைம் பக்கம்
மிகவும் அருமை
அதில் உள்ள
செய்திகள் எல்லாம்
படிக்கும்போது
ஒரு விழிப்புணர்வு
வருவது தான்
உண்மை. தினம்
தினம் நல்ல க்ரைம்
கார்னரை கொடுத்து
விழிப்புணர்வு
ஏற்படுத்தும்
தங்களுக்கு
மனமார்ந்த
பாராட்டுக்கள் .

டெல்லியில்
நூற்றாண்டு நிறைவு
விழாவில் அஞ்சல்
தலை வெளியீடு
என்ற செய்தி மிகவும்
அருமை.டெல்லியில்
நடப்பதை
நேரில் சென்று
பார்ப்பது போல
ஒரு பெருமிதம்
கிடைத்தது
பாராட்டுக்கள்.

நோபல் பரிசு
என்று அமெரிக்க
அதிபர் ட்ரம்ப்
அவர்கள் மீண்டும்
குமுறிய அந்த
படமும் செய்தியும்
அயல்நாட்டில்
நடப்பதை மிக
அழகாக தெளிவாக
புரிந்தது. ட்ரம்ப்
சந்தித்த பிறகு
பகிரங்க மன்னிப்பு
கேட்ட செய்தியும்
அயல்நாட்டு
நடப்பினை மிக
அருமையாக
காட்டியது
பாராட்டுக்கள்.

அனைத்து
பக்கங்களிலும்
அருமையான
செய்திகள் மிக
அழகாகவும்
தெளிவாகவும்
சோர்வின்றியும்
படிக்கும்
உற்சாகத்தை
ஏற்படுத்தும்
தமிழ்நாடு இ
பேப்பரின் ஆசிரியர்
குழுமத்திற்கு
மனமார்ந்த
பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்

வாசக சொந்தங்கள்
அனைவருக்கும் வணக்கம்.

காசாவுக்கு உணவுப்
பொருட்களுடன் சென்ற
கப்பல்களை இஸ்ரேல் வழி
மறித்துள்ளது. இரக்கமற்ற
போரின் கொடுமனங்கள்
நிலம், நீர், நெருப்பு,காற்று,
ஆகாயம், என பூதங்கள்
ஐந்திலும் அராஜகத்தை
உமிழ்வது அவலம்.
இனவெறியின் கேவலம்.

ஆர். எஸ். எஸ் சைப்
புகழ்ந்துரைத்து, பாரத மாதா
உருவம் பதித்த நாணயத்தை
வெளியிட்டுள்ள பிரதமர்
தன் நா நயத்தையும்
வெளிப்படுத்தி உள்ளார்.

5 ஆண்டுகளுக்குப் பின்
இந்திய - சீன வான்வழிப்
போக்குவரத்தை மீண்டும்
தொடர்வது அயலுறவில் நல்ல
நகர்வு. ராஜீய அரசியலில்
நட்பும் பகையும் நிரந்தரமல்ல
என்பது நிரூபிக்கப் படுகிறது.

ஹிருன் இந்தியா
அறிக்கையின்படி நாட்டில்
பில்லியனர்களின் தொகை
350 ஐத் தாண்டியுள்ளது.
மும்பை பில்லியனர்ஸ்
பாரடைஸ் ஆகியுள்ளது.
இச்செய்தியை ஏழ்மைக்கண்
கொண்டு நோக்காமல் இதன்
பின்னணியில் உள்ள முதலீடு,
உழைப்பு, லாப, நஷ்ட
காரணிகளையும் கவனம்
கொள்வது அவசியம்.

த. வெ. க. நிர்வாகிகள்
வேட்டையாடப்படுதல்,
திரு. செங்கோட்டையன்
அவர்களின் ஆதரவாளர்களின்
கட்சி நீக்கம், திரு. விஜய்
அவர்களின் பிரச்சாரம்
இரண்டு வாரங்களுக்கு
ரத்து, ஆதவன் அர்ஜுனா
அவர்களுக்கு பொறுப்பின்மை
என்ற திருமதி. கனிமொழி
அவர்களின் கூற்று, நிதித்
தணிக்கை தாக்கல்
செய்யாத கட்சிகளுக்கு
தேர்தல் ஆணையத்தின்
கண்டிப்பு, போன்ற சூடானா
செய்திகளைத் தொகுத்தளித்து
தற்கால அரசியல் நடப்புகளை
வாசகர்களுக்குப் புரிய
வைக்கும் தமிழ்நாடு இ இதழ்
குழுமத்திற்கு நன்றிகள்.

பரிவாகன் செயலி குறித்த
சைபர் க்ரைம் எச்சரிக்கை,
ரயில் பாதை மின்கம்பிகளை
நெருங்குவதன் ஆபத்து
குறித்த ரயில் நிர்வாகத்தின்
மக்கள் பாதுகாப்பு
குறித்த அறிவிப்பு கவனம்
கொள்ளவேண்டிய செய்திகள்.

புவியீர்ப்பு விசை நமது
வாழ்க்கைக்கான வரம்
என்பதை விளக்கியுள்ள
அறிவியல் கட்டுரை அருமை.

இதுவரை 7 போர்களை
நிறுத்தியுள்ள எனக்கு
நொபேல் பரிசு
வழங்கப்படவில்லை என்றால்
அது அமெரிக்காவுக்கு
அவமானம் என்கிறார் ட்ரம்ப்
அவர்கள். அரசு எந்திரம்
நிதிப்பற்றாக் குறையால்
முடங்கிக் கிடப்பது ?

"உங்களுக்கு ஒரு அழகு
இருக்கிறது. உலகம் ஒரு
பெரிய நாடக மேடை.
உங்கள் பாத்திரத்தை
நம்பிக்கையோடு
கையாண்டு வாருங்கள்.
மகிழ்ச்சியான முகமே
அழகான முகம்".
இவையெல்லாம் ஆனந்த
பாஸ்கரில் வந்துள்ள
ஆனந்தியின் அமுத
வரிகள். உற்சாகத்தின்
ஊற்றுக்கண்ணாக
ஒளிர்கின்றன. சபாஷ்.

அன்ன விசாரம், அதுவே
விசாரம். சொன்ன விசாரம்
தொலையா விசாரம் - என்று
பசிப்பினி தீர்க்கும் சைவப்
பெற்றியினை மூர்க்க நாயனார்
வரலாற்றின் வழி வகையாகச்
சொல்லியுள்ளார் திரு.
சிவ. முத்து லெட்சுமணன்
அவர்கள். சூதுபொருவார்,
முதற்சூது, பிற்சூது,
சித்தம் தெளிய ஓதும் நித்த
நியமம் - போன்ற அவரது
அழகிய சொல்லாடல்களும்,
கவித்துவ உரைநடைத்
தமிழும் என் சிந்தையை
என்றும் கவர்வதாக உள்ளன.
வாழ்த்துக்கள்.

"உழைப்பிற்கு என்றும்
பலனுண்டு" கதை மீண்டுமா?
தங்கள் கருவூலத்தில்
தேங்கிக் கிடைக்கும் பிற
படைப்புகளையும் சற்று
நோக்கலாமே!

ஆன்மீகப் பகுதியும்,
பல்சுவைப் பகுதியும்,
கவிதைகளும், வட்டாரச்
செய்திக்குவையும், பிற
அம்சங்களும் சிறப்பாகவே
உள்ளன.

மீண்டும் நாளை சந்திப்போம்.
நன்றி.



-P.கணபதி
பாளையங்கோட்டை













**ஆனந்த பாஸ்கர்**

Advertise Business

செய்தியாளர்கள் தேவை

சென்னையிலிருந்து நாள்தோறும் தமிழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'ஆனந்த பாஸ்கர்' நடுநிலை நாளிதழுக்கு ஆர்வமும், துடிப்பும், ஈடுபாடும் கொண்ட மாவட்ட / தாலுகா செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், விளம்பர முகவர்கள் தேவை.

Call: 933 750 1889

தீபாவளி சிறப்பு சலுகை!

கிணத்துக்கடவு செந்தூர் கார்டனில்

Teak Wood, Car Parking, CCTV, Mosquito Net, RO Water, Screen, Semi Furnished,Modular Kitchen என அனைத்து வசதிகளுடன் கொண்ட

2BHK வீடு விற்பனைக்கு

தீபாவளி முன்னிட்டு உடனடியாக புக்கிங் செய்யும் நபர்களுக்கு உடனடியாக கிரைய செலவு மற்றும் 1 பவுன் தங்க நாணயம் இலவசம்

95665 71702 SAA

குடோன் வாடகைக்கு

கோவை, பாப்பநாயக்கன்பாளையம் லட்சுமி மில்ஸ் அவினாசி ரோடு அருகில் வானகம் அப்பார்ட்மெண்ட் ஏர்டெல் மெயின்ஆபீஸ் பின்புறம் பொரிக்கடை வீதி, சிற்றம்பலம் லேஅவுட் ல்

1800 சதுர அடி

- 30 x 60 அடி அளவு,
- 20 HP பவர் லைன்,
- தண்ணீர் வசதியுடன் வாடகைக்கு உள்ளது

தொடர்புக்கு 98422-55125 -CKNB-

## வாசகர் கடிதம்

கட்சி பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு நெறிமுறை கொண்டுவரப்படும் என முதல்வர் அறிவிப்பு. தங்கம் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. இதற்கு மாற்று உலோகம் ஏதேனும் கண்டுபிடித்தால் பயனுள்ளதாக அமையும். உள்ளூர் செய்திகள் அனைத்தையும் தொகுத்து வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. காலாண்டு தேர்வு விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது கல்வித்துறை எச்சரிக்கை. விஜய் பேசிய போது மின்தடை ஏற்பட்டதா என தலைமை பொறியாளர் விளக்கம் அளித்துள்ளார். கரூர் சம்பவத்தில் யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என கனிமொழி அறிக்கை. சனிக்கிழமை விஜய் கூட்டம் வைத்தது தவறு என பிரேமலதா ஆவேசம்.

சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவில் கட்டுரை பிரமாதம். புதுக்கவிதைகள் அனைத்தும் அபாரமாக உள்ளது. முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதை மிகச் சிறந்த காவியம். ஒவ்வொரு வரியும் தேன் அமுதம் படைத்தது. நெல்லை குரலோன் எழுதிய கவிதை கரூர் சம்பவத்திற்கு சரியான சம்மட்டி அடியாக இருந்தது சமையலறை டிப்ஸ் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆன்மீக செய்திகள் அனைத்தும் தேன் அமுதம். விஜய் போலீசார் மீது குற்றம் சுமத்துவது தவறு என திருமாவளவன் விளக்கம். தமிழகத்தில் அக்டோபர் நாலு வரை கனமழைக்கு வாய்ப்பு. பீகார் தேர்தல் வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. மும்பை எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள் இரண்டு முறை தடம் புரண்டது. வெளிநாட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு நூறு சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்பு அறிவிப்பு. சீனாவில் மிக உயரமான பாலம் திறக்கப்பட்டது. தன்னலம் கருதாமல் செயல்படும் தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தை ஆதரிப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொரு வாசகரும் தங்களால் முடிந்த அளவு தெய்வம் இதழுக்கு சந்தா கட்டியும் உறுப்பினர்களை அதிக அளவு சேர்த்தும் ஆதரவு அளிக்க வேண்டும். தன்னலம் கருதாத தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த . வாழ்த்துக்கள்



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

இடம் விற்பனைக்கு

அரசூர் பவுண்டரி யூனிட் அருகில் பச்சாபாளையத்தில்

1 ஏக்கர் இடம் விற்பனைக்கு

CNC MACHINE SHOP, INDUSTRY மற்றும் முதலீட்டிற்கு ஏற்றது. AKA

✆ 77089 84140

M2 Civil & Interior

HIRING

ADMIN STAFF
SITE SUPERVISOR

Address: No.1, Elango Salai, Teynampet, Chennai-600018.
Ct:8220177658,7358584657

ஹோட்டல்/ லாட்ஜ் விற்பனைக்கு

திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரி அம்மன் கோவில் தேரடி வீதியில் 8500 சதுர அடி 26 ரூம்ஸ் கொண்ட 10 கார் பார்க்கிங் வசதி உள்ளது. பத்திர பதிவு செய்யும்போது உடனடி பணம். Clear Title with Bank Loan. No Brokers.

Call: 99945 62553, 99945 62554, 90032 30032

WANTED


தமிழகதில் உள்ள முன்னனி நிறுவனத்திற்கு MARKETING EXECUTIVE தேவை

SALARY Rs.20000/-

கல்விதகுதி : +12

Call : 861000 96501



## DISTRIBUTORS WANTED
PREMIUM WATER SODA & JUICE

250ml Bottle @ Just Rs 3/-




**87789 30420**

## JOB VACANCY
**Kumbhat Holographics**

- Flexo Printing Machine Operator - 2 Nos.
- Assistants Flexo Operator - 3 Nos.
- Slitting Machine Operator - 2 Nos.
- Flatbed Die - Cutting Operator - 2 Nos.
- Rotary Die - Cutting Operator - 2 Nos.
- Quality Check With Excel Knowledge - 2 Nos.
- Helpers (Below 30 yrs) - 5 Nos.

**Experience:** Minimum 3 years
**Gender:** Male/ Female
**Date:** 29.09.2025 to 11.10.2025
**Time:** 10.00 Am - 3.00 Pm
**Place:** KUMBHAT HOLOGRAPHICS
Plot No: 22A, 7th Street, Phase-3, Ambattur Industrial Estate (North), Chennai - 600098
Contact: 98844 55532 / 86675 66980

A creative CBSE school with a difference

## PHYSICAL EDUCATION TEACHERS

Basket Ball, Table Tennis and Kabaddi
கூடைப் பந்து, மேசைப் பந்து மற்றும் கபடி

விளையாட்டில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**Apply with your photo**
புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெண்களுக்கு மட்டும் தங்கும் இடம் அளிக்கப்படும்.

kavibharathi@gmail.com

KAVI BHARATHI VIDYALAYA
கவி பாரதி வித்யாலயா
#792, T.H. Road Thiruvottriyur, Chennai - 600019.

## TVS 2 Wheeler Showroom @ Chennai
Req. Exp.

- Sales Manager
- Sales Executives (Male / Female)
- Service Advisors
- Technicians
- PDI Technicians
- Floor In-Charge
- Spare Parts In-Charge

Free Accommodation*/Attractive Salary
ESI/PF/Incentives/Annual Bonus

**Ct: 73051 87222**

## அடகு / ஏல நகை மீட்க விற்க
மார்க்கெட் விலையை விட மிக அதிக விலை

**பணம் தேவையா**

## மோனிகா கோல்டு
1070, கிராஸ்கட் 4 வது வீதி
காந்திபுரம், கோவை-12
**98422 39186**
**0422 2481179**

## SUKDHA INDUSTRIES PVT LTD
Mullipakkam Junction, Periya Irumbedu
Chengalpet -603 105.

Auto Corrugated Box Manufacturing Unit Requires

- **GENERAL MANAGER** (Age 50-60 yrs) Min 25yrs Exp. in administration
- **MARKETING MANAGER**
- **PRODUCTION & PLANNING MANAGER**
- **CIVIL SUPERVISOR** (Diploma in Civil Engineering)

**9840 44 5294**

Apply Immediately to :
sukdhaindustries@gmail.com

enmac 25 years

A leading South India based MEP Engineering company requires

## HVAC Site Engineer
Qlfn : Diploma or BE
Exp : 2 Years Plus
Salary : Best in the Industry

**Ph: 73388 42074**
www.enmac.in

## WANTED
REQUIRED OFFICE ASSISTANT WITH TALLY KNOWLEDGE FOR A OFFICE IN CHETPET, CHENNAI - 31

ANY BASIC DEGREE

WITH 1 YEAR WORK EXPERIENCE WITH GOOD COMMUNICATION SKILLS

SALARY: 15K ONWARDS

Email: hrgp12@gmail.com

## டி.ஜே.எஸ். கல்விக் குழுமம்
பெருவாயல், கவரைப்பேட்டை
கும்மிடிப்பூண்டி
திருவள்ளூர் மாவட்டம்

பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளை இயக்க அனுபவம் உள்ள

**ஓட்டுநர்கள் தேவை**

வழித்தடம் :
சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டம்

வயது : 40 முதல் 60 வரை

அனுபவத்திற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்

தொடர்புக்கு : 9788877774
9486183985/ 7373730820

## தனியார் கடன் வசதி
- கோவை எல்லைக்குட்பட்ட வீடு, R.C.C. & ஓட்டு வீடு, சிமிண்ட் சீட் வீடு, காலிமனை, இடம், பூமி, தோப்பு போன்ற சொத்து பத்திரங்களின் பெயரில் கடன் வசதி செய்து தரப்படும்.

**10 L முதல்...**

- பத்திரம், மூலபத்திரங்கள், EC போன்ற தேவையான அனைத்து ஆவணங்களும் தயாராக இருந்தால் விரைவாக கடன் வசதி செய்து தரப்படும்.
- புதிய Loan Sanction Letter - ன் பெயரில் ஏற்கனவே வங்கியில் உள்ள கடன் பத்திரத்தை மீட்க கடன் வசதி செய்து தரப்படும்.
- சிறு/குறு உடனடி கடன் வசதி (Cash Loan) (10000 முதல் 50000) வரை செய்து தரப்படும்.
- DSA & ஏஜென்டுகளும் அணுகலாம்.

**Ph : 99436 33559**

VV FINSERVE
No.40, First floor, SVL Complex, Olymbus, Ramanathapuram, Coimbatore - 641045.

## WANTED
Experienced

**MARKETING EXECUTIVE**

required immediately for a reputed Interior Firm operating in Chennai

**90925-66293**

-CKNB-

A Chemical Manufacturing company at MM Nagar REQUIRES

1. **SENIOR MANAGER**
BE Chemical / Mechanical, 8-10 years experience in chemical process industry
2. **MANAGEMENT TRAINEES**
Degree/ Diploma in Chemical/ Mechanical Engg.
3. **ACCOUNTANT** - B.Com with Tally knowledge

Apply to
nuca1610@gmail.com

## WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.

**Sal.23,000/-**

161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

## டிரைவர் தேவை
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை

**98414 41844**
**93455 31270**

## கடன் வசதி
வீடு, காலி இடம் மற்றும் சொத்தின் மீது அடமானக் கடன்
(வட்டி 1 ரூபாய் முதல்)

MMA

விக்டரி ஏஜென்ஸி,
129,பரணி காம்ப்ளக்ஸ், தடாகம் ரோடு, இடையர்பாளையம், கோவை 25

**Call: 89 40 40 40 70**

## repute™
Requires to Market Water & FMCG Products

**MARKETING MANAGER**
Male, Age: 40 Yrs, Should have 5-10 Yrs FMCG Field Exp & Lead Sales Team.

**SALES EXE / OFFICER**
Male, Age: 20 - 35 years
FMCG Field Sales Experience Must.
GOOD SALARY + INC + ALLOWANCE

Send bio-data thru
Ct. M. IBRAHIM
Whatsapp 9094005900
Email: gm-fmcg@repute.in

## ACCOUNTS ASSISTANT
Tally & MS Office knowledge

## OFFICE ASSISTANT
With 2 wheeler, MS Office knowledge

ARCOT MILK TRANSPORT OPERATORS
1, 54th St, 2nd flr, 9th Avenue, Ashok Nagar, Ch-83
Ph: 9841674632 / 9841038333
revaidhyanathan@gmail.com

கோவூர் அருகாமையில் உள்ள தொழிற்கூடத்திற்கு

## BILL COLLECTOR
தேவை உடனே அணுகவும்
CALL @
**89258 18582**

## ஆட்கள் தேவை
பிரபலமான MNC கம்பெனிக்கு

- CNC-VMC ஆப்ரேட்டர்
- டர்னிங் ஆப்ரேட்டர்
- புரோக்கராம்மர் & செட்டர்

பணிபுரியும் இடம் : காஞ்சிபுரம்

**7010776807**

## ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்

எம்.சி. ரோடு, வண்ணாரப்பேட்டை
சென்னை - 600 021.
போன் : 25901771-74
www.facebook.com/sriveerascreations www.sriveeras.com

## URGENTLY REQUIRED
- AC DUCTMAN
- AC TECHNICIAN
- CHILLER ELECTRICIAN
- COPPER PIPE BRAZING
- PIPE FITTER
- PIPE WELDER
- MECHNICAL FITTER
- HVAC PROJECT MANAGER
- MEP HELPER

*Last drawn Salary 20% hike*

RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
**90439 49587,78458 29587**

SRM

தங்கி பணிபுரிய

## பெண்கள் தேவை
வயது : 25 முதல் 45 வரை

**கார்ப்பரேட் ஹவுஸ் கீப்பிங் சூப்பர்வைசர்**
சம்பளம் :ரூ. 30,000/-
கல்வித்தகுதி : Any Degree

**ஹவுஸ் கீப்பிங் ஸ்டாப்**
சம்பளம் :ரூ. 20,000/-
கல்வித்தகுதி : 12th Std

Call : 99400 77012
044 - 27453147

## ஆட்கள் தேவை
எங்கள் உணவகத்திற்கு அனுபவமுள்ள

**தென் இந்திய சமையல்காரர் தேவை.**

காலை உணவு/ஸ்நாக்ஸ்:
இட்லி, தோசை (பிளைன், மசாலா, ரவா), வடை (மெது வடை, மசாலா வடை), உப்புமா, பொங்கல், பேசரட்டு, பரோட்டா.

சம்பளம், உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

முகவரி:
MCN நகர் விரிவாக்கம்,
துரைப்பாக்கம், சென்னை - 97.
தொடர்புக்கு: 9500549097

## கடன் தேவைகளுக்கு
- ரூ.5,000 முதல் ரூ.2,00,000 வரை ஆதார், பான்கார்டு & பேங்க் பாஸ்புக் இருந்தால் ஒரே நாளில் மாத தவணை முறையில் உடனடி லோன் பெறலாம்.
- அனைத்து வகையான EMI Card / Credit Card க்கு உடனடி கடன்.
- தனிநபர் கடன், தொழிற்கடன், வாகனக்கடன், சொத்தின் பெயரில் பேங்க் & பைனான்ஸில் கடன் உதவி செய்து தரப்படும்.

EASY FINANCIAL SERVICES
97, 5th St. Ext., DEVA ANBU SELVAM COMPLEX
GANDHIPURAM, COIMBATORE - 12.
**99408 50431**

## உடனடி கடன் உதவி
QUICK PROCESS

- **தனிநபர் கடன் வியாபாரக் கடன்**
ஆதார் கார்டு, பேன் கார்டு போதும்
10 ஆயிரம் முதல் 2 லட்சம் வரை
ஒரே நாளில் கடன் உதவி
- சிபில் 750 மேல் இருந்தால் ஆதார் கார்டு, பேன் கார்டு போதும் 5 லட்சம் வரை உடனடி கடன்
- பென்சன்தாரர் கடன் மத்திய மாநில அரசு
- அரசு ஊழியர் & தனியார் மாத சம்பளதாரர் கடன் (சிபில் தேவையில்லை)
- வீடு, காலி இடம், சொத்துக் கடன்
- அனைத்து EMI Card (டிஜிட்டல்) மற்றும் Credit Card Swipe க்கு

★★★ உடனடி பணம் ★★★

TEJAAS CREATIONS
Near Chennai Silks, Crosscut Road
Gandhipuram, Coimbatore - 12
**6385712034**
முன்பணம் தேவையில்லை



# பல்சுவை களஞ்சியம்




# கல்லணை ஆஞ்சநேயர்! கதையல்ல நிஜம்!!

தஞ்சை மாவட்டத்தின் பெரிய கல்லணையின் பத்தொன்பதாவது மதகின் ஒரு புறம் மதில் சுவரால் ஏறக்குறைய மறைந்த நிலையில் காணப்படுவது ஓர் ஆஞ்சநேயரின் கற்சிற்பம்.

ஓர் ஆராய்ச்சியின் மூலம் இந்த இடத்திலுள்ள இச்சிறு கோயிலின் சரித்திரம் நமக்கு விளங்கும். சங்க காலச் சோழ மன்னர் கரிகால் பெருவளத்தான் காவேரி கொள்ளிடம் நீர் போக்கைச் சரி செய்து நீர் பாசனத்தைச் சீரமைக்க காவேரியின் மீது ஓர் அணை கட்டினார்.

இந்த அணை நவீன தொழில் நுட்பத்திற்குச் சவாலாக அமைந்துள்ளது.

இதன் கட்டுமானத்தைக் கண்டு வியந்த ஆங்கிலேயர்கள் இதை கிராண்ட் அனிக்கட் என்று பாராட்டினர்.

இக்கட்டுமானம் களிமண்ணில் புதைந்த மிகப் பெரிய பாறாங்கற்களால் ஆனது இதன் நீளம் 1080 அடி, அகலம் 66 அடி மற்றும் ஆழம் 15 லிருந்து 18 அடிவரை கொண்டது.

இது நதி நீர் வெளியேறும் பகுதியில் பாம்பு போல் வளைந்த நிலையில் கட்டப்பட்டது.

தற்போதுள்ள பெரிய கல்லணை 1806 இல் ஆங்கிலேய பொறியாளர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

பல வருடங்களாக நடந்த மிகப் பெரிய முயற்சியின் காரணமாக அடித்தளம் அமைத்து அணையின் பாதைகள் உயர்த்தப்பட்டு சாலைவசதி ஏற்படுத்தித் தந்தனர்.

இப்பணி முடிவுறும் தறுவாயில் ஏற்பட்ட சில விநோதமான நிகழ்வுகள் அங்கிருந்த பொறியாளர்களுக்கும் மற்றும் பெருமளவில் கூடியிருந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வியப்பைத் தந்தன.

ஒரு நாள் காலையில் பணி ஆய்வுக்காக வந்த கீழ் நிலை அதிகாரி ஒருவர் அணையின் 19வது மதகு உடைந்திருந்ததைக் கண்டார்.

இந்த விபத்து கட்டுமானத்தில் பயன்படுத்திய பொருள்களின் தரக்குறைவு காரணமாக ஏற்பட்டது என யூகித்தனர்.

எனவே அதே கட்டுமானம் மீண்டும் ஒரு மாத காலத்தில் மிகுந்த கவனத்துடன் கட்டி முடிக்கப்பட்டது.

கட்டி முடிக்கப்பட்ட சிறிது காலத்திலேயே சோதனையாக அந்த வளைவான மதகுப் பகுதி மீண்டும் உடைந்து விழுந்து கல்லும் மண்ணுமாகக் காட்சியளித்தது.

இதனால் வாயடைத்து நின்ற பொறியாளர்களும் கட்டுமானப் பணியாளர்களும் மீண்டும் ஏற்பட்ட அழிவைக் குறித்து விளக்கம் எதுவும் அளிக்க முடியாமல் திணறினர்.

இரண்டாவது முறையும் உடைந்து விழுந்த நிகழ்வுக்குப் பிறகு அங்கு ஆய்வு மேற்கொண்டிருந்த கீழ்நிலை அதிகாரி முதன் முறையாக மதகு உடைந்து விழுந்த அன்று இரவு தனக்கு ஏற்பட்ட கனவு பற்றிய விபரத்தை வெளிப்படுத்தினார்.

அன்றிரவு என் கனவில் ஆஞ்சநேய ஸ்வாமி தோன்றி நான் நதியின் அடியில் மணற்படுகையில் உள்ளேன்.

என்னை வெளிக்கொணர்ந்து அங்கேயே எனக்குக் கோயில் அமைக்காவிடில் இடிந்து விழுவது தொடரும் இதை எதனாலும் தடுத்து நிறுத்த முடியாது என்றார்.

ஆங்கிலத் தலைமைப் பொறியாளர் இதை நம்பவில்லை. அன்றிரவே மிகவும் ஆச்சரியமான விதமாக அந்தத் தலைமைப் பொறியாளருக்குத் தொடர்ந்து பயமுறுத்தும் கனவுகளாகவே வந்தன.

அவரது கனவில் குரங்குகள் அவரை நெருங்கி நகங்களால் பிறாண்டி காது செவிடாகும் படிச் சத்தம் போட்டுத் துன்புறுத்தின.

இரவு முழுவதும் ஏற்பட்ட பயங்கரமான



கனவுகளால் மிகவும் பாதிக்கப்பட்ட அந்தப் பொறியாளர் மறுநாள் காலையில் தன் நண்பர்கள் குழுவை அழைத்துத் தனது கனவுகளைப் பற்றி விளக்கினார்.

அந்த ஆங்கிலேய நண்பர்களும் இந்தக் கனவுகள் பற்றிய தம் அவ நம்பிக்கையைத் தெரிவித்ததோடு அவர் அந்தக் கீழ்நிலை அதிகாரி கூறிய நம்பமுடியாத கனவுகளை அடிமனத்தளவில் நம்பியதன் விளைவாகவே இது போன்று ஏற்பட்டுள்ளது என்றும் கூறினர்.

நண்பர்களின் வாக்கு அவருக்கு அப்போதைக்குத் தேவைப்பட்ட ஒரு சமாதானத்தைத் தந்தாலும் அந்த அமைதியும் அல்பாயுசாகவே அமைந்தது. அன்றிரவே ஆஞ்சநேயர் பொறியாளர் கனவில் தோன்றி எனக்குக் கோயில் எழுப்பாமல் நீ இந்த அணையைக் கட்டியுள்ளாய்.

நானே இந்த அணையைக் காப்பவன்.

அதனால் அந்தக் கட்டுமானத்தை இடித்துச் சுக்குநூறாக்கினேன்.

மீண்டும் நீ அணையைக் கட்டினாய் அதுவும் நான் இருக்குமிடத்திற்கு மேலாகவே அமைந்துள்ளது.

இதுவும் நிற்காது. நான் இருக்கும் இந்த இடத்தில் ஒரு வளைவை ஏற்படுத்தி என்னைக் காணும் இடத்தில் ஒரு கோவில் அமைத்தால் நீ வெற்றி பெறுவாய் என்றார்.

மறுநாள் பொறியாளர் அங்கிருந்த இடிபாடுகளை அகற்றி அதே இடத்தில் நதிப்படுக்கையைத் தோண்ட உத்தரவிட்டார்.

அங்கே அந்தப் பத்தொன்பதாவது மதகு அமைந்திருந்த இடத்தில் ஆஞ்சநேய ஸ்வாமியின் கற்சிற்பம் காணப்பட்டது.

அந்த ஆங்கிலேயப் பொறியாளர் தீர்மானமாக அங்கு ஒரு கோயிலைக் கட்ட உத்தரவிட்டார்.

பெரிய அளவில் கும்பாபிஷேகமும் நடந்தேறியது. அணைக்கட்டும் கனவில் அவருக்குச் சொல்லப்பட்ட விதத்தில் மாற்றி அமைக்கப்பட்டது.

இந்தக் கோவில் இன்றும் சென்று தரிசிக்கும் வகையிலுள்ளது பாலத்திலிருந்து இரண்டு அடுக்குப் படிகளைக் கடந்து கீழிறங்கிச் சென்றால் அந்தக் கோயிலை அடையலாம்.

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகள் இன்றும் இந்தக் கோவிலின் நித்திய பூஜைக்கான செலவுகளை ஏற்றுக் கொண்டு வருகின்றன.

இதன் ஆதாரங்களை இன்றும் தஞ்சை மாவட்டத்தின் பொதுப்பணித் துறையின் பழைய ஆவணங்களிலிருந்து பெறலாம்.



லால்குடி
- **வெ.நாராயணன்**
மாம்பாக்கம், சென்னை

# கோயில்களில் செய்யப்படும் பிரசாதம் மற்றும் நிவேதனம்

1..கேரளம், இரிஞ்சாலக்குடாவில் பரதன் ஆலயத்தில், கத்தரிக்காயால் தயாரிக்கப்பட்ட வழுதனங்கா எனும் நைவேத்தியம் செய்யப்படுகிறது.
செம்பைவைத்யநாத பாகவதர் இந்தப்பிரசாதம் உண்டு தன் வயிற்று நோய் தீர்ந்ததாக எழுதிய கடிதம் ஆலயத்தில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

2..குற்றாலம் குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மைக்கும் நாள்தோறும் சுக்கு, மிளகு சேர்த்த கஷாயம் படைக்கப்படுகிறது.
அருவியால், அவருக்கு தலைவலியும் ஜலதோஷமும் வராமல் இருக்க இந்த ஐதீகம்.

3..திருநெல்வேலி பூமாதேவி அம்மன் ஆலயத்தில் தமிழ் மாதக் கடைசி வெள்ளியன்று கூட்டாஞ்சோறும் சர்க்கரைப்பொங்கலும் நிவேதனம் செய்வர்.
துவரம்பருப்பு, அரிசி, காய்கறிகள் எல்லாம் சேர்த்து தேங்காய் அரைத்து விட்டு தயாரிக்கப்படுவதுதான் கூட்டாஞ்சோறு.

4..சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு கிச்சடி சம்பா சாதமும் சிதம்பரம் கொத்சும் சிறப்பான நிவேதனங்கள்.


5..கொல்லூர் மூகாம்பிகைக்கு இரவு அர்த்தஜாம பூஜையின் போது சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், லவங்கம், சர்க்கரை சேர்த்து தயாரிக்கப்படும் மணமிக்க கஷாயம் பிரசாதமாகத் தரப்படுகிறது.

6..கல்லணை அருகில் உள்ள கோயிலடி என்ற ஸ்தலத்தில் உள்ள அப்பக்குடத்தானுக்கு தினமும் அப்பம் நிவேதனம் செய்யப்படுகிறது.

7..மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் காலையில் ஞானப்பால் பிரசாதமும் இரவில்பள்ளியறையின்போது கமகமக்கும் சுண்டலும் பாலும் நிவேதனம்செய்யப்படுகின்றன.

8..கேரளம், குருவாயூரில் குருவாயூரப்பனுக்கு சுண்டக்காய்ச்சிய பால் பாயசம் பிரசாதமாக படைக்கப்படுகிறது.

9..கேரளம், திருவிழா மகாதேவர் ஆலயத்தில் மூலிகைகளைச் சாறு பிழிந்து



பாலுடன் கலந்து ஈசனுக்கு நிவேதனம் செய்து பின் பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கின்றனர். இந்த பால் வயிற்றுக் கோளாறுகளைத்

10..நெல்லையில் உள்ள புட்டாத்தி அம்மன் ஆலயத்தில் அரிசி, வெல்லம், ஏலக்காய் சேர்த்துத் தயாரிக்கப்படும் புட்டுதான் பிரசாதம்.

11ஸ்ரீ..ஸ்ரீமுஷ்ணம் பூவராக மூர்த்திக்கு தினமும் அபிஷேகத்திற்குப் பிறகு முக்தாபி சூரணம் எனும் மகா பிரசாதம் நிவேதனம் செய்யப்படுகிறது. இந்த பிரசாதம் நோய்களை தீர்க்கும் மருந்தாகக்கருதப்படுகிறது.

12..நவகிரக, சுக்கிர தலமான கஞ்சனூரில் அன்னாபிஷேகத்தின் போது சுரைக்காய் பிரசாதம் படைக்கப்படுகிறது.

13..கேரள மாநிலம் கொட்டாரக்கராவில் விநாயகப் பெருமானுக்கு சுடச்சுட நெய்யப்பம் செய்து நிவேதித்துக்கொண்டே இருக்கின்றனர். உதயம் முதல் அஸ்தமனம் வரை அப்பம் ஏற்கும் கணபதி இவர்.

14..திருப்பதி வெங்கடாஜலபதிக்கு விதவிதமான பிரசாதங்கள் செய்யப்பட்டாலும் குலசேகரன்படியைத் தாண்டி மண் சட்டியில் நிவேதிக்கப்படுவது தயிர்சாதம் மட்டுமே.

15..திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலில் ஆத்மநாதருக்கு புழுங்கலரிசிச் சோறும் பாகற்காய் கறியுமே பிரசாதம்.

16..திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாளுக்கு தினமும் இரவில் முனியோதரயன் பொங்கல் எனும் அமுது செய்விக்கப்படுகிறது.

17..காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு சுக்கு, மிளகு, கறிவேப்பிலை மணத்துடன் கூடிய காஞ்சிபுரம் இட்லிதான் முதல் நைவேத்யம்.

18..ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் ரங்கநாதருக்கு தேங்காய்த்துருவலும் துலுக்க நாச்சியாருக்கு ரொட்டி, வெண்ணெய், கீரையும் நிவேதனமாகப் படைக்கப்படுகிறது. தினமும் இரவில் அரவணை பிரசாதமும் உண்டு.

19..திருவாரூர் தியாகராஜப் பெருமானுக்கு நெய்யில் பொறிக்கப்பட்ட முறுக்கு தினசரி பிரசாதம்.

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



# ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்
பெண்: இலையை மடிக்க வேண்டாம்.
விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?
பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?
விருந்தினர்: ???

-------------------------

எதிர்பதம்
Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me

----------------------

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"
"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"



------------------------

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"
காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"
காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

------------------------

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ லவ் யூ' சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"
கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

------------------------

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"
பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

------------------------

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .
பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"
பெண் : "ஊஹும். . ."
பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?
பெண் : ஊஹும். . .
பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"
பெண் : ?!?!?!

# வாழ்வுதரும் ஆரோக்கியம்



## வேகவைத்த முட்டை ஆம்லெட்... எது சிறந்தது?



முட்டையை வேக வைத்தோ அல்லது ஆம்லெட் தயாரித்தோ ருசிக்கவே பலரும் விரும்புகிறார்கள். இதில் எதை சாப்பிடுவது சிறந்தது என்ற கேள்வியும் அவ்வப்போது எழுவதுண்டு. குறைந்த கலோரியுடன் உடல் எடையை சீராக நிர்வகிக்கும் உணவு பழக்கத்தை மேற்கொள்ள ஆர்வம் காட்டுபவர்களுக்கு வேகவைத்த முட்டை ஏற்றது.

இது எளிதாக ஜீரணமாகும். செரிமான பிரச்சினை உள்ளவர்களுக்கும் ஏற்றதாக அமையும். இதில் புரதம் அதிகம் உண்டு. எலும்பு ஆரோக்கியத்திற்கு தேவையான வைட்டமின் டி, மூளை செயல்பாட்டிற்கு அவசியமான வைட்டமின் பி12 ஆகிய ஊட்டச்சத்துக்களையும் வழங்கும். வேகவைத்த முட்டைகள் கொழுப்புகள் சேர்க்கப்படாமல் ஊட்டச்சத்துக்களை தக்கவைக்கும் தன்மை கொண்டது.

ஆம்லெட் விரும்புபவர்கள் அதில் ஊட்டச்சத்துமிக்க காய்கறிகளை சேர்த்து உட்கொள்வதுதான் சிறந்தது. அதிலும் நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள், ஆரோக்கியமான கொழுப்பு நிறைந்த பொருட்களை ஆம்லெட்டில் சேர்த்து உட்கொள்ள வேண்டும். அதேவேளையில் ஆம்லெட்டில் எண்ணெய் அதிகம் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். கலோரி, கொழுப்பு உட்கொள்ளலை கட்டுப்படுத்த நினைப்பவர்கள் ஆம்லெட்டை தவிர்ப்பது நல்லது.

## ஒற்றை தலைவலி ஏற்படுவதை தவிர்க்கும் வழிகள்...



இன்றைய இறுக்கமான பணி சூழலில் மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி ஏற்படுவது பலருக்கும் வழக்கமாக உள்ளது. பணி வாழ்க்கை அல்லது தொழில் வாழ்க்கையில் மன அழுத்தம் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. அதன் காரணமாக ஒற்றைத் தலைவலி ஏற்படுவதையும் தவிர்க்க இயலாது. ஆனால் ஒற்றைத் தலைவலி எந்த சூழ்நிலைகளில் உருவாகிறது என்பதை தெரிந்து கொண்டு அவற்றை புத்திசாலித்தனமாக தவிர்ப்பதன் மூலம் இந்த சிக்கலுக்கு ஒரு தீர்வு காணலாம் என்று மருத்துவர் வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒற்றைத் தலைவலி என்ற சிக்கலை பொறுத்தவரை சில உணவு முறைகளாலும் கூட ஏற்படலாம். அதாவது ஆல்கஹால் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளாலும் கூட அது ஏற்படலாம். மோனோசோடியம் குளூட்டமேட் (MSG) மற்றும் செயற்கை இனிப்புகள் ஆகியவையும் அதற்கான காரணங்களாக இருக்கலாம்.

அத்துடன் தட்பவெப்ப நிலை மாற்றங்கள் மற்றும் பார்வையை பாதிக்கக்கூடிய பிரகாசமான மின்விளக்குகள், சுற்றுப்புறத்தில் உள்ள சப்தம், மனம் இருக்கும் வாசனைகள் ஆகியவை காரணமாகவும் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம்.

அது மட்டுமல்லாமல் உடல் நிலையில் ஏற்படக்கூடிய ஹார்மோன் மாற்றங்கள், குறிப்பாக பெண்களுக்கு மாதவிடாய் காலம் அல்லது கர்ப்ப காலங்களில் ஏற்படக்கூடிய ஹார்மோன் மாற்றங்களும் ஒற்றைத் தலைவலியை உருவாக்கலாம் என்று மருத்துவ ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

மேலும் ஒருவருடைய ஒழுங்கு முறையற்ற தூக்கம் முறைகள், அதிகப்படியான மன அழுத்தம், உணவு உண்ணும் நேரத்தை அல்லது உணவையே தவிர்ப்பது ஆகியவையும் ஒற்றைத் தலைவலிக்கு காரணமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு சிலர் உடற்பயிற்சிகள் மீது உள்ள அதீத ஆர்வம் காரணமாக கடுமையாக உடற்பயிற்சி செய்வது, அதிகப்படியான உடல் உழைப்பு, மன பதற்றம் ஆகியவையும் கூட ஒற்றைத் தலைவலியை உருவாக்கலாம்.

பல்வேறு காரணங்களால் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம் என்று குறிப்பிட்ட மருத்துவ வல்லுனர்கள் அவற்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் தெரிவித்துள்ளார்கள். அது குறித்த தகவல்களையும் இங்கே பார்க்கலாம்.


உடலில் போதுமான அளவு நீர்ச்சத்து இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உடலில் நீர்ச்சத்து இல்லை என்றாலும் கூட அது ஒற்றைத் தலைவலிக்கு காரணமாக அமையலாம். அன்றாடம் உண்ணும் உணவு வகைகளில் கண்டிப்பாக பதப்படுத்தப்பட்ட, துரித உணவு வகைகளை தவிர்ப்பது அவசியம். தேவைப்பட்டால் மட்டும் காபி அல்லது தேநீர் அருந்தும் பழக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் அவசியமானது.

ஒற்றைத் தலைவலியை குணப்படுத்துவதற்கு சீரான உறக்க முறைகளை ஒருவர் கடைபிடிப்பது அவசியம் ஆகும். இரவு குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்கு செல்வது, குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையில் இருந்து எழுந்து அன்றாட பணிகளை செய்வது என்ற ஒரு சீரான அட்டவணையை பின்பற்றுவதன் மூலமாகவும் ஒற்றைத் தலைவலியை வராமலேயே தடுக்க முடியும்.

ஊட்டச்சத்துக்களை பொறுத்தவரை விட்டமின் பி-2 என்று சொல்லப்படும் ரிபோபிளேவின் ஒற்றைத் தலைவலி ஏற்படாமல் தவிர்க்க உதவுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

அதிகப்படியான உழைப்பு, மன அழுத்தம், இறுக்கம் ஆகியவற்றை தவிர்ப்பதன் மூலமாகவும் ஒற்றை தலைவலியை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். எதிலும் அளவான போக்கை கடைபிடிப்பதன் மூலமாகவே உடலின் சமநிலையை பேணிக் காப்பதோடு மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி போன்ற பிரச்சனைகளையும் தவிர்க்க முடியும் என்று தான் மருத்துவ வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## பெண்களும் இதயநோய்களும்...



இந்தியா உள்ளிட்ட 50 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளில், ஆண்களை விட பெண்களே மோசமான இதய நோய்களால் அதிகம் பாதிக்கப்படும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா, பிரேசில், சீனா, எகிப்து, அரபு நாடுகள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 50 நாடுகளில் இருந்து பெறப்பட்ட 15 ஆய்வு முடிவுகளின் அறிக்கை, மருத்துவ இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

23 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த ஆய்வறிக்கையில், ஆண்களை விட பெண்களே மோசமான இதய நோயால் அதிகளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதயநோய் அறிகுறிகளை கண்டறிதல், சிகிச்சை ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான வித்தியாசம் பிரமிக்க வைக்கும் அளவுக்கு பெரிதாக உள்ளது. அறிகுறிகள் தோன்றிய பிறகு ஆண்களை விட பெண்கள் தாமதமாகவே மருத்துவமனையை அணுகுகின்றனர். ஆண்களுக்கு நிகரான விகிதத்தில் மருத்துவமனையில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இதுமட்டுமின்றி, இளம் வயது பெண்களிடம் மாரடைப்பு விகிதம் அதிகரித்து வருவதையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டி உள்ளது. கடந்த 1995-2014-க்கு இடைப்பட்ட காலத்தில், 35 வயது முதல் 54 வயதுடைய பெண்களிடையே மாரடைப்பு விகிதம் 21 சதவீதத்தில் இருந்து 31 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதுவே ஆண்களுக்கான விகிதம் 30 சதவீதத்தில் இருந்து 33 சதவீ மாக உயர்ந்துள்ளது.

பெண்கள் ஆண்டுதோறும் உடல் பரிசோதனை செய்து, தங்கள் உடல்நலனை கவனத்தில் வைக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

## ரத்த அழுத்தம், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வெண்டைக்காய்



அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது.

வெண்டைக்காய் சாப்பிடுவதால் ரத்த அழுத்தம், சர்க்கரை நோயாளிகளுக்கு மிகப்பெரிய பயனுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வெண்டைக்காய் ஏ பிரிவு ரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்துகிறது

இது டைப் 2 நீரிழிவு நோய்க்கு சிறந்தது. செரிமானம், நீரேற்றம் மற்றும் வளர்சிதை மாற்றத்தை ஆதரிக்கிறது.

இதில் அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது. இது வயிற்றுப் புண்களைக் குணப்படுத்துகிறது.

நீரழிவு நோயாளிகள் 8 வாரங்களுக்கு ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் 1000 மைக்ரோகிராம் வெண்டைக்காயை உட்கொள்வது சர்க்கரை குறைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதையும் படியுங்கள்:

ஒற்றை தலைவலி ஏற்படுவதை தவிர்க்கும் வழிகள்...

வெண்டைக்காயை காய்கறி உணவாகச் சாப்பிடுவதோடு மட்டுமல்லாமல், வெண்டைக்காய் தண்ணீரைக் குடிக்கலாம்.

2அல்லது 3 வெண்டைக்காய்களை எடுத்து, அவற்றை நன்கு கழுவி, முனைகளை வெட்டி, சிறிய பிளவுகளை உருவாக்குங்கள்.

அவற்றை தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து, தண்ணீரை வடிகட்டி, காலையில் வெறும் வயிற்றில் குடிக்கலாம்.

நார்ச்சத்து நிறைந்த இந்த பானம் செரிமானத்தை மெதுவாக்குகிறது. சர்க்கரை அதிகரிப்பதைத் தடுக்கிறது மற்றும் குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், அதிகப்படியான நார்ச்சத்து வீக்கம் அல்லது லேசான வயிற்று அசவுகரியத்தை ஏற்படுத்தக்கூடும்,

வெண்டைக்காய் நீர் வளர்சிதை மாற்றத்தையும் மேம்படுத்துகிறது. மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் தீரும், அதே நேரத்தில் வலிமை இயற்கையாகவே அதிகரிக்கும்," என்று இருதயநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No

8122664699

## தினமும் 10 நிமிடங்கள் ஓடுவதால் கிடைக்கும் நன்மைகள்



**மன ஆரோக்கியம்**

உங்கள் உடல் உங்களை மகிழ்ச்சியாக உணர உதவும் ரசாயனங்களை வெளியிடுகிறது.

**ஆஸ்துமாவை விரட்டும்**

ஆஸ்துமாவை நெருங்கவிடாமல் நுரையீரல் மற்றும் மூச்சுக்குழாய்களை வலுப்படுத்த உதவுகிறது.

**ரத்த அழுத்தத்தை சீராக பராமரிக்கும்**

ஓடும்போது தமனிகள் சுருங்கி விரிவடைவதால் ரத்த அழுத்தத்தை சீராக பராமரிக்கவும் உதவும்.

**நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும்**

நோய்களால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவு. ஏனெனில் நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும்.

**உடல் எடை குறையும்**

ஓடும்போது ஒரு மணி நேரத்திற்கு 705 முதல் 865 கலோரிகள் எரிக்கப்படும். உடல் எடையும் குறையும்.

**உடல் வலிமை**

ஓடுவதன் மூலம் உடல் வலிமை கூடுவதோடு தசை நாண்கள் மற்றும் தசைநார்கள் வலுப்படும்.

**எலும்பு அடர்த்தி அதிகரிக்கும்**

ஓடும் சமயத்தில் உடல் அழுத்தப்படும்போது எலும்புகளை வலுப்படுத்த அத்தியாவசிய தாதுக்களை அனுப்பும். ஓடுவதன் காரணமாக எலும்புகளை அழுத்துவதால், காலப்போக்கில் எலும்பு அடர்த்தி அதிகரிக்கும்.

**மூட்டுகளை வலிமைப்படுத்தும்**

ஓடுவதன் காரணமாக தசைநார்கள் மற்றும் தசைநாண் களின் வலிமையை அதிகரிப்பதன் மூலம் மூட்டு பகுதி வலிமை அடையும். அதனால் கணுக்கால், இடுப்பு மற்றும் முழங்கால்களில் காயங்கள் ஏற்படும் வாய்ப்பு குறையும்.

**நீரிழிவு நோயை குறைக்கும்**

ரத்தத்தில் சர்க்கரை அளவை பராமரிக்கச் செய்து நீரிழிவு நோய் அபாயத்தை குறைக்க உதவும்.

**எவ்வளவு நேரம் ஓடலாம்?**

தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் ஓடுவது நல்லது. அப்படி ஓட முடியாதவர்கள் 5 முதல் 10 நிமிடங்கள் ஓடுவது கூட உடல் உறுப்புகளுக்கு பலன் அளிக்கும்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் துரைமுருகன் ஆய்வு



வாலாஜா அடுத்த லாலாப்பேட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை அமைச்சர் துரைமுருகன் ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## தவெக தலைவர் விஜய் பேசிய இடத்தை மா.கம்யூனிஸ்ட் கட்சியினர் பார்வையிட்டனர்



கரூர் வேலுசாமிபுரத்தில் 41 பேர் பலியான, தவெக தலைவர் விஜய் பேசிய இடத்தை மா.கம்யூனிஸ்ட் கட்சியினர் பார்வையிட்டனர்.

## அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பரப்புரை கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள்.



தர்மபுரியில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பரப்புரை கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள்.

## நவராத்திரி உற்சவத்தின் நிறைவாக வன்னிமர பார்வேட்டை உற்சவம்



காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் நவராத்திரி உற்சவத்தின் நிறைவாக விஜயதசமியன்று வன்னிமர பார்வேட்டை உற்சவம் நடந்தது.

## முதலமைச்சர் ஸ்டாலின் 150 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்




ராமநாதபுரத்தில் நேற்று நடந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், முதலமைச்சர் ஸ்டாலின் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ. 176 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தார். ரூ. 134.45 கோடி மதிப்பீட்டில் 150 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரியகருப்பன், ராஜகண்ணப்பன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## ரங்கசாமி மல்லிகார்ஜுனா கோவில் தெப்பத் திருவிழா



ஈரோடு தாளவாடி அருகே உள்ள திகினாரை கிராமத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ரங்கசாமி மல்லிகார்ஜுனா கோவில் தெப்பத் திருவிழா நடந்தது.

## உலக விலங்கு தினம் - 2025

உலக விலங்கு தினம் முதன்முதலில் 1925 ஆம் ஆண்டு ஜெர்மன் எழுத்தாளரும் விலங்கு நலனுக்கான வழக்கறிஞருமான ஹென்ரிச் ஜிம்மர்மேன் அவர்களால் கொண்டாடப்பட்டது. உலக அளவில் விலங்குகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அவற்றின் உரிமைகளுக்காக வாதிடுவதையும் அவர் முன்னிலைப்படுத்த விரும்பினார்.




ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்லும்போது, அதிகமான உயிரினங்கள் அழிந்து வருகின்றன, குறிப்பாக மனிதர்களின் பங்கு பெருகிய முறையில் முக்கியமானதாகி வருவதால், நாம் அதிக அவசரத்துடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. விலங்குகள் நமது சுற்றுச்சூழல் அமைப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன மற்றும் பூமியில் வாழ்வதற்கு இன்றியமையாதவை.



இயற்கையும் விலங்குகளும் ஒன்றோடொன்று இணைந்த சூழல்தான் மனிதனின் வாழ்க்கையைச் சிறப்பாக வழிநடத்த முடியும். இப்போதைய காலகட்டத்தில், விலங்குகளுக்கு மனிதர்களாகிய நாம் தீமை செய்யாமல் இருந்தாலே போதும், விலங்குகள் தங்களைத் தங்களே பாதுகாத்துக்கொள்ளும்.

உலகவிலங்குகள்தினத்தின் முக்கிய நோக்கம், உலகளவில் எண்ணற்ற உயிரினங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

**தொகுப்பு: பா. சீனிவாசன், செயலாளர், இந்தியன் ரெட் கிராஸ் சங்கம், வந்தவாசி கிளை.**

## 2006- 2007 ஆம் கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பு படித்த பழைய மாணவர்கள் ஒன்று கூடுதல் நிகழ்வு



**கிருஷ்ணகிரி, அக். 4:** கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அண்ணா அறிவகம் மேல்நிலைப் பள்ளியில் 2006- 2007 ஆம் கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பு படித்த பழைய மாணவர்கள் ஒன்று கூடுதல் நிகழ்வு திப்பம்பட்டி சி. எஸ். கிராண்ட் பூங்காவில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் குடும்பத்தொடு கலந்துக்கொண்டு தங்கள் பழைய நினைவுகளை நினைவு கூர்ந்தனர். ஆசிரியர்களும் அப்போதைய நிகழ்வுகளை நினைவு கூர்ந்து ஒவ்வொரு மாணவர்களை பற்றி கூற மாணவர்கள் மெய்சிலிர்த்தனர். நிறைவாக அனைவருக்கும் நினைவு பரிசாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

## பாஜக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்



தென்காசியில் பாஜக மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி தலைமையில் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடந்தது.

## விழிப்புணர்வு பேரணி




கொடைக்கானலில் வன உயிரின வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

## முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு



கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் நவராத்திரி திருவிழாவில் நள்ளிரவு முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நடந்தது.

## 12 அம்மன் சப்பரங்கள் அணிவகுப்பு



பாளையங்கோட்டையில் தசரா திருவிழாவை முன்னிட்டு 12 அம்மன் சப்பரங்கள் அணிவகுப்பு நடைபெற்றது. திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

## கஸ்தூரி அரங்கநாத பெருமாள் கோயிலின் புரட்டாசி திருவிழாவில், தேரோட்டம்



ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாத பெருமாள் கோயிலின் புரட்டாசி திருவிழாவில், நேற்று தேரோட்டம் நடந்தது.

## ரவுசு மணி



**மனம் என்பது ஒரு மாயசாவி முடியும் நினைத்து விட்டால் எத்தனை பெரிய பூட்டையும் திறந்து விடும்...... முடியாது என்று முடிவு செய்து விட்டால் தான் சாவி என்பதையே மறந்து விடும்.**

**V. முத்து ராமகிருஷ்ணன்**

## அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்



அண்ணா சிலையை அகற்றியதை கண்டித்து திருவண்ணாமலையில் முன்னாள் அமைச்சர் வளர்மதி அவர்கள் தலைமையில், அதிமுகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## திருக்குட நன்னீராட்டு விழா



சிவகாசி வடக்கத்தி அம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டு விழாவுக்கு முன்னாள்அமைச்சர் ராஜேந்திர பாலாஜி ரூ.75 ஆயிரம் நிதி வழங்கினார்.

## மரத்துக்கு நேற்று மலர் தூவி மரியாதை



புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் மரத்துக்கு நேற்று மலர் தூவி மரியாதை செலுத்தினர். அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்றார்.

## திமுக மாவட்ட செயற்குழு கூட்டம்



திண்டுக்கல்லில் திமுக மாவட்ட செயற்குழு கூட்டத்தில் பேசினார் அமைச்சர் ஐ.பெரியசாமி.

## அதிமுகபொதுச் செயலாளர் பழனிசாமி 2 நிமிடம் மவுன அஞ்சலி



கரூரில் 41 பேர் உயிரிழப்புக்காக தர்மபுரி யில் நடந்த பரப்புரையில் அதிமுகபொதுச் செயலாளர் பழனிசாமி 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# சுற்றுலா: எத்தினபுஜா மலைக்கு ஒரு சாகசப் பயணம் செல்வோமா?



எத்தினபுஜா (ETTINA BHUJA) மலை மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஒரு அற்புதமான மலைப்பகுதியாகும். இது சாகசப் பிரியர்களுக்கு மிகவும் பிடித்தமான பகுதியாகும். அடர்ந்த வனப் பகுதியும், நீர்வீழ்ச்சிகளும், சூரிய உதயம் மற்றும் அஸ்தமன காட்சிகளை பார்ப்பதற்கும் ஏற்ற இயற்கை அழகு கொஞ்சும் இடமாக உள்ளது.

இது ஒரு பிரபலமான மற்றும் எளிதான மலையேற்ற இடமாகும். இந்த மலையேற்றப் பாதையின் கடைசி இரண்டு கிலோமீட்டர் மலையேற்றத்தின் மூலம் அதன் உச்சியை அடையமுடியும்.

சிக்மகளூர் (CHIKMAGALUR) மாவட்டத்தில் மூடிகெரெ (MUDIGERE) தாலுக்கா எத்தினபுஜா சிருங்கேரிக்கு அருகே அமைந்துள்ள மலை இது. கடல் மட்டத்திலிருந்து 1,299 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

எத்தினபுஜா என்றால் காளை மாட்டின் முதுகு என்று பொருள்.

இந்த மலை சாகச பிரியர்களின் சொர்க்கமாகும். இந்த மலை பார்ப்பதற்கு காளையின் முதுகு போன்று காணப்படுகிறது. நான்கு முதல் ஐந்து கிலோ மீட்டர் வரை இங்கு ட்ரெக்கிங் செய்ய அனுமதி உள்ளது.

சிக்மகளூரு மாவட்டம் சுற்றுலா பயணிகளின் விருப்பமான இடமாகும். இங்கு அற்புதமான நீர்வீழ்ச்சிகள், அடர்ந்த வனப் பகுதிகள், மலைகள் என சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கிறது.

சுற்றுலா செல்வதற்கு ஏற்ற இடமான எத்தினபுஜா மலை இயற்கை அழகு மிகுந்த இடம். அடர்ந்த வனமும், பனிமூட்டம் நிறைந்த மலைப்பகுதியும், பசுமையான சூழ்நிலையும், வீசும் குளிர்ந்த காற்றும் என சுற்றுலாப் பயணிகளை சொக்க வைக்கும் இடமாக உள்ளது. சுற்றிலும் மேற்கு தொடர்ச்சி மலைகள், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் என உள்ளது. இந்த மலையில் சூரிய உதயம், அஸ்தமனத்தை பார்ப்பது மிகவும் அற்புதமான அனுபவமாக இருக்கும்.

எத்தினபுஜா முடிகெரே மற்றும் சக்லேஷ்பூருக்கு நடுவில் உள்ளது. இது தொடக்க மலையற்றக்காரர்களுக்கு ஏற்ற சிறந்த இடங்களில் ஒன்றாகும்.

அருகிலுள்ள பார்க்க வேண்டிய சுற்றுலாத்தலங்கள் பன்டஜ்ஜே நீர்வீழ்ச்சி, மகஜஹள்ளி நீர்வீழ்ச்சி, சிருங்கேரி சாரதா பீடம்

எப்படி செல்வது?

சிக்மகளூரில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலும், மைசூரிலிருந்து 139 கிலோமீட்டர் தொலைவிலும் எத்தினபுஜா மலை அமைந்துள்ளது. அனைத்து முக்கிய நகரங்களில் இருந்தும் பஸ் வசதி உள்ளது. தனியார் பஸ்களும் இயக்கப்படுகின்றன.

## வேலைவாய்ப்பு கார்னர்

### உங்க ஊரில் உள்ள கனரா வங்கியில் வேலைவாய்ப்பு - 3500 காலியிடங்கள்..!

நிறுவனம் : Canara Bank, வகை : வங்கி வேலை காலியிடங்கள் : 3500

பணிகள் : அப்ரண்டிஸ் (Graduate Apprentices)

பணியிடம் : இந்தியா முழுவதும் கடைசி தேதி : 12.10.2025 அதிகாரப்பூர்வ இணையதளம் : https://canarabank.bank.in/

இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான கனரா வங்கி (Canara Bank), 3500 அப்ரண்டிஸ் (Graduate Apprentices) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்தப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான நபர்கள், 12.10.2025 தேதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதவி: Graduate Apprentices

சம்பளம்: Rs.15,000/- காலியிடங்கள்: 3500

கல்வி தகுதி: கனரா வங்கியில் அப்ரண்டிஸ் பணிகளுக்கு விண்ணப்பிக்க, விண்ணப்பதாரர்கள் இந்திய அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு துறையில் பட்டப்படிப்பு (Graduation) முடித்திருக்க வேண்டும். குறிப்பாக, 01.01.2022-க்கு முன்னதாகவோ அல்லது 01.09.2025-க்கு பின்னதாகவோ பட்டம் பெற்றவர்கள் இந்த வேலைக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். வயது வரம்பு: குறைந்தபட்ச வயது 20 ஆகவும், அதிகபட்ச வயது 28 ஆகவும் இருக்க வேண்டும். வயது வரம்பானது 01.09.2025 தேதியின்படி கணக்கிடப்படும். SC/ ST 5 years, OBC 3 years, PwBD (Gen/ EWS) 10 years, PwBD (SC/ ST) 15 years, PwBD (OBC) 13 years

விண்ணப்ப கட்டணம்: SC/ST/PwBD கட்டணம் இல்லை Others Rs.500/-

விண்ணப்பிக்க கடைசி தேதி: 12.10.2025

விண்ணப்பிக்கும் முறை: கனரா வங்கி வேலைவாய்ப்பு 2025 பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான நபர்கள், அதிகாரப்பூர்வ அறிவிப்பில் உள்ள அனைத்து தேவையான ஆவணங்களுடன், 23.09.2025 முதல் 12.10.2025 தேதிக்குள் https://canarabank.com/ இணையதளத்திற்குச் சென்று ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டும்.

## மூளைச்சாவடைந்த 61 வயது விவசாயி உடல் உறுப்பு தானம் செய்ததில் 5 பேருக்கு மறுவாழ்வு



**கோவை, அக்.4:**

திருப்பூர்மாவட்டத்தை சேர்ந்த ராமசாமி (வயது 61) அவரது மனைவி ஆனந்தநாயகி.மகன்கள் சிபிசக்கரவர்த்தி மற்றும் பூங்கபிலன் ஆகியோருடன் வசித்து வந்தார். இவர் கடந்த 28 ஆம் தேதி இரவு 7.15 மணி அளவில் இரண்டு சக்கர வாகனத்தில் சாலையில் சென்றுகொண்டிருக்கும் பொழுது அவிநாசி அருகில் எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு பலத்த காயம் அடைந்தார்.

உடனடியாக அவர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு. பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை, அவிநாசி ரோடு கேஎம்சிஎச் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவரது உடல் நிலையில் எந்த வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை.

இந்த நிலையில் கடந்த 30ஆம் தேதி அவருக்கு மூளைச் சாவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது மனைவி ஆனந்தநாயகி, மகன்கள் சிபிசக்கரவர்த்தி மற்றும் பூங்கபிலன் ஆகியோர் ராமசாமியின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தார்கள்.

தமிழ்நாடு உறுப்பு தான ஆணையத்தின் அனுமதியுடன் அவரது கல்லீரல், கண்கள், தோல் மற்றும் எலும்பு, ஆகியவை தானமாக பெறப்பட்டது. கல்லீரல் கேஎம்சிஎச் மருத்துவமனைக்கும், கண்கள், தோல் மற்றும் எலும்பு, கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டது.

கேஎம்சிஎச் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் உறுப்புகளை மற்ற நோயாளிகளுக்கு பொருத்துவதற்கு தகுந்த நேரத்தில் மிகவும் திறம்பட செயல்பட்டு உறுப்புகளை அனுப்பி வைத்தனர்.

இது குறித்து கேஎம்சிஎச் மருத்துவமனை தலைவர் நல்ல பழனிசாமி கூறுகையில், மக்களிடையே உடல் உறுப்புதானம்குறித்துஅதிகவிழிப்புணர்வுதேவைப்படுகிறது.

ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டால் அது பலரது உயிரைக் காப்பாற்ற உதவும். பின்னர் உடல் உறுப்பு தானம் வழங்கிய ராமசாமி குடும்பத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

## நீலகிரியில் அக்டோபர் 8,9 தேதிகளில் தமிழ் வளர்ச்சித்துறை நடத்தும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள்

**நீலகிரி, அக்.4:**

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர் களுக்குப் கவிதை, கட்டுரைப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசும் பாராட்டுச்சான்றி தழும் வழங்கப்பெற்று வருகின்றன.

அதன்படி அக்டோபர் 9ந் தேதி 11,12ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் 8ந் தேதி கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் சி.எஸ்.ஐ.(சி.எம்.எம்.) மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பெற உள்ளன.

இப்பேச்சுப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் 11,12ஆம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவிகள் முதன்மைக் கல்வி அலுவலகத்தின் வாயிலாக தாங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரிடமிருந்து கட்டாயம் பரிந்துரைக் கடிதம் பெற்று வர வேண்டும்.

கல்லூரி மாணவ, மாணவிகள் கல்லூரிக் கல்வி இணைஇயக்குநர் வாயிலாக தாங்கள் பயிலும் கல்லூரி முதல்வரிடம் கட்டாயம் பரிந்துரைக் கடிதம் பெற்று வர வேண்டும்.

பள்ளிப் போட்டிகளுக்கு ஒரு பள்ளியிலிருந்து ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் 3 மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

கல்லூரிப் போட்டிகளுக்கு ஒரு கல்லூரியிலிருந்து ஒரு போட்டிக்கு இரண்டுபேர் வீதம் 6 மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப் படுவார்கள்.

வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.10,000 இரண்டாம் பரிசு ரூ.7,000- மற்றும் மூன்றாம் பரிசு ரூ.5,000- என்ற வகையில் பரிசுத்தொகைகள் வழங்கப்பெற உள்ளன.

போட்டிகள் நடத்தப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பெறும்.போட்டிக்கான தலைப்புகள், நடுவர்கள் மற்றும் மாண வர்கள் முன்னிலையில் எடுத்து அறிவிக்கப்படும். இப்போட்டிகளில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## துர்கா பூஜை: நாட்டு மக்களின் நலனுக்காக பிரார்த்தனை செய்த பிரதமர் மோடி

**புதுடெல்லி, அக்.4:**

அஷ்டமியை முன்னிட்டு, டில்லியின் தெற்கு பகுதியில் உள்ள துர்கா பூஜை பந்தலுக்கு சென்ற பிரதமர் மோடி, வழிபாடு நடத்தி பிரார்த்தனை செய்தார்.

டெல்லியின் தெற்கு பகுதியில் உள்ள சித்தரஞ்சன் பூங்கா அல்லது சிஆர் பூங்கா என அழைக்கப்படும் பகுதிகளில் மேற்கு வங்கத்தை சேர்ந்தவர்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர்.

துர்கா பூஜையை முன்னிட்டு இங்கு பல இடங்களில் பந்தல் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுவது வழக்கம்.

இந்நிலையில், அந்த பகுதிக்கு சென்ற பிரதமர் மோடி துர்கை பந்தலில், வழிபாடு நடத்தினார்.

துர்கை மந்திரங்களை கூறி



பிரார்த்தனையில் ஈடுபட்ட பிரதமர், காரி பாரி கோவிலிலும் ஆரத்தி காட்டி பிரதமர் வழிபாடு நடத்தினார். இது தொடர்பாக பிரதமர் வெளியிட்ட சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: மஹா அஷ்டமியை முன்னிட்டு, டெல்லியின் சித்ரஞ்சன் பூங்காவில் நடந்த துர்கா பூஜை கொண்டாட்டத்தில் பங்கேற்றேன்.

இந்த பூங்கா வங்காள கலாசாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. அனைவரின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காக வழிபாடு நடத்தினேன் எனக்கூறியுள்ளார்.

## “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் 742 பேருக்கு நல திட்ட உதவி: அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்

**நாமக்கல், அக்.4:**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சுஜிதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில், 742 பயனாளிகளுக்கு ரூ.70.42 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சுமன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் பேசியதாவது:




“நாமக்கல் மாவட்டத்தில் 238 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 226 முகாம்களில் 97,593 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் மட்டும் 66,876 மனுக்கள் கிடைத்துள்ளன.

மகளிர்விடியல்பயணதிட்டம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் உதவித்திட்டங்கள் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முகாம்களை சிறப்பாக நடத்தும் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு நன்றி” என்றார்.

இதேபோல், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மை, நகராட்சி, ஊரக வளர்ச்சி, மின்சாரம், தொழிலாளர் நலத்துறை, கூட்டுறவு உள்ளிட்ட பல துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலனுதவிகள் வழங்கப்பட்டன.

மொத்தம் 742 பேருக்கு ரூ.70.42 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், ராசிபுரம் நகர்மன்ற தலைவர் கவிதா சங்கர், ராசிபுரம் அட்மா குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் வே.சாந்தி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) ச.பிரபாகரன், பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் ம.கிருஷ்ணவேணி, உதவிஆணையர்(தொழிலாளர் நல வாரியம்) இந்தியா, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் எஸ்.பத்மாவதி உட்பட துறைச்சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திருச்சி விமான நிலையத்தில் புதிய வசதி: திருச்சி எம்பி துரை வைகோ நேரில் ஆய்வு

திருச்சி, அக்.4:

திருச்சி விமான நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வசதியை, திருச்சி எம்பி துரை வைகோ நேரில் ஆய்வு செய்தார்.

இதன் மூலம் மக்கள் எளிதில் பயணம் செய்யலாம். திருச்சி விமான நிலையம் தமிழ்நாட்டின் நடுப்பகுதியில் இருக்கிறது. இது திருச்சிராப்பள்ளி நகரில் இருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்திய விமான நிலைய ஆணையம் இதை நடத்துகிறது. இது தமிழ்நாட்டின் முக்கியமான பயண மையங்களில் ஒன்று. திருச்சி மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு இது ஒரு முக்கிய போக்குவரத்து மையம்.




உள்நாட்டு விமான நிலையம்

இந்த விமான நிலையம் 2009ம் நடுவில் தொடங்கியது. அப்போது இது ஒரு உள்நாட்டு விமான நிலையமாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு இது பன்னாட்டு விமான நிலையமாக மாறியது. இதன் பிறகு, பல வெளிநாடுகளுக்கு விமானங்கள் செல்ல ஆரம்பித்தன. சிங்கப்பூர், மலேசியா, துபாய், குவைத், ஷார்ஜா போன்ற இடங்களுக்கு இங்கிருந்து விமான சேவைகள் உள்ளன. பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகியது. அதனால், விமான நிலையத்தில் புதிய கட்டிடங்களும் வசதிகளும் சேர்க்கப்பட்டன.

2017ஆம் ஆண்டு ஒரு புதிய பன்னாட்டு முனையம் திறக்கப்பட்டது. இந்த முனையம் நவீன வசதிகளுடன் பயணிகளுக்கு சிறந்த அனுபவத்தை தந்தது. இந்த வளர்ச்சி திருச்சியை ஒரு பெரிய விமான மையமாக மாற்றியுள்ளது. இதனைத்தொடர்ந்து மேலும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால் பல்வேறு வசதிகளுடன் புதிய விமான முனையம் திறக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. இது மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலையில் திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட FTITTP தளத்தின் செயல்பாடுகளை திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆய்வு செய்தார். அடிக்கடி பயணம் செய்வோர் இ-கேட் வசதியைப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் குடிவரவு சோதனை விரைவாக முடியும். இது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். இதைஊக்குவிக்க விமான நிலைய நிர்வாகத்தை அவர் வலியுறுத்தினார்.

ஆங்கிலம் மற்றும் தமிழில் FTITTP பதிவு செய்யும் முறை பற்றி அவர் சில அறிவுறுத்தல்களை வழங்கினார். "BUREAU OF IMMIGRATION மற்றும் AAI ஆகியவை FTITTP-க்கு பதிவு செய்வதற்கான சோதனை செயல்முறையை விமான நிலையத்தில் உள்ள டிஜிட்டல் திரைகளில் ஆங்கிலம் மற்றும் தமிழில் ஒளிபரப்ப வேண்டும் என்று கூறப்பட்டது. EGATES-ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பயணிகளுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும், என்று துரை வைகோ கூறினார். இது பயணிகளுக்கு FTITTP மற்றும் இ-கேட் பற்றி புரிய வைக்கும்.

# க்ரைம் கார்னர்

## சமூக வலைதளங்களில் பிரச்சினைக்குரிய பதிவுகளை வெளியிட்ட 105 பேர் கைது

நெல்லை, அக்.4:

நெல்லைமாவட்டத்தில் சமூக அமைதிக்கு இடையூறான பதிவுகளை உருவாக்கும் மற்றும் பகிரும் நபர்களை அடையாளம் காணும் பணியில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: திருநெல்வேலி மாவட்டத்தில் சாதி சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்ற சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்ட காவல்துறையினரால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, இத்தகைய சம்பவங்களில் குறிப்பிடத்தக்க அளவில் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சமீப காலங்களில், சமூக ஊடகங்கள் வாயிலாக சில இளைஞர்கள் தங்களது சமுதாயத்தை உயர்த்தும் விதமாகவும், பிற சமுதாயங்களை தரம் தாழ்த்தும் விதமாகவும் உள்ளடக்கங்களை பகிர்ந்து வருகின்றனர். இது சமூகத்தில் ஜாதிய உணர்வுகளை தூண்டும் அபாயத்தை உருவாக்கி, பொதுமக்களிடையே தவறான புரிதல்கள் மற்றும் குழப்பங்களை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

காவல்துறையின் மூலம் தீவிர கண்காணிப்பு:

சமூக அமைதிக்கு இடையூறாக அமையக்கூடிய பதிவுகளை உருவாக்கும் மற்றும் பகிரும் நபர்களை அடையாளம் காணும் பணியில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, தடை செய்யப்பட்ட அபாயகரமான ஆயுதங்களை காட்சிப்படுத்தும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் உள்ளிட்ட பதிவுகள் தொடர்பாக குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழக்குப்பதிவு மற்றும் கைது: சமூக வலைதளங்களில் பதிவிடப்படும், பிரச்சினைக்குரிய பதிவுகள், சாதிய ரீதியிலான பிரச்சினைக்கு முக்கிய காரணியாக இருந்து வருவதால், இது போன்ற பதிவுகள் செய்பவர்கள் மீது பாரபட்சமில்லாத தீவிர நடவடிக்கை மேற்கொண்ட நிலையில், நடப்பாண்டில் இதுவரை 108 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 105 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் சமூக ஊடகங்களில் தவறான தகவல்களை உருவாக்கும் மற்றும் பரப்பும் நபர்கள்மீது நடவடிக்கைகள் மிகக் கடுமையாக, எந்தவித சமரசமும் இல்லாமல் மேற்கொள்ளப்படும் என்பதை காவல்துறை வலியுறுத்துகிறது. திருநெல்வேலி மாவட்ட காவல்துறை, சமூக ஒற்றுமை மற்றும் பொது அமைதியை நிலைநிறுத்தும் நோக்குடன், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கண்காணிப்பு மற்றும் உரிய சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.80 லட்சம் மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல்: 2 பேர் கைது




தூத்துக்குடி, அக்.4:

ஆத்தூர், புல்லாவெளி கடற்கரைப் பகுதியில் இருந்து இலங்கைக்கு பீடி இலைகள் கடத்துவதாக தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜய் அனிதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜய் அனிதாவுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சப்-இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் ராமர், ஏட்டுகள் இருதயராஜ்குமார், இசக்கிமுத்து, காவலர்கள் பழனி பாலமுருகன், பேச்சிராஜா ஆகியோர் தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட புல்லாவெளி கடற்கரைப் பகுதியில் அதிகாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது புல்லாவெளியில் இருந்து கடற்கரைக்கு செல்லும் வழியில் இலங்கைக்கு கடத்து வதற்காக ஒரு மினி லோடு வண்டியில் கொண்டு வந்த சுமார் 30 கிலோ எடை கொண்ட 42 மூட்டைகள் பீடி இலைகளும், மற்றொரு மினி லோடு வண்டியில் கொண்டு வந்த சுமார் 30 கிலோ எடை கொண்ட 41 மூட்டைகள் பீடி இலைகளும் (மொத்தம் 83 மூட்டைகள் பீடி இலைகள்) கியூ பிரிவு போலீசாரால் கைப்பற்ற ப்பட்டுள்ளது.

மேலும் அந்த லோடு வண்டிகளின் ஓட்டுநர்களான முள்ளக்காடு, காந்திநகரைச் சேர்ந்த அய்யம்பாண்டி மகன் மதியழகன் (வயது 39), திருச்செந்தூர், வெள்ளாளன்விளை, சர்ச் தெருவைச் சேர்ந்த இஸ்ரவேல் மகன் விஷ்பன்ராஜ் பெபின்(29) ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். கைப்பற்றப்பட்டுள்ள பீடி இலைகளின் மொத்த மதிப்பு ரூ.80 லட்சம் இருக்கும் என போலீசார் தெரிவித்தனர்.

# தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

## மின்னல்கள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒரு ரகம்!

மின்னல் வானில் நிகழும் ஒரு அற்புதம். மழைக்காலங்களில் நடக்கும் வாண வேடிக்கை. மின்னல்களில் பலவகை உண்டு. அவை என்னவென்பதை பார்ப்போமா?

1. CG என்று அழைக்கப்படும் Cloud to Ground அதாவது மேகத்திலிருந்து பூமிக்கு பாயும் மின்னல். இது தான் அதிகமாக நிகழும் மின்னல். அதுமட்டுமல்ல மிகவும் அழிவு ஏற்படுத்தக் கூடிய மின்னலும் இதுவே. இந்த வகை மின்னலின் போது மின்சார சக்தி மேகத்திலிருந்து தரைக்கு பாய்கிறது. இந்த வகை மின்னல்கள் தான் மரங்களையும் மனிதர்கள் மற்றும் விலங்குகளை தாக்கிக் கொல்கிறது.

2. IC என்று அழைக்கப்படும் Intra Cloud Lightning . இவ்வகை மின்னல் ஒரு மேக வங்கிகுள்ளேயே (கிளவுட் பேங்க் ) ஏற்படும் மின்னலாகும். இதை 'SHEET மின்னல்' என்றும் அழைப்பார்கள். ஒரு மேகத்துக்குள்ளேயே மின்னோட்டங்கள் பிரிந்து பிரிந்து சேர்வதால் உண்டாகும் மின்னல் தான் இது. 3. CC மேகத்துக்கு மேகம் தாவும் Cloud to Cloud மின்னல் ஒரு மேகத்திற்கும் மற்றோரு மேகத்திற்கும் இடையே நடக்கும் எலெக்ட்ரிக்கல் சார்ஜ் பரிமாற்றம் தான் இவ்வகை மின்னல் ஏற்படுவதற்கு காரணம். இவ்வகை மின்னல்கள் விமானத்திற்கு ஆபத்து விளைவிக்க கூடியதாகும். 4. Heat மின்னல் என்று அழைக்கப்படும் மின்னல். இவ்வகை மின்னல்கள் தூரத்தில் பளிச் பளிச் என்று மின்னும். ஆனால், அதன் இடி ஓசை நம் காதுகளுக்கு வந்து சேராது.

5. Bolt From The Blue மின்னல் இந்த வகை மின்னல் மிகவும் அரிதாக தான் தோன்றும், தலைக்குமேல் மேகம் ஒன்றும் இல்லாத போதும் மின்னல் தாக்கும். இது உண்டாகும் விதம் மிகவும் ஆச்சர்யமான நிகழ்வு.

இந்த வகை மின்னல் வெகுதூரத்தில் வெகு உயரத்தில் உண்டாகி செங்குத்தாக பூமியை நோக்கி பாயாமல் கிடைமட்டமாக அதாவது ஹாரிசாண்டலாக வெகு தூரம் வானில் பயணம் செய்து மழை மேகமில்லாத இடத்தை தாக்கும். 'நீல வானத்திலிருந்து விழுந்த இடி' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

## கட்டுமான பொருளாகும் கழிவு

உலகஅளவில் அலுமினியத்தின் தேவை ஆண்டுதோறும் அதிகரித்து வரு கிறது. இதன் உற்பத்திக்காக பாக்ஸைட் தாதுக்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. இந்தத் தாதுக்களில் அலுமினியத்துடன் சிலிக்கா, இரும்பு, டைட்டானியம் ஆக்சைட் ஆகியவை இருக்கும். இவற்றிலிருந்து அலுமினியம் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு மீதி இருக்கும் கழிவுகள் 'ரெட் மட்' எனப்படும். ஒரு டன் அலுமினியம் உற்பத்திசெய்யும்போது, இரண்டுடன் 'ரெட் மட்' உற்பத்தி ஆகிறது. இதில் ஆபத்தான கன உலோகங்கள் இருக்கும். இதன் காரத்தன்மையும் அதிகம். இவற்றை அப்படியே மண்ணில் புதைப்பதால் சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கிறது. எனவே இதற்கு சரியான தீர்வு காண விஞ்ஞானிகள் முயன்று வந்தனர்.

சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள ரைஸ் பல்கலை ஆய்வாளர்கள் இதற்கு ஓர் எளிய தீர்வைக் கண்டுள்ளனர். அதாவது 'ப்ளாஸ் ஜூல் ஹீட்டிங்' எனும் முறையைக் கையாண்டு, 'ரெட் மட்' மீது மின்னல் போன்ற செயற்கையான அதீத மின் அதிர்வை 60 நொடிகளுக்குப் பாய்ச்சினர். அதன் விளைவாக ஆபத்தான உலோகங்கள் ஆவியாகி, அலுமினியம் மிகுந்த மண் மட்டும் தனியாகக் கிடைத்தது.

இதிலிருந்து மற்றொரு முறை அலுமினியம், இரும்பை உற்பத்தி செய்யலாம். இந்த மண்ணை கட்டுமானப் பொருளாகப் பயன் படுத்தலாம். ஒவ்வோர் ஆண்டும் பல ஆயிரம் டன் உற்பத்தியாகும் 'ரெட் மட்'டைச் சரியாகப் பயன்படுத்துவதன் வாயிலாகச் சுற்றுச்சூழல் பாதிப்புகளைப் பல வகைகளில் குறைக்க இயலும்.

இதே போல் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வெளியாகும் கழிவுப் பொருளையும் மறுசுழற்சி, மறுபயன்பாடு செய்தால் பூமியைப் பசுமை ஆக்கலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் அன்புக்கரங்கள் திட்டத்தில் பயன்பெற்ற குழந்தைகள்: முதலமைச்சர் ஸ்டாலினுக்கு நன்றி

சென்னை, அக்.4:

தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டத்தை கடந்த (15.9.2025) தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் ஒரு அங்கமான குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகம், இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-இன் கீழ் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்விற்காக நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா சேவைகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் "தாயுமானவர் திட்டம்" அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உலகளாவிய சகோதரத்துவம் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலையில் பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர, "அன்புக்கரங்கள்" என்ற திட்டத்தின் மூலம் மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை தொடர்ந்து, "அன்புக்கரங்கள்" திட்டத்தை செயல்படுத்த கைப்பேசி செயலி (MOBILE APP) உருவாக்கப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட விவரங்கள், மக்கள் குறைத்தீர்க்கும் நாள், உங்களுடன் ஸ்டாலின் முகாம், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரிடம் பெறப்பட்ட விண்ணப்பங்களை கள ஆய்வு செய்து முதற்கட்டமாக 6,082 குழந்தைகள் தமிழ்நாடு அரசின் நிதி உதவியினை மாதம் தோறும் பெற உள்ளனர்.

# திண்டிவனம் வளர்ச்சித் திட்டப் பணிகள்: கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆய்வு





விழுப்புரம், அக்.4:

திண்டிவனம் வட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

திண்டிவனத்தில், ரூ.66.89 கோடி மதிப்பீட்டில், புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனையில், மருத்துவமனை கட்டுமானப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, தற்பொழுதுவரை நிறைவுபெற்றுள்ள பணிகள் குறித்தும், மருத்துவமனையில் அமையப்படவுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

திண்டிவனத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் 6 ஏக்கர் பரப்பளவில் புதிய பேருந்து நிலையம் கட்டுமானப்பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட சலவாதி ரோட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திண்டிவனம் நகராட்சிக்கு ட்பட்ட 10-வது வார்டில் வகைஜர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் மல்லாண்குட்டை குளத்தினை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மல்லாண்குட்டை குளத்தின் கரைகளை பலப்படுத்தி நடைபாதை அமைத்து சுற்றிலும் கம்பி வேலி அமைக்கப்பட்டு மின் விளக்குகள் அமைக்கப்படவுள்ளது. விரைவில் இப்பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து ஜக்காம்பேட்டை ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஏரிக்கரையை பலப்படுத்தி கலிங்கல் புனரமைத்து மதகு பராமரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் வி-சாலை ஊராட்சியில் முருகன் கோயில் பகுதியில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.2.72 இலட்சம் மதிப்பீட்டில் குடியிருப்பு வீடு கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) லதா, தலைமை மருத்துவர் முரளிஸ்ரீ, உதவி செயற்பொறியாளர் கற்பகம், உதவிபொறியாளர் ஜெயபால், நகராட்சி ஆணையர் சரவணன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி, உதவி பொறியாளர் (நீர்வளத்துறை) மோகன்ராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிரேமலதா, உட்பட பலர் உள்ளனர்.

# இந்திய ஜனநாயக கட்டமைப்பை முழுமையாக தாக்கி வருகிறது பாஜக: கொலம்பியாவில் ராகுல் காந்தி பேச்சு

**கொலம்பியா, அக்.4:**



"இந்தியாவின் ஜனநாயகக் கட்டமைப்பை முழுமையாக தாக்கி வருகிறது ஆளும் பாஜக" என்று கொலம்பியாவில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி பேசினார்.

கொலம்பியாவில் உள்ள இஐஏ பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடம் உரையாற்றிய ராகுல் காந்தி, "இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் இடையிலான உரையாடல் தேவை. அதேபோல, இந்தியாவில் வெவ்வேறு மரபுகள், மதங்கள், கருத்துகளுக்கும் இடம் தேவை. அந்த இடத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழி ஜனநாயக அமைப்புதான். தற்போது, ஆளும் பாஜக அரசில் ஜனநாயக அமைப்பின் மீது முழுமையாக தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்தியாவில் நடைபெறும் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்தான் மிகப் பெரிய ஆபத்து.

சீனா செய்வதை நாங்கள் செய்ய முடியாது. அந்த நாடு மக்களை அடக்கி ஒரு சர்வாதிகார அமைப்பை நடத்துகிறது. எங்கள் நாட்டின் அமைப்பு அதை ஏற்றுக்கொள்ளாது. 2016-இல் பாஜக அரசாங்கத்தின் பணமதிப்பிழப்பு கொள்கை மிகப் பெரிய தோல்வியடைந்தது. கருப்பு பணத்தை ஒழித்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் அவர்கள் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். கொள்கையாக அது தோல்வியை தழுவியது.

அதிகாரப் பரவலாக்கல்தான் ஊழலை ஒழிப்பதற்கான ஒரு பயனுள்ள வழி. ஆனால், இந்தியாவில் ஆளும் பாஜக அரசாங்கத்தில் பரவலான ஊழல் உள்ளது. இந்தியாவில், இப்போது மிகவும் மையப்படுத்தப்பட்ட மட்டத்தில் மிகப் பெரிய அளவிலான ஊழல் உள்ளது. பிரதமருடன் நேரடி உறவைக் கொண்ட மூன்று, நான்கு வணிகங்கள் முழு பொருளாதாரத்தையும் கைப்பற்றுகின்றன.

# விளையாட்டு செய்திகள்

## எறிப்பந்து போட்டியில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹைடெக் கல்லூரி மாணவர்கள் முதலிடம்

**ஈரோடு, அக்.4:**


ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள ஒத்தகுதிரை ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹைடெக் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் விளையாட்டு போட்டிகளில் இமாலய சாதனை படைத்துள்ளனர்.

ஐபிஏஏ இன் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) எம்ஏஎம் பாலிடெக்னிக் கல்லூரி திருச்சியில் நடைபெற்று வருகின்றது. அதில் ஆண்களுக்கான எறிபந்து போட்டியில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹைடெக் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பிடித்து இமாலய சாதனை புரிந்தனர்.

இந்த பெருமைக்குரிய வெற்றிக்குழுவினருக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் தலைமை செயல் அதிகாரி ஜி.கௌதம், கல்லூரி முதல்வர் எஸ்.பிரகதீஸ்வரன், துணை முதல்வர் பி.மணி, அனைத்து துறை தலைவர்கள், இருபால் ஆசிரியர்கள், உடற் கல்வி இயக்குனர் என்.பிரபாகரன், மாணவ மாணவிகள் அனைவரும் வாழ்த்துகளை தெரிவித்து பரிசுக் கோப்பைகளும் பாராட்டு சான்றிதழும் வழங்கி கௌரவித்தனர்.

இந்த சாதனையானது வெங்கடேஸ்வர ஹைடெக் பாலிடெக்னிக் கல்லூரியின் விளையாட்டு துறையின் உயர்ந்த தரத்தையும், மாணவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியின் விளைவையும் காட்டும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது.

## 'நான் வரேன்' - இந்திய பயணத்தை உறுதி செய்த மெஸ்ஸி!



**சென்னை, அக்.4:**

கால்பந்து விளையாட்டு உலகின் நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்ஸி இந்தியா வருவதை உறுதி செய்துள்ளார். இந்த பயணத்தை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

"இந்திய சிறப்பு மிக்க நாடு. 14 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு வந்த போது நான் கண்ட அனுபவம் என் நினைவுகளில் உள்ளது. இந்திய ரசிகர்கள் அற்புதமானவர்கள். கால்பந்து விளையாட்டு மீது அதிக ஆர்வம் கொண்ட நாடு இந்தியா. இந்த முறை எனது ஆட்டத்தை நேசிக்கும் அடுத்த தலைமுறை ரசிகர்களை சந்திக்க ஆவலுடன் உள்ளேன். இந்த பயணம் எனக்கு மதிப்பளிக்கிறது" என மெஸ்ஸி தரப்பில் அறிக்கை வெளியாகி உள்ளது. அடுத்த மாதம் (நவம்பர்) கேரள மாநிலத்தில் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா கால்பந்து அணி, நட்பு ரீதியான போட்டியில் விளையாடுவது உறுதி ஆகியுள்ளது. இதனை அந்த அணியின் நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த சூழலில் தனது இந்திய பயணத்தை மெஸ்ஸி உறுதி செய்துள்ளார்.

இந்த போட்டி மட்டுமல்லாது டிசம்பர் மாதம் கொல்கத்தா, மும்பை, அகமதாபாத், டெல்லி உள்ளிட்ட 4 இந்திய நகரங்களில் பிரத்யேகமாக நடைபெறும் நிகழ்வுகளில் மெஸ்ஸி பங்கேற்க உள்ளதாகவும் தகவல். இதில் கொல்கத்தாவில் 70 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலையை திறந்து வைக்கிறார். இதோடு முக்கிய பிரபலங்களை சந்திக்க உள்ளார்.

## தபால் தலை, 100 ரூபாய் நாணயம் வெளியீடு: பினராயி விமர்சனம்

**கண்ணூர், அக்.4:**

ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு விழாவை தபால் தலை மற்றும் 100 ரூபாய் நாணயத்துடன் நினைவுகூர்வது நமது அரசியலமைப்பிற்கு எதிரான மிகப்பெரிய அவமானமாகும் என கேரள முதல்வர் பினராயி விஜயன் விமர்சித்துள்ளார். மேலும், இஸ்ரேலில் உள்ள யூதர்களும், இந்தியாவில் உள்ள ஆர்எஸ்எஸ் தொண்டர்களும் இரட்டை சகோதரர்கள் என அவர் கடுமையான விமர்சனத்தையும் முன்வைத்துள்ளார்.

கண்ணூரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பினராயி விஜயன், "இஸ்ரேலில் உள்ள யூதர்களும் இந்தியாவில் ஆர்எஸ்எஸ்ஸூம் இரட்டை சகோதரர்கள். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் பணிவான ஊழியர். ட்ரம்ப் நிர்வாகம் இந்திய குடிமக்களை கைவிலங்குகள் போட்டு கொண்டு வந்தபோது அல்லது விசா கட்டணங்களை அதிகரித்தபோது மோடி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இதே ஒரு சுயமரியாதை கொண்ட தேசமாக இருந்தால், ரத்தம் ஓடும். ஆனால் பணிவான ஊழியர்களாக மாறும் ஆட்சியாளர்களை நாம் கொண்டிருக்கிறோம்." என்றார்

முன்னதாக, கேரள முதல்வர் பினராயி விஜயன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு விழாவை தபால் தலை மற்றும் 100 ரூபாய் நாணயத்துடன் நினைவுகூர்வது நமது அரசியலமைப்பிற்கு எதிரான மிகப்பெரிய அவமானமாகும். சுதந்திரப் போராட்டத்தில் இருந்து விலகி, காலனித்துவ ஆட்சியாளர்களுடன் இணைந்து கொண்டு ஒரு பிளவுபடுத்தும் சித்தாந்தத்தை ஊக்குவித்த ஓர் அமைப்பை இது நியாயப்படுத்துகிறது. இந்த தேசிய மரியாதை நமது உண்மையான சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்கள் கற்பனை செய்த மதச்சார்பற்ற, ஒருங்கிணைந்த இந்தியாவின் நினைவின் மீதான நேரடித் தாக்குதலாகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

## 4 பேர் உயிரிழப்பு, பாஜக அலுவலகம் சூறை: லடாக் வன்முறை குறித்து நீதித்துறை விசாரணைக்கு உத்தரவு



**லே, அக்.4:**

செப்டம்பர் 24 அன்று லே நகரில் நடந்த வன்முறை போராட்டம் மற்றும் நான்கு பேர் உயிரிழந்தது குறித்த நீதித்துறை விசாரணைக்கு நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

லடாக் பகுதிக்கு மாநில அந்தஸ்தும் அரசியலமைப்பு சட்டத்தின் 6-வது அட்டவணையில் லடாக்கை சேர்க்க வலியுறுத்தியும் பருவநிலை செயற்பாட்டாளர் சோனம் வாங்சுக் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார். அவரது போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில் லடாக்கில் செப்டம்பர் 24 அன்று முழு அடைப்பு போராட்டத்துக்கு 'லே அபெக்ஸ் பாடி' என்ற அமைப்பின் இளைஞர் அணி அழைப்பு விடுத்தது.

செப்டம்பர் 24 அன்று லே நகரில் திரண்ட போராட்டக்காரர்கள் அங்குள்ள லடாக் மலைப்பகுதி மேம்பாட்டு தன்னாட்சி கவுன்சில் அலுவலகம் மற்றும் பாஜக அலுவலகம் மீது தாக்குதல் நடத்தினர். மேலும் போலீஸார் மீது கற்களை வீசிய அவர்கள், சிஆர்பிஎப் வேன் உட்பட பல வாகனங்களுக்கு தீவைத்து எரித்தனர். இதையடுத்து போலீஸார் தடியடி நடத்தியும் கண்ணீர் புகைகுண்டுகளை வீசியும் வன்முறையாளர்களை விரட்டினர். இந்த கலவரத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

செப்டம்பர் 24 அன்று லே நகரில் நடந்த வன்முறை போராட்டம் மற்றும் நான்கு பேர் உயிரிழந்தது குறித்த நீதித்துறை விசாரணைக்கு நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்த விசாரணைக்கு நுப்ராவின் துணைப்பிரிவு மாஜிஸ்திரேட் ஐஏஎஸ் அதிகாரி முகுல் பெனிவால் தலைமை தாங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறைக்கான காரணங்கள் குறித்த விசாரணை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நடத்தப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

இந்த விசாரணை அறிக்கை நான்கு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும் என்றும், சம்பவம் தொடர்பான தகவல் உள்ள நபர்கள் அக்டோபர் 4 முதல் 18 வரை விசாரணை அதிகாரியிடம் தானாக முன்வந்து அறிக்கை அல்லது ஆதாரத்தை சமர்ப்பிக்குமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

லே நகரில் செப்டம்பர் 24, 2025 அன்று வன்முறை போராட்டங்களின் போது போலீஸ் நடவடிக்கையில் கொல்லப்பட்ட நான்கு பேரின் மரணம் குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று சமூக அமைப்புகள் மற்றும் லே அபெக்ஸ் பாடி மற்றும் கார்கில் ஜனநாயகக் கூட்டணி வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வடமாநிலங்களில் தசரா பண்டிகை கோலாகலம்... ராவணன் உருவ பொம்மைகளை எரித்து கொண்டாட்டம்




நாடு முழுவதும் விஜயதசமி மற்றும் தசரா பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. நாடு முழுவதும் பல்வேறு வடிவங்களில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை தொடர்புடைய பல கதைகள் இருந்தாலும், அவற்றில் மிகவும் பிரபலமானது ராமன், ராவணனை விஜயதசமியன்று வீழ்த்தி போரில் வெற்றி பெற்றார் என்பதாகும்.

இதை நினைவூட்டும் வகையில் வட இந்தியப் பகுதிகளில் இந்நாள், ராம்லீலா என்ற விழாவாக கொண்டாடப்படுகிறது. ராம பிரானின் அவதார லீலைகள் தொடர்பான கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும் இவ்விழாவின் இறுதியில் ராவண வதம் நிகழ்ச்சி நடத்தப்படும். அப்போது ராவணனின் உருவபொம்மையை எரித்து உற்சாகமாக கொண்டாடுவார்கள்.

அவ்வகையில் விஜயதசமியை முன்னிட்டு இன்று வட மாநிலங்களில் தசரா பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. ஆங்காங்கே ராம் லீலா நிகழ்ச்சிகள் நடத்தி, பிரமாண்டமான ராவண உருவ பொம்மைகளை எரித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதி அரசியல் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு ராவண உருவ பொம்மைக்கு நெருப்பூட்டும் நிகழ்வை தொடங்கி வைத்தனர். டெல்லி செங்கோட்டை மைதானத்தில் உள்ள மாதவ்தாஸ் பூங்காவில் ஸ்ரீ தர்மிக் ராம்லீலா கமிட்டி சார்பில் நடைபெற்ற தசரா நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரௌபதி முர்மு பங்கேற்றார். அப்போது, ராம் லீலா கலைஞர்களின் கலைநிகழ்ச்சியை கண்டு களித்த அவர், அம்பெய்து ராவண உருவ பொம்மையை எரியூட்டும் நிகழ்வை தொடங்கி வைத்தார். ராம் லீலா நடைபெறும் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## குஜராத்தின் சர் க்ரீக் எல்லையில் பாக். ராணுவ கட்டமைப்புகள் அதிகரிப்பு: ராஜ்நாத் சிங் எச்சரிக்கை

**பூஜ், அக்.4:**



குஜராத்தின் சர் க்ரீக்கை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தானின் சமீபத்திய ராணுவ உள்கட்டமைப்புகள் அதிகரிப்புக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

குஜராத்தின் பூஜ் பகுதியில் தசரா பண்டிகையையொட்டி பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆயுத பூஜை வழிபாடு செய்தார். அதனை தொடர்ந்து ராணுவ வீரர்களிடம் உரையாற்றிய அவர், "ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, லே முதல் சர் க்ரீக் வரை இந்தியாவின் பாதுகாப்பு அமைப்பிற்குள் ஊடுருவ பாகிஸ்தான் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இருப்பினும், பதிலடி நடவடிக்கையில், இந்தியப் படைகள் பாகிஸ்தான் வான் பாதுகாப்பு அமைப்பை முழுமையாக உடைத்து தாக்கின. இதன் மூலமாக இந்தியப் படைகள் எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் பாகிஸ்தானுக்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்த முடியும் என்ற செய்தியை உலகிற்கு அனுப்பியது.

போரை விரிவுபடுத்துவதும், போரைத் தொடங்குவதும் ஆபரேஷன் சிந்தூரின் நோக்கம் அல்ல. இந்தியப் படைகள் ஆபரேஷன் சிந்தூரின் அனைத்து ராணுவ நோக்கங்களையும் வெற்றிகரமாக அடைந்துவிட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் பயங்கரவாதத்திற்கு எதிரான நமது போராட்டம் தொடர்கிறது.

1965 போரில், இந்திய ராணுவம் லாகூரை அடையும் திறனை நிரூபித்தது. இன்று 2025-ல், நமது ராணுவத்தால் கராச்சி வரை செல்ல முடியும் என்பதை பாகிஸ்தானுக்கு நினைவூட்டியுள்ளோம். உங்கள் அனைவரின் துணிச்சலும், உங்கள் அனைவரின் வீரமும் இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் தொடர்ந்து பாதுகாக்கும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

இந்தியாவின் வலிமையின் மூன்று தூண்கள். ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஆகும். இந்த மூன்று சேவைகளும் ஒன்றிணைந்து செயல்படும்போதுதான், ஒவ்வொரு சவாலையும் நாம் திறம்பட எதிர்கொள்ள முடியும்.

சர் க்ரீக் பகுதியில் பாகிஸ்தானின் எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் வரலாறு மற்றும் புவியியல் இரண்டையும் மாற்றும் ஒரு வலுவான பதிலடி வழங்கப்படும். சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகள் ஆன போதிலும், சர் க்ரீக் பகுதியில் எல்லைப் பிரச்சினை தொடர்கிறது. பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா பலமுறை முயற்சித்துள்ளது, ஆனால் பாகிஸ்தானின் நோக்கங்கள் குறைபாடுடையவை மற்றும் தெளிவற்றவை" என்று தெரிவித்தார்.

சர் க்ரீக் என்பது குஜராத்தின் ரான் ஆஃப் கட்ச் மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே உள்ள 96 கி.மீ நீளமுள்ள ஒரு அலை முகத்துவார பகுதியாகும். கடல் எல்லைக் கோடுகள் குறித்து இரு தரப்பினரும் இடையே முரண்பாடுகள் நிலவுவதால், இது ஒரு சர்ச்சைக்குரிய பகுதியாகக் கருதப்படுகிறது.

# கட்டாய விடுப்பில் அமெரிக்க அரசு ஊழியர்கள்: முடங்கியது அமெரிக்காவின் அரசு நிர்வாகம்!



**வாஷிங்டன், அக்.4:**

அமெரிக்காவில், அடுத்த நிதியாண்டிற்கான அரசின் செலவினங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இடைக்கால நிதி மசோதா தாக்கல் செய்யப்படுவது வழக்கம். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, அமெரிக்க அரசால் செலவினங்களை தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பது எழுதப்பட்ட விதி. அமெரிக்காவின் மேல்சபையான செனட், செலவினங்கள் தொடர்பான இடைக்கால நிதி மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காத காரணத்தால், அரசு இயந்திரம் முடங்கிப்போய் உள்ளது.

செனட்டில், மொத்தம் 100 உறுப்பினர்கள் உள்ள நிலையில், டிரம்பின் குடியரசுக் கட்சிக்கு 53 எம்பிக்களும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு 45 எம்பிக்களும் உள்ளனர். சுயேச்சை எம்பிக்கள் இருவர் உள்ளனர். நிதி மசோதாவை நிறைவேற்றக் குறைந்தபட்சம் 60 வாக்குகள் தேவை என்ற நிலையில், செனட்டில் அண்மையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் இடைக்கால மசோதாவுக்கு ஆதரவாக 55 வாக்குகளும், எதிராக 45 வாக்குகளும் பதிவாகின. எனினும், ஜனநாயகக் கட்சியினர் எதிர்ப்பு காரணமாக நிதி மசோதா நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனால், அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் ஊழியர்களை தவிர, மற்ற அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் வீட்டிற்கு அனுப்பப்படும் சூழல் உருவாகியுள்ளது. ஏழு லட்சத்து 50 லட்சம் அரசு ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி தடைபடுவதோடு, நாள் ஒன்றுக்கு அரசுக்கு மூவாயிரத்து 300 கோடி இழப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி பற்றாக்குறையால், பிரபலமான கிராண்ட் கேன்யன் உள்பட அமெரிக்கா முழுவதும் 433 தேசிய பூங்காக்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது நாடு முழுவதும் சுற்றுலா துறையை பாதிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் சில மாகாணங்கள் பொருளாதார தேவையை பூர்த்தி செய்யும் சில தேசிய பூங்காக்களை இக்கட்டான நிலையிலும் நடத்துவற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளன.

தேசிய பூங்காக்கள் மூடப்படுமாயின், பார்வையாளர்கள், சுற்றுலா பயணிகளை நம்பியுள்ள ஹோட்டல்கள், உணவகங்கள், வணிக ரீதியான நிறுவனங்கள், போக்குவரத்து என அனைத்தும் இழப்பை சந்திக்கும். CBS செய்தியின்படி அவ்வாறு நடக்கும் பட்சத்தில் அமெரிக்கா வாரத்தில் ஒரு பில்லியன் டாலர்கள் இழப்பை சந்திக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளது. விமான நிலையங்கள் திறந்திருக்கும் என்றாலும் நெருக்கடியை தவிர்க்க இயலாது.

நிதி பற்றாக்குறையால், ஆயிரக்கணக்கான FAA ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படலாம் என்றும், பல விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் ஊழியர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய நேரிடும் என்றும் போக்குவரத்துத்துறை கூறியுள்ளது. அதேநேரத்தில், 21 அருங்காட்சியகங்கள் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலையை மேற்பார்வையிடும் ஸ்மித்சோனியன் நிறுவனம், அருங்காட்சியகங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் மிருகக்காட்சிசாலையை குறைந்தது அக்டோபர் 6ம் தேதி வரை திறந்திருக்க முந்தைய ஆண்டு நிதியைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளது.

அமெரிக்க அரசு நிர்வாகம் முடக்கம், பொதுமக்களை மட்டுமல்ல, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2018ம் ஆண்டு டிரம்பின் ஆட்சி காலத்தில், செலவின மசோதா தோல்வி அடைந்த காரணத்தினால், 35 நாட்கள் அமெரிக்க நிர்வாகம் முடங்கியது. கடந்த 2013ம் ஆண்டு ஒபாமா நிர்வாகத்தில் செலவின மசோதா தோல்வி அடைந்த காரணத்தினால் 16 நாட்கள் நிர்வாகம் முடங்கியது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் தொடர் மழை, வெள்ளம்; பலி எண்ணிக்கை 1006 ஆக உயர்வு

**லாகூர், அக்.4:**

பாகிஸ்தானில் நடப்பு ஆண்டில் தொடர் மழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், நாடு முழுவதும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 1006 ஆக உயர்ந்து உள்ளது.



இதுபற்றி அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண் கழகம் (என்.டி.எம்.ஏ.) வெளியிட்டு உள்ள செய்தியில், பாகிஸ்தானில் கனமழை பெய்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கைபர் பக்துன்குவா, பஞ்சாப், சிந்த் மற்றும் கில்ஜித்-பல்திஸ்தான் மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

இவற்றில், கைபர் பக்துன்குவா மாகாணத்தில் வெள்ள பாதிப்பில் சிக்கி 504 பேர் உயிரிழந்து உள்ளனர். பஞ்சாப் மாகாணத்தில் 304 பேரும், சிந்த் மாகாணத்தில் 80 பேரும் கில்ஜித்-பல்திஸ்தான் மாகாணத்தில் 41 பேரும் உயிரிழந்தனர். ஒட்டு மொத்தத்தில் 275 குழந்தைகள், 163 பெண்கள் மற்றும் 568 ஆண்கள் உயிரிழந்து உள்ளனர்.

இதனை தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகள் நடந்து வருகின்றன. வெள்ள பாதிப்பு நிலவரங்களை ஆய்வு செய்யும் பணியும் நடந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நாட்டில் பணவீக்கம் தற்காலிக அடிப்படையில், அதிகரித்து காணப்படும் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்து உள்ளது.

# சீன அதிபரை 4 வாரங்களில் நேரில் சந்தித்து பேசுவேன்; டிரம்ப் அறிவிப்பு



அமெரிக்காவின் சோயா பீன்ஸ் விவசாயிகளின் விவகாரம் பற்றி ஜின்பிங்குடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு பதவியேற்றது முதல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். சீனா, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு கூடுதல் வரிகளையும் விதித்து வருகிறார்.

இந்நிலையில், சீன அதிபர் ஜி ஜின்பிங்கை இன்னும் 4 வாரங்களில் நேரில் சந்தித்து பேசுவேன் என டிரம்ப் கூறினார். இந்த சந்திப்பில், அமெரிக்காவின் சோயா பீன்ஸ் விவசாயிகளின் விவகாரம் பற்றி முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் சோயா பீன்ஸ்களை சீன அரசு வாங்க மறுக்கிறது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். எங்களுக்கு வரி விதிப்புகளால் நிறைய பணம் கிடைத்திருக்கிறது.

அதில் சிறியதொரு தொகையை எடுத்து விவசாயிகளுக்கு கொடுத்து உதவுவோம். எங்களுடைய விவசாயிகளை நாங்கள் ஒருபோதும் கைவிடமாட்டோம் என்று அவருடைய ட்ரூத் சோசியல் சமூக ஊடகத்தில் டிரம்ப் பதிவிட்டு உள்ளார்.

# எத்தியோப்பியா: தேவாலயத்தில் கட்டடம் இடிந்து விழுந்து விபத்து; 36 பேர் பலி

**அம்ஹாரா, அக்.4:**

தேவாலயத்தில் உள்ள கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது.



எத்தியோப்பியாவின் அம்ஹாரா பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் கட்டுமான பணி நடந்து வருகிறது. இந்த தேவாலயத்தில் அதிகாலை நேரத்தில் வழிபாடு நடத்த மக்கள் கூடியிருந்தனர். இந்தநிலையில் திடீரென கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 36 பேர் பலியாகினர். மேலும் 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இந்த விபத்தை நேரில் பார்த்த மகியாஸ் என்பவர் கூறியதாவது: நாங்கள் அனைவரும் பிரார்த்தனை செய்ய கூடியிருந்தோம்.

அப்போது திடீரென தேவாலயத்தில் கட்டுமான பணி நடந்து ஒரு பகுதி இடிந்து விழுந்தது என்றார்.

# ரஷ்ய நட்பு நாடுகளுக்கு ஜி-7 கூட்டமைப்பு மிரட்டல்

ரஷ்யாவிடம் பொருளாதார உறவுகளை கொண்டுள்ள நட்பு நாடுகளுக்கு ஜி-7 நாடுகளின் கூட்டமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. ரஷ்யாவிடம் தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்கினால் அந்நாடுகள் மீது தடை உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகளை எடுப்போம் என மிட்டல் விடுத்து ஜி-7 நாடுகள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. ரஷ்யாவின் எண்ணெய் வர்த்தகத்தை முடக்குவதற்காக அமெரிக்கா தொடர்ந்து இத்தகைய நடவடிக்கையை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நின்றுகொண்டிருந்த விமானம் மீது மோதிய மற்றொரு விமானம் - அமெரிக்காவில் பரபரப்பு



அமெரிக்க தலைநகர் நியூயார்க்கில் உள்ள லாகார்டியா விமான நிலையத்தில் இருந்து விர்ஜீனியாவுக்கு புறப்பட விமானம் ஒன்று தயாராக நின்று கொண்டிருந்தது. அப்போது வட கரோலினா மாகாணம் சார்லோட்டில் இருந்து புறப்பட்ட விமானம் லாகார்டியா விமான நிலையத்தில் தரையிறங்கியது. அப்போது அந்த விமானம் ஓடுதளத்தில் நின்று கொண்டிருந்த விமானத்தின் மீது மோதியது.

இதில், அந்த விமானத்தின் இறக்கை உடைந்து கீழே விழுந்தது. இதில் விமான பணிப்பெண்ணுக்கு காயம் ஏற்பட்டது. இதனையடுத்து விமானத்தில் இருந்த பயணிகள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். இதனால் விமான நிலையம் சிறிதுநேரம் பரபரப்பாக காணப்பட்டது. விமானம் மிக மெதுவாக நகர்ந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# இங்கிலாந்து: 3 வயது மகளை தெரிந்தே பட்டினி போட்டு கொன்ற இந்திய வம்சாவளி பெற்றோர்

**லண்டன், அக்.4:**

இங்கிலாந்து நாட்டின் ஹயேஸ் பகுதியில் பென்னைன் வேஎன்ற இடத்தில் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களான மன்பிரீத் ஜாதனா (வயது 34) மற்றும் ஜஸ்கிரெத் சிங் உப்பல் (வயது 36) வசித்து வருகின்றனர். இவர்களுடைய 3 வயது மகளான பெனலோப் சந்திரீ 2023-ம் ஆண்டு டிசம்பர் 17-ந்தேதி மாலையில் வீட்டில் உயிரிழந்து உள்ளது.

அதுபற்றி தகவல் அறிந்து சென்ற போலீசார் பெனலோப்பின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதில், ஊட்டச்சத்து குறைபாட்டால் பெனலோப் உயிரிழந்த அதிர்ச்சி தகவல் தெரிய வந்தது.

தொடர் விசாரணையில், பல மாதங்களாக பெனலோப்பை அந்த தம்பதி பட்டினியாக போட்டது தெரிய வந்தது. பல ஆண்டுகளாக நடந்து வந்த விசாரணை முடிவில், ஜாதனா மற்றும் உப்பல் தம்பதியை போலீசார் கைது செய்து கடந்த மாதம் குற்றச்சாட்டு அறிக்கையையும் பதிவு செய்தனர். 3 வயது மகளை அவர்கள் பட்டினி போட்டு கொலை செய்த குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்பட்டு உள்ளது. இது தொடர்பாக கோர்ட்டில் அடுத்த கட்ட விசாரணை நடத்தவும் முடிவாகி உள்ளது.

இதற்கான உத்தரவை நீதிபதி லின் டெய்டன் பிறப்பித்து உள்ளார். வருகிற டிசம்பர் 16-ந்தேதி கோர்ட்டில் அடுத்த கட்ட விசாரணை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பாகிஸ்தான் அரசுக்கு எதிராக போராட்டம்.. துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலி

**இஸ்லாமாபாத், அக்.4:**

வன்முறை போராட்டங்களின்போது ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் மோதல்களில் 12 பேர் பலியாகினர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ந்து மூன்றாவது நாளாக நடந்த வன்முறை போராட்டங்களின்போது ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் மோதல்களில் 12 பேர் பலியாகினர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள மக்கள், பாகிஸ்தான் அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது, அவாமி குழு என்ற அமைப்பின் தலைமையில், ஆக்கிரமிப்பு காஷ்மீரின் முசாபராபாதில் மிகப்பெரிய போராட்டம் வெடித்துள்ளது.

இதனால், அங்குள்ள சந்தைகள், கடைகள் மற்றும் உள்ளூர் வணிகங்கள் முழுமையாக மூடப்பட்டன, அத்துடன் போக்குவரத்து சேவைகளும் நிறுத்த ப்பட்டன. அப்போது நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது, பாகிஸ்தான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில், 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அவாமி அதிரடி குழு தலைமையிலான போராட்டங்கள், கடந்த 72 மணி நேரமாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை முடக்கி உள்ளன.

கடந்த வாரம் கைபர் பக்துன்க்வாவில் பாகிஸ்தான் விமானப்படை நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 30 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்த போராட்டங்கள் நடந்து வருகின்றன.

# கடல் வழியாக காசாவிற்கு நிவாரண பொருட்கள் கொண்டு சென்ற கிரேட்டா தன்பெர்க் தடுத்து நிறுத்தம்

**ஜெருசலேம், அக்.4:**

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.



இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்துள்ளது. அதேவேளை, ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களால் காசா முற்றிலும் நிலைகுலைந்துள்ளது. இதுவரை சுமார் 65 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீட்டையும், வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று பல்வேறு சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இதனிடையே, போரால் பாதிக்கப்பட்டுள்ள காசா மக்களுக்கு சர்வதேச நாடுகளில் இருந்து அனுப்பப்படும் நிவாரண உதவிகளை இஸ்ரேல் ராணுவம் தடுத்து நிறுத்தி வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனால் காசாவில் மோசமான பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில், சுவீடன் நாட்டை சேர்ந்த இளம் சுற்றுச்சூழல் ஆர்வலரான கிரேட்டா தன்பெர்க், கடல்வழியாக நிவாரண பொருட்கள் அடங்கிய கப்பலில் காசா நோக்கி பயணம் மேற்கொண்டார். அவருடன் அமெரிக்க நடிகை சூசன் சாரண்டன் மற்றும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சுமார் 40 படகுகளில் சென்றனர்.

அவர்களது படகுகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடல் எல்லைக்குள் நுழைந்தபோது, இஸ்ரேல் கடற்படையினர் அங்கு விரைந்து சென்று கிரேட்டா தன்பெர்க் மற்றும் அவரது குழுவினரை தடுத்து நிறுத்தினர்.

அவர்கள் கொண்டு வந்த நிவாரண பொருட்களை பறிமுதல் செய்த இஸ்ரேல் கடற்படையினர், கிரேட்டா தன்பெர்க் மற்றும் குழுவினரை இஸ்ரேலில் உள்ள அஷோத் துறைமுகத்திற்கு கொண்டு சென்றனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், விரைவில் அனைவரும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.